

ஆசிரியர் உரை

# கிறிஸ்தவ ஆராதனையில் இசைக்கருவிகளைப் பயன்படுத்தலாமா?
# What about Instrumental Music in Christian Worship?

Louis Rushmore

சபை கிறிஸ்துவுக்குச் சொந்தமானது (மத்தேயு 16 : 18; ரோமர் 16 : 16 ). எனவே, கிறிஸ்து எவைகளைச் செய்ய சபைக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறாரோ அதன்படி நடக்க சபை கடமைப்பட்டிருக்கிறது (கொலோ. 3 : 16, 17). இன்று, சுவிசேஷ காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிற நாம் இயேசு கிறிஸ்துவின் கட்டளைகளுக்குத்தான் கீழ்ப்படிய வேண்டுமே தவிர மோசேயின் பிரமாணங்களுக்கோ அல்லது பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளுக்கோ அல்ல, மாறாக இவர் என்னுடைய நேச குமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன் என்று சொன்னபோது இதை வலியுறுத்தினார் (மத்தேயு 17 : 1 - 5). மறுரூபமலையில் மோசே (பழைய ஏற்பாட்டில் நியாயப்பிரமாணத்தைக் கொடுத்தவர்) எலியா (பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளுக்கு முன்னோடியாக இருந்தவர்) போன்றோரும் இருந்தனர் என்பதை நினைவில் கொள்ளுங்கள். ஆகவே, இங்கே நாம் பார்க்கும்போது மோசேக்கும், தீர்க்கதரிசிகளுக்குமல்ல, என் குமாரனாகிய இயேசு கிறிஸ்துவுக்கே செவிகொடுங்கள் என்று திட்டவட்டமாக தேவன் கட்டளையிட்டார். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இப்பூமியில் ஊழியம் செய்த நாட்களில் இதே கருத்தை வலியுறுத்தியிருக்கிறார். என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளாதவனை நியாயந்தீர்க்கிறதொன்றிருக்கிறது. நான் சொன்ன வசனமே அவனைக் கடைசி நாளில் நியாயந்தீர்க்கும் என்று (யோவான் 12 : 48).

மேலும், புதிய பிரமாணத்தைத் தந்தவரும் (யாக். 4 : 12), புதிய ஏற்பாட்டின் மத்தியஸ்தராயிருப்பவரும் அவரே (எபி. 9 : 15). இயேசு கிறிஸ்து, தெய்வீக வெளிப்பாட்டுக்கு மாற்றாக, மனுஷருடைய கற்பனைகள் போதிக்கப்படுவதை வன்மையாகக் கண்டித்தார் (மத். 15 : 9). அப்போஸ்தலனாகிய பவுலும், மாற்று சுவிசேஷம் போதிக்கப்படுவதையும் (கலா. 1 : 6 – 9) தேவசித்தத்திற்கு மாற்றாக மனிதக் கற்பனைகள் போதிக்கப்படுவதையும் கடிந்து கொண்டார் (கொலோ. 2 : 23). கிறிஸ்தவ ஆராதனையில் இசைக் கருவிகளின் பயன்பாடு உட்பட தேவன் எவைகளை அங்கீகரித்திருக்கிறார் என்பதை அறிந்துகொள்ள ஒருவர் பிரத்யேகமாக புதிய ஏற்பாட்டிற்குத்தான் திரும்ப வேண்டும்.

ஆராதனையில் இசைக்கருவிகளைப் பயன்படுத்துவதற்கு உதாரணமாக அநேகர் இன்று பழைய ஏற்பாட்டையும், பரலோகத்தையும் பயன்படுத்துகிறார்கள். இன்றைய நாட்களில் வாழும் மக்களுக்கு, பழைய ஏற்பாட்டுக்கு மாற்றாக, புதிய ஏற்பாடு கொடுக்கப்பட்டிருக்கிறது. பழைய ஏற்பாடு எடுத்துப்போடப்பட்டு, அதாவது அதின் பிரமாணங்களும், சட்ட திட்டங்களும், கட்டுப்பாடும் கிறிஸ்துவினாலே சிலுவையில் ஆணியடிக்கப்பட்டு ஒழிக்கப்பட்டுவிட்டது (II கொரி. 3 : 6 – 11 ; எபே. 2 : 15 ; கொலோ 2 : 14). இன்று வாழும் கிறிஸ்தவர்கள் பத்து கட்டளைகள் உட்பட பழைய ஏற்பாட்டின் எல்லாக் காரியங்களிலிருந்தும் விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள் (ரோமர் 7 : 6, 7). இன்று வாழும் கிறிஸ்தவர்களுக்கு புதிய ஏற்பாடுதான் மேலான உடன்படிக்கையாயிருக்கிறது என்று இயேசு கூறுகிறார். எனவே, இன்றைய நாட்களில் அதாவது, முதல் நூற்றாண்டு சபை ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து, ஆராதனையில் இசைக்கருவிகள் பயன்படுத்துவது உட்பட ஓய்வுநாள் போன்ற பல காரியங்களுக்கு பழைய ஏற்பாட்டை உதாரணமாக எடுத்துக்கொள்வது சரியானதல்ல. அதே வேளையில், அது தேவனுடைய வார்த்தையாய் இருப்பதினாலே புதிய பிரமாணத்திற்கு நேராக நம்மை வழி நடத்தும் உபாத்தியாயிருக்கிறது என்பதைப் புரிந்துகொள்வதுதான் தேவனுடைய பார்வையில் விலையேறப் பெற்றதாகும்.

பரலோகத்தில் நடக்கப்போகிற காரியத்துக்கும், கிறிஸ்தவ காலத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை. பரலோகத்தைப் பற்றிய வசனங்கள், தேவன் கிறிஸ்தவ ஆராதனைக்காக எவைகளை அங்கீகரிக்கவில்லையோ அவைகளை நியாயப்படுத்த திரித்துக் காட்டப்படுகிறது. நியாயத்தீர்ப்பின் நாளில் ஒவ்வொருவரும் எந்தப்பிரமாணத்தின் கீழ் வாழ்ந்தார்களோ அந்தப் பிரமாணத்தின்படிதான் நியாயந்தீர்க்கப்படுவார்கள் (வெளி. 20 : 12 – 15). ஆகவே, இன்று தேவனை ஆராதிப்பதற்கு எது அங்கீகரிக்கப்பட்டிருக்கிறதோ அத்தோடு பரலோகில் இசைக்கருவிகள் வாசிக்கப்படுவதை ஒப்பிட்டுப் பேசுவது அர்த்தமற்ற ஒன்றாக இருக்கிறது. வெளிப்படுத்தின விசேஷம் உருவக நடையில் எழுதப்பட்ட ஒரு புத்தகமாகும். எனவே, இதில் பரலோகில் சுரமண்டலம் வாசிக்கப்படுவது என்பது சொல் அர்த்தரீதியாக இசைக்கருவியைக் குறிக்காது என்பதை நாம் உற்று நோக்க வேண்டியது அவசியம் (வெளி. 5 : 8; 15 : 2). மேலும், இன்றைய ஆராதனையில் இருதயத்திலிருந்து வாயினால் பக்தியுடன் பாடும்படியாகவே தேவன் அனுமதித்திருக்கிறார். அதையே அங்கீகரித்தும் இருக்கிறார்.


ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து முதல் நூற்றாண்டில் சபையை ஸ்தாபித்தபோது, ஜனங்களிடத்திலே, அதாவது அவருடைய வார்த்தையை சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டு ஞானஸ்நானம் பெற்று இரட்சிக்கப்பட்ட மக்களிடத்திலே இசைக்கருவிகள் இல்லாமல் இருந்திருக்காது. அப்படியிருக்கும் பட்சத்தில், புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவ ஆராதனையில் அக்கருவிகளைப் பயன்படுத்தும்படி அவரால் அதை அங்கீகரித்திருக்க முடியும். ஆனால், தேவன் அப்படிச் செய்யவில்லை. அதற்குச் சான்றும் இல்லை. மனித வரலாற்றின் ஆரம்பத்தில் யூபால் என்பவன் கின்னரம், நாதஸ்வரம் போன்றவற்றைக் கண்டுபிடித்தான். தாவீது ராஜா வெற்றிக்களிப்பில் இசைக்கருவிகளைப் பயன்படுத்தினார் (I நாளா. 23 : 5; II நாளா. 7 : 6; 29 : 26; ஆமோஸ் 6 : 5). ஆனால், அவர்கள் கிறிஸ்துவின் இரத்தத்தால் புதிய ஏற்பாட்டு உபதேசத்தின்படி இரட்சிக்கப்படாதவர்கள்.

முதலாம் நூற்றாண்டில், புதிய ஏற்பாட்டு உபதேசத்தின்படி ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தால் புதிய உடன்படிக்கைக்குள்ளாக பாவங்கள் கழுவப்பட்டவர்கள், சபையாகக் கூடி தேவனுக்கு ஆராதனை ஏறெடுத்தபொழுது அவர்கள் வாய்ப் பாட்டைத்தான் இசையாகப் பயன்படுத்தினர் (மத். 26 : 30; மாற்கு 14 : 26; அப். 16 : 25; ரோமர். 15 : 29; I கொரி 14 : 15; எபே. 5 : 19; கொலோ. 3 : 16; எபி. 2 : 12; யாக். 5 : 13). முதல் நூற்றாண்டு ஆராதனையில், சங்கீதங்களினாலும், ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் ஆவிக்குரிய காரியங்களுக்கான சத்தியத்தைப் போதித்திருக்கிறார்கள். இசைக் கருவிகளால் இதைச் செய்ய முடியுமா? என்பதைச் சிந்தித்துப் பாருங்கள் (கொலோ. 3 : 16). முதல் நூற்றாண்டு சபை ஆராதனையில் இசைக்கருவிகள் இல்லாமல்தான் பாடல்கள் பாடப்பட்டிருக்கிறது (எபி. 2 : 12). அதேபோல், அன்று ஆராதனைக்காக கூடிவந்த அனைவரும் எல்லா இடங்களிலும் சங்கீதத்தைத்தான் பயன்படுத்தியிருக்கிறார்கள் (யாக். 5 : 13).

புதிய ஏற்பாட்டு ஆராதனையில் எவ்விதமான இசை பயன்படுத்தப்பட்டது என்பதற்கு ஆதாரமாக உள்ள வசனங்களிலிருந்துதான் தேவன் ஆராதனையை அங்கீகரிக்கிறவராக இருக்கிறார் என்பதைப் புரிந்துகொள்வது ஒன்றும் கடினமான காரியமல்ல (மத். 26 : 30; மாற்கு 14 : 26; அப். 16 : 25; ரோமர். 15 : 9; I கொரி. 14 : 15; எபே. 5 : 19; கொலோ. 3 : 16; எபி. 2 : 12; யாக். 5 : 13). இந்த புதிய உபதேசத்தின்படி அதாவது கிறிஸ்துவின் கட்டளைப்படி ஆராதிக்கும்பொழுதே தேவன் அதை அங்கீகரித்து ஆசீர் வழங்க சித்தமுள்ளவராயிருக்கிறார் என்பதைப் புரிந்து செயல்படத் தீர்மானிப்போம். ✤

# நேபோ மலையிலிருந்து
## Lessons from Mount Nebo

E.Z.S. Rajanayagam



பரலோகத்தின் தேவனால், மனிதனுக்குக் கொடையாகக் கொடுக்கப்பட்டுள்ள பரிசுத்த வேதாகமத்தில் இடம்பெற்றுள்ள மலைகள் பல தேவனால் பயன்படுத்தப்பட்டிருக்கிறதென்பது நம் எல்லோருக்குமே தெரியும். அந்த மலைகளை நாம் உற்றுப்பார்த்தால், அவைகளிலிருந்து நாம் நமக்காச் சில பாடங்களைக் கற்றுக்கொள்ள முடியுமென்பதும் புரியும். உதாரணமாக, மோரியா மலையிலிருந்து ( ஆதி. 22:1-1-13 ) நாம் கீழ்ப்படிதலைக் கற்றுக்கொள்ள முடியும். ஒலிவ மலையிலிருந்து ( அப். 1:4-12 ) நாம் நம்பிக்கையைப் பெற்றுக்கொள்ள முடியும். மறுரூப மலை என்றழைக்கப்படும் எர்மோனிலிருந்து (மத்.17 அதி) கிறிஸ்துவின் அதிகாரத்தை அறிந்து கொள்ள முடியும்.

இந்த மலைகளின் வரிசையில் நாம் இன்னுமொரு மலையையும் சேர்க்க முடியும். அது தேவனுடைய கண்டிப்புக்கும், கறாருக்கும் அடையாளமாகத் திகழும் நேபோ மலை. முற்பிதாக்களுக்கு வாக்குத்தத்தம் செய்யப் பட்ட புண்ணிய பூமியை மோசேக்குக் காண்பிக்கும்படி தேவன் இந்த மலையைத் தான் தெரிந்து கொண்டார். கன்மலையைப் பார்த்து "பேசு" என்ற

தேவ கட்டளைக்கு மாறாக, அதை " அடித்ததினிமித்தம்" "வாக்குத்தத்தம் செய்யப்பட்ட தேசம் " மோசேக்குக் " தடை செய்யப்பட்ட தேசமாக " மாறிற்று (எண்.20:9-11).

தேவனுடைய வீட்டில் எங்கும் உண்மையாயிருந்தவனுக்கு, இப்படியொரு நிலையா என்று இப்பகுதியைப் படிக்கும்போதெல்லாம், அநேகராகிய உங்களைப் போலவே எனக்கும் மனம் பதைக்கும். மோசேக்குக் கொடுக்கப்பட்ட தண்டனையின் தன்மை, மிகக் கடுமையாக இருப்பதால், ஒருவேளை தேவன் தவறு செய்துவிட்டாரோ என்று கூட எண்ணத்தோன்றும். ஆனால், தேவன் நீதிபரர். நான்காயிரம் ஆண்டு கால சரித்திரத்தை உள்ளடக்கிய வேதாகமத்தில் ஓரிடத்தில் கூட அவர் தவறிழைத்ததாக காண முடியாது. ஆகவே, அவருடைய நீதியில் இங்கும் குறை இருந்திருக்க முடியாது.

நம்முடைய உடனடி அறிவுக்கு எட்டாத இதைப் போன்றதொரு சம்பவம் புதிய ஏற்பாட்டிலும் உண்டு. நம்முடைய இரட்சகராகிய இயேசு கிறிஸ்து, பிறவிக் குருடனை சுகமாக்கின சம்பவம் அது ( யோவான் 9 : 6,7 ). பிறவிக் குருடனாயிருந்து ஓர் எட்டு எடுத்து வைப்பதற்குத் தடுமாறும் ஒருவனுயை முகத்தில் உமிழ்நீரினால் உண்டாக்கிய சேற்றைப் பூசி, கொஞ்ச தூரத்திலுள்ள சீலோவாம் குளத்தில் போய்க் கழுவு என்று இயேசு கட்டளையிடுகிறார். இங்கும் கூட நமதாண்டவரின் செயல் நம்முடைய அறிவோடு சண்டையிடுகிறதாகவே இருக்கும்.

சரி, மோசேக்குத் தரப்பட்ட "அனுமதிமறுப்பு" அப்பகுதியை வாசிக்கின்ற நமக்கே கணக்கில்லா கவலையைக் கொடுக்கிறதென்றால், அது மோசேக்கு எப்படியிருந்திருக்குமென்று அப்படியே கொஞ்சம் கற்பனை செய்து பாருங்கள். வணங்காக் கழுத்துள்ள ஜனங்களை வழிநடத்துவதற்கு அவன்பட்ட பாடுகள் என்ன கொஞ்சமா, நஞ்சமா? தன்னுடைய நாற்பதாண்டு கால அனுபவங்களையெல்லாம் தன் எண்ணங்களிலே தேக்கி,நெஞ்சிலே சுமந்து, அய்யோ, இப்படியாகி விட்டதே என்று கலங்கி, சோகமே உருவெடுத்து, அந்த நேபோ மலையிலே நின்ற காட்சியை எடுத்துரைக்க என்னிடத்தில் வார்த்தைகள் இல்லை. அதை உங்கள் கற்பனைக்கே விட்டுவிடுகிறேன்.

அங்கே தேவன் நேபோ மலையிலிருந்து,பாலும் தேனும் ஓடுகிற கானான் தேசத்தைத் தொய்ந்து போன நிலையிலிருந்த மோசேக்குக் காட்டினபோது, ஒருவேளை அவன் தன் புறக் கண்களால் அந்த அழகிய கானானைக் கண்டு சற்று ஆறுதலடைந்திருந்தாலும்,அழுது வடிந்து கொண்டிருக்கும் தன் அகக்கண்களால், வேறு சிலவற்றையும் அவன் கண்டிருக்க வாய்ப்புள்ளதால், அவைகள் எவைகளாக இருக்கக்கூடும் என்று நாம் கண்டு, அதிலிருந்து சில பாடங்களை நமக்காகக் கற்றுக் கொள்ள முயற்சிப்போம்.

**1. கீழ்ப்படியாமைக்கான விலையை மோசே கண்டிருப்பான்**

முதலாவதாக, நேபோ மலையிலிருந்து மோசே தன்னுடைய அகக்கண்களால் தான் கீழ்ப்படியாமல் போன சூழலையும்,அதற்காகத் தான் கொடுக்க நேர்ந்த விலையையும் கண்டிருப்பான்.

நன்றிகெட்ட இஸ்ரவேல் ஜனங்கள், தங்களுடைய யாத்திரையில் ஒரு சமயம், சீன் வனாந்திரத்தின் காதேசிலே தங்கியிருந்தார்கள் அங்கே தண்ணீர் இல்லாதபடியால், வழக்கம் போல ஜனங்கள் மோசேக்கும், ஆரோனுக்கும், விரோதமாக் கூட்டங்கூடினார்கள். வாக்குவாதம் பண்ணி கலகம் செய்தார்கள். அப்பொழுது, கர்த்தர் மோசேயை நோக்கி; நீ கோலை எடுத்துக் கொண்டு, நீயும் உன் சகோதரனாகிய ஆரோனும், சபையாரை கூடிவரச் செய்து அவர்கள் கண்களுக்கு முன்பாக, கன்மலையைப் பார்த்து பேசுங்கள்.... என்றார். ஆனால், மோசேயோ ஜனங்களை நோக்கி: கலகக்காரரே கேளுங்கள் என்று சொல்லி, தன் கையை ஓங்கி, கன்மலையைத் தன் கோலினால் இரண்டு தரம் அடித்தான் (எண் 20 : 7 - 10).

மோசேயின் இச்செயல், சங்கீதப் புத்தகத்தில் இவ்விதம் இடம்பெற்றுள்ளது. மேரிபாவின் தண்ணீர்களிடத்திலும் அவருக்கு கடுங்கோபம் மூட்டினார்கள்; அவர்கள் நிமித்தம் மோசேக்கு பொல்லாப்பு வந்தது; அவர்கள் அவன் ஆவியை விசனப்படுத்தினதினாலே, தன் உதடுகளால் பதறிப் பேசினான் (சங். 106 : 32,33). இங்கே மோசேக்கு நேர்ந்த பொல்லாப்பு, மோசேயின் பொல்லாப்பு என்று நேரிடையாக குறிப்பிடப்படாமல், ஜனங்களினிமித்தம் வந்த பொல்லாப்பு என்று சொல்கிறது. ஆயினும், பொல்லாப்புக்கான காரணம் எதுவாக இருந்தாலும் அந்தப் பொல்லாப்பை, தேவன்,மோசேயின் பாவமாகவே எடுத்துக் கொண்டார்.ஆகவேதான், அவனை அவிசுவாசி என்று தீர்த்து தண்டனையும் கொடுத்தார்.

அருமையானவர்களே! இங்கே நாம் கவனிக்க வேண்டிய இரண்டு முக்கியமான பாடங்கள் இருக்கிறது. ஒன்று, கீழ்ப்படியாமைக்கு ஒருவன் மிகப்பெரிய விலையைக் கொடுக்க வேண்டுமென்பது. இரண்டு, ஒருவேளை நம்முடைய கீழ்ப்படியாமைக்கு மற்றவர்கள் காரணமாக இருந்தாலும், தண்டனையை நாம் தான் அனுபவிக்க வேண்டுமென்பது.

அன்பானவர்களே, ஒருவேளை, இந்த மோசேயைப் போல, நம்முடைய வாழ்க்கையில் சில நேரங்களில் பிறர் நிமித்தம் பாவம் செய்கிறவர்களாக இருக்கிறோமா என்று நம்மை நாமே பரிசோதித்துப் பார்ப்போம். நம்முடைய ஆன்மீக வாழ்க்கையில் இந்த மோசே செய்ததைப் போல, ஒருவேளை நம்முடைய வாழ்க்கையில் பெற்றோர்களினிமித்தம், நாம் தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமலிருக்கக்கூடும் அல்லது நம்முடைய

வாழ்க்கையில் எதாவது ஒரு கட்டத்தில், தனி ஒருவரிடத்திலோ அல்லது ஒரு ஸ்தாபனத்திடமிருந்தோ பெற்றுக்கொண்ட சரீர நன்மைகளினிமித்தம் நாம் தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாதலிருக்கக்கூடும் அல்லது நமக்கு இதுகாறும் உபதேசிக்கப் பட்ட உபதேசங்களினிமித்தம் அல்லது நாம் சார்ந்திருக்கும் ஒரு சபையினுடைய கொள்கைகளினிமித்தம் நாம் தேவனுடைய வார்த்தைக்கு முழுமையாகக் கீழ்ப்படியாமலிருக்கக்கூடும். ஆனால், இங்கே ஒன்றைத் தெளிவாக தெரிந்து கொள்ளுங்கள். நம்முடைய நிர்ப்பந்த நிமித்தங்கள் நமக்குக் கிடைக்கும் தண்டனையிலிருந்து நம்மைக் காப்பாற்றாது. நம்முடைய நிமித்தங்கள் எதுவாயிருந்தாலும், அதை செய்கிறவர்கள் நாமாக இருக்கிறபடியால், நாம் தண்டனையை அடைந்தே தீருவோம். மோசேயின் நேபோ மலைக்காட்சி இதற்கு மிகச் சிறந்த சான்றாக இருக்கிறது.

**உ. பாவத்தின் கொடுமையை மோசே கண்டிருப்பான்**

இரண்டாவதாக, இந்த மோசே நேபோ மலையின் உச்சியிலிருந்து, தன்னுடைய அகக் கண்களால், பாவத்தின் கொடுமையையும், அதன் பயங்கரத்தையும் கண்டிருப்பான்.

ஆம், தேவனுடைய வார்த்தைக்கு விரோதமாக அவன் செய்த கீழ்ப்படியாமை என்ற பாவம், காலமெல்லாம் அவன் எதற்காகப் பாடுபட்டானோ அதை அடையவிடாமல் தடுத்து விட்டது. ஒருவேளை பரமக்கானானுகள் பிரவேசிக்கும் பாக்கியம் அவனுக்குக் கடைசி நாளில் கொடுக்கப்படும் என்பது வேறு விஷயம். (மத். 17;எபி. 11 அதி). ஆனாலும், இங்கே அவனுக்கு நேர்ந்த கொடுமையின் அளவு மிகப் பெரியது. இந்தக் கொடுமைக்குக் காரணம் பாவமே. தேவனுடைய வார்த்தைக்கு விரோதமாக ஒருவன் செயல்பட ஆரம்பித்துவிட்டால், அது ஒருவனை எங்கே கொண்டு போய் நிறுத்தும் என்பதற்கு நேபோவின் மோசே ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.

தேவனுக்குப் பயப்படும் வாழ்க்கை வாழ்ந்த மோசேயின் வாழ்க்கையிலேயே பாவம் விளையாடி, அவன் அடைய வேண்டிய ஆசீர்வாதத்தைக் கெடுத்து, அவனைப் பாழ்படுத்தியிருக்கிறதென்றால், அந்தப் பாவம் உங்களையும், என்னையும் சும்மா விட்டுவிடும் என்று நினைக்கிறீர்களா? சொல்லுங்கள்.

அருமையானவர்களே! பாவத்தைக் குறித்த தம்முடைய நிலை எப்படியுள்ளது? அதன் தன்மையையும், கொடுமையையும் நாம் உணர்ந்துள்ளோமா? தேவனுக்குப் பயந்து வாழ்ந்த மோசே தேவனுடைய வார்த்தைக்கு விரோதமாகச் செயல்பட்டு, பாலும் தேனும் ஓடுகின்ற கானானை இழந்துபோனது போல, நம்முடைய ஆவிக்குரிய வாழ்வில்,தேவனுடைய

வார்த்தைகளுக்கு விரோதமாக வாழ்ந்து பரமக் கானானை இழந்து போகப் போகிறோமா? எப்படி மோசே, தேவனுடைய வார்த்தைக்குத் தன்னை முழுமையாக ஒப்புக் கொடுக்கத் தவறிய போது, தீமை அவனைத் தொற்றிக் கொண்டதோ, அதபோலவே ஆவிக்குரிய வாழ்வில் தேவனுக்குக் கீழ்ப்படியாமல் அவருடைய உபதேசச் சட்டங்களுக்குக் கீழ்ப்படியாமல் ஒருவன் வாழும் போது ஆவிக்குரிய தீமைகள் அவனைத் தொற்றிக் கொள்ளும். மோசே, தேவனுடைய வார்த்தைக்கு விரோதமாகச் செயல்பட்டது போலவே, அப்படிப்பட்டவன் தன்னுடைய வாழ்விலும், தேவனுடைய வார்த்தைகளுக்கு விரோதமாகச் செயல்பட ஆரம்பித்து விடுவான். இறுதியில், மோசே சரீரப் பிரகாரமான கானானை இழந்து போல, அவனும் ஆவிக்குரிய பரம கானானை இழந்து போகும் நிலை ஏற்படும்.

ஆகவே, நேபோ மலை தரும் இந்த இரண்டாம் பாடத்தைக் எச்சரிக்கையோடு படித்து எந்தச் சூழ்நிலையிலும் தேவனுடைய வார்த்தைக்குப் பயந்து வாழ்ந்து, அவைகளுக்கு நம்மை முழுமையாக ஒப்புக்கொடுத்து பரம கானானுக்கான பாக்கியத்தைப் பெற்றுக்கொள்வோம்.

**3. தேவனுடைய வார்த்தையின் கண்டிப்பை மோசே கண்டிருப்பான்.**

இறுதியாக, மோசே நோபோ மலையிலிருந்து, தன்னுடைய அகக் கண்களால், தேவனுடைய வார்த்தையின் கண்டிப்பைக் கண்டிருப்பான்.

கானான் தேசத்துக்குள்ளாக நீ பிரவேசிக்கமாட்டாய் என்று தேவன் சொன்ன அச்சமயத்தில்,மோசே அதைப் பெரிதாக எடுத்திருக்கமாட்டான் என்றே சொல்லலாம். ஏனெனில், ஜனங்களின் பாவத்தினிமித்தமாக, தேவன் கோபப்பட சில சந்தர்ப்பங்களில் தன்னுடைய கனிவான விண்ணபத்தால் தேவனுடைய கோபத்தை ஆற்றி அவருடைய மனதை மோசே மாற்றியுள்ளான்.(யாத் 12:14,உபா.9:19 ) அதுபோலவே, தன் காரியத்திலும் தேவன் மனம் மாறுவார் என்று அவன் எதிர்பாத்திருக்க வாய்ப்புண்டு. எப்படியெனில், தான் கானானைக் காண வேண்டுமென்று தேவனை நோக்கி ஜெபித்துள்ளான். நான் கடந்து போய், யோர்தானுக்கு அப்புறத்திலுள்ள அந்த நல்ல தேசத்தையும், அந்த நல்ல மலையையும், லீபனோனையும் பார்க்கும்படி உத்தரவு கொடுத்தருளும் என்று வேண்டிக்கொண்டான் (உபா.3:25 ) என்றுள்ளது. ஆயினும்,மோசேயின் இந்த விண்ணபத்திற்கு தேவனின் பதில் என்ன தெரியுமா? ...போதும் இனி இந்தக் காரியத்தைக் குறித்து என்னோடே பேச வேண்டாம்....இந்த யோர்தானை நீ கடந்து போவதில்லை என்று மிகத் திட்டமாய் சொல்லி விட்டார்.

மற்றவர்களுக்காகத் தான் ஜெபித்த போதெல்லாம் தன் விண்ணப்பத்தைக் கேட்ட தேவன், எனக்காக நான் மன்றாடும்போது இப்படி பதில் கொடுத்து விட்டாரே என்று அவன் அங்கலாய்த்திருப்பான். அத்தோடு, தேவனுடைய வார்த்தையின் கண்டிப்பை அங்கே கண்டிருப்பான். இப்படிப்பட்ட தேவனுடைய வார்த்தையைக் குறித்து, தாவீது சொல்வதைக் கவனியுங்கள். கர்த்தாவே, உமது வசனம் என்றென்றைக்கும் வானங்களில் நிலைத்திருக்கிறது (சங். 119.89). தேவனுடைய வார்த்தைகள் கண்டிப்பானது மாத்திரமல்ல, அது நிலைத்ததும், முழுமையானதும், இறுதியானதுமாக இருக்கிறதென்பதும் நமக்குத் தெரிந்திருக்க வேண்டும் (வெளி.22:18-19).

இவ்வளவு கண்டிப்பான தேவனுடைய வார்த்தைகள் தான், நம்மை இறுதி நாளில் நியாயந்தீர்க்கப் போகிறது (யோவா 12:48) அந்நாளிலே, தேவனுடைய வார்த்தை கண்டிப்பானதாக இருக்கப் போகிறது. அந்நாளில் பிதாவின் சித்தம் செய்யாதவர்களைப் பார்த்து, அதாவது, தேவனுடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப்படியாதவர்களைப் பார்த்து, நான் ஒருக்காலும் உங்களைஅறியவில்லை; அக்கிரமச்செய்கைக்காரரே, என்னை விட்டு அகன்று போங்கள் என்று சொல்லுவார் (மத்.7:23). ஆம், நியாயத்தீர்ப்பு அவருடைய வார்த்தையின்படி கண்டிப்பானதாக இருக்கும்.


அன்பானவர்களே! நேபோ மலையிலிருந்து நாம் கற்றுக்கொண்ட இந்த மூன்று பாடங்களும், நம் அனைவரின் வாழ்க்கைக்கும் பயன்பட, உன்னதத்தின் தேவன் நமக்கு உதவி செய்வாராக! இதன் மூலம் நீங்கள் பரம கானானுக்குள் பிரவேசிக்கும் பாக்கியத்தை பெற்றுக்கொள்வீர்களாக ! ஆமென்.

வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே. என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளாதவனை நியாயந்தீர்க்கிற தொன்றிருக்கிறது; நான் சொன்ன வசனமே அவனைக் கடைசிநாளில் நியாயந்தீர்க்கும் (யோவான் 5:39;12:48).

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| கிறிஸ்தவ ஆராதனையில்... | Louis Rushmore | ...1 |
| நேபோ மலையிலிருந்து... | E.Z.S. Rajanayagam | ...4 |
| தேவனால் பிறப்பதற்கான... | Jerry Bates | ...12 |
| விசுவாசம் தலையிலிருந்தா... | Byron Nichols | ...15 |
| போதிக்கப்படாதவர்கள்... | J.C. Choate | ...18 |
| சாறிபாத் விதவை... | P.C. Philemon Rajah | ...22 |
| என் ஜனம்... | B. Arjunan | ...26 |
| கிறிஸ்து கற்பித்த சமத்துவம்... | E.Z. Selvanayagam | ...30 |
| மாதிரியின் மாண்பு... | Benny Martin | ...33 |
| **தேவன்** | **God** | |
| கிறிஸ்து எழுந்திருக்கவில்லை... | Raymond Elliott | ...36 |
| **சாட்சியங்கள்** | **Evidences** | |
| அவன் தன் கண்களை ஏறெடுத்து... | Betty Burton Choate | ... 42 |
| **தேவனுடைய வார்த்தை** | **The Word Of God** | |
| வேதாகமத்தின் சுருக்கம்... | Franklin Camp | ... 45 |
| மாதிரியின் வல்லமை... | Wayne Jackson | ... 48 |
| வசன ஆராய்ச்சி... | Jerry Bates | ... 52 |
| **இரட்சிப்பு** | **Salvation** | |
| இரட்சிப்பின் அடையாளங்கள்... | Grady Miller | ... 55 |
| உயிர்... | Frank Chesser | ... 58 |
| வேதாகம ஞானஸ்நானமும்... | Perry N. Hall | ... 60 |
| மனிதன் சுவிசேஷத்தை | Allen Webster | ... 62 |
| **சபை** | **The Church** | |
| இன்றைய உலகில் இன்றைய சபை... | Greg Tidwell | ... 64 |
| உம்முடைய ராஜ்யத்தை... | Paul White | ... 67 |

| | | | |
|---|---|---|---|
| **வாழ்வதற்கான உபதேசம்** | **Doctrine to Live by** | | |
| ஞானஸ்நானம் கொடுக்கும்படி... | A. L. Franks | ... 69 |
| ஞானஸ்நானம் ஒரு தொடக்கம்... | Jimmy Jividen | ... 71 |
| பழயவைகளே சிறந்தவைகளாக... | HardeMan Nichols | ... 72 |
| ஞானஸ்நானத்திற்கு முன்பாக... | Kyle Butt | ... 75 |
| **செயலில் கிறிஸ்தவம்** | **Christianity in Action** | |
| இழந்துபோன ஆத்துமாவை... | Jack Harriman | ... 80 |
| நாம் தனி நபர்... | Darrell E. Beard | ... 82 |
| **ஆராதனை** | **Worship** | |
| என் கொடுத்தல் | Dann R. Owen | ... 86 |
| வேதபாட வகுப்புகளில் | Clarence Deloach | ... 89 |
| ஜெபத்தின் வல்லமை | Dolton Key | ...91 |
| **அனுதின கிறிஸ்தவ ஜீவியம்** | **Daily Christian living** | |
| கேளுங்கள், தேடுங்கள் | Wayne Barrier | ... 93 |
| நீங்கள் முழுவதுமாக... | David R. Kenney | ... 95 |
| **கிறிஸ்தவ இல்லம்** | **The Christian Home** | |
| விவாகத்திற்கான தேவனுடைய... | Travis L. Quertermous | ... 98 |
| வாலிபர்களுக்கு அர்ப்பணிப்பு | Carrollsites | ... 100 |
| **வசனப்பகுதி பாடங்கள்** | **Textual Studies** | |
| மலைப் பிரசங்கத்தையும்... | Kevin L. Moore | ... 104 |
| **வேதாகம கதாப்பாத்திரங்கள்** | **Bible Characters** | |
| பிலேமோன் உங்களை... | Maxie B. Boren | ... 107 |
| ஏலியின் குமாரர்கள் | Max PatterJon | ... 109 |



# தேவனால் பிறப்பதற்கான அடையாளங்கள்

## Sings of Being Born of God

Jerry Bates

இயேசுவானவரே கிறிஸ்து என்று விசுவாசிக்கிற எவனும் தேவனால் பிறந்திருக்கிறான்; பிறப்பித்தவரிடத்தில் அன்புகூருகிற எவனும் அவரால் பிறப்பிக்கப்பட்டவனிடத்திலும் அன்புகூருகிறான். நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்து அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளும்போது, தேவனுடைய பிள்ளைகளிடத்தில் அன்புகூருகிறோமென்று அறிந்துகொள்ளுகிறோம். நாம் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்வதே அவரிடத்தில் அன்புகூருவதாம்; அவருடைய ஜெயிக்கும் கற்பனைகள் பாரமானவைகளுமல்ல. தேவனால் பிறப்பதெல்லாம் நம்முடைய வசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம். இயேசுவானவர் தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறவனேயன்றி உலகத்தை ஜெயிக்கிறவன் யார்? (யோவான் 5:1-5).

அப்போஸ்தலனாகிய யோவான், I யோவான் என்னும் இந் நிருபத்தில் தேவனால் பிறந்தவன் என்னும் பதத்தை ஏழு முறை பயன்படுத்துகிறார். நிச்சயமாகவே இச்சொற்றொடர், இயேசு கிறிஸ்து யோவான் மூன்றாம் அதிகாரத்தில் நிக்கொதேமுவிடம் பேசிக்கொண்டிருக்கும்போது குறிப்பிட்ட மறுபிறப்பு சம்பந்தமான வார்த்தைதான். அந்த உரையாடலில் இயேசுகிறிஸ்து ஆவிக்குரிய மறுபிறப்புக்கும், சரீரப்பிரகாரமான மறுபிறப்புக்கும் உள்ள வித்தியாசத்தைக் காட்டுகிறார். மறுபடியும் பிறப்பது என்பது ஞானஸ்நானத்தின் மூலம் பிறக்கும் கிறிஸ்தவனைத்தான் குறிக்கிறது. ஒருவர் எப்படி மறுபடியும் பிறக்கமுடியும் என்பதைக் குறித்து நிக்கொதேமுக்கு இயேசு போதித்தார் (யோவான் 3:3-5). ஒருவன் ஜலத்தினாலும், ஆவியினாலும் பிறக்க வேண்டும். இங்கே ஜலம் என்பது தண்ணீருக்குள்ளாக மூழ்கி எடுக்கும் ஞானஸ்ஞானத்தைக் குறிக்கிறது. ஆவியினால் பிறப்பது என்பது தேவனுடைய வல்லமை சாத்தியத்தால் பிறக்கும் ஓர் அற்புதப் பிறப்பாகும்.

இயேசுவை கிறிஸ்துவென்றும், தேவனுடைய குமாரனென்றும் விசுவாசிக்க வேண்டுமென்று வேதாகமம் இத்தனை தெளிவாகக் கட்டளை கொடுத்திருக்கும்போது, தங்களை விசுவாசிகளென்றும், கிறிஸ்தவர்களென்றும், பரிசுத்தவான்களென்றும் சொல்லிக் கொள்ளுகிறவர்கள் தொடர்ந்து அக்காரியங்களை விசுவாசியாமலிருப்பது மிகுந்த வேதனை அளிக்கிறது. இவர்கள் இயேசுகிறிஸ்துவைப் பற்றிய அடிப்படை உண்மைகளை ஏற்க மனமற்றவர்களாயிருக்கிறார்கள். அவருடைய கன்னிப்பிறப்பை மறுக்கிறார்கள். வேதாகமத்தில் நிறைவேறியிருக்கிற அவருடைய அற்புதங்களை நிராகரிக்கிறார்கள். இன்னும் சிலர், வரலாற்று சிறப்புமிக்கதும் இயற்கையை வென்றதுமான அவருடைய உயிர்த்தெழுதலை மறுக்கிறார்கள். இத்தனை காரியங்களையும் அவர்கள் மறுத்துவிட்டு தாங்கள் இன்னும் கிறிஸ்தவர்கள் என்று நாகூசாமல் சொல்லிக்கொள்ளுகிறார்கள். இங்கே நாம் உற்று நோக்க வேண்டிய காரியம் என்னவென்றால், இயேசு மாபெரும் போதகர் என்றும், அவர் ஒரு நல்ல போதகர் என்றும், அவர் நன்மையாவைகளை நடப்பித்திருக்கிறார் என்றும் அவர் ஒரு நல்ல மனிதரென்றும் விசுவாசிக்கிறார்கள். ஒருவர் கிறிஸ்தவராயிருப்பதற்கு வெறுமனே கிறிஸ்துவைப் பற்றி நல்ல எண்ணங்களை மட்டும் கொண்டிருப்பது போதுமானதல்ல.

அப்போஸ்தலனாகிய யோவான் இதை மாயை என்று வெளிப்படையாகச் சொல்லுகிறார். கிறிஸ்தவனாயிருப்பது என்பது இயேசுகிறிஸ்து ஒரு மாபெரும் போதகர் என்று விசுவாசிப்பதற்கும் மேலானது. நாம் கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்றும் அவர் நம்மைப்போல மாம்சத்தை உடையவராக இருந்தார் என்பதையும் விசுவாசிக்க வேண்டும். இந்த அடிப்படை சத்தியத்தின் உண்மைகளை ஒருவர் ஏற்க மறுத்தால், அவர் தேவனால் பிறந்தவரல்ல. வேறுவிதமாகச் சொன்னால் அவர் கிறிஸ்தவரே அல்ல.

அடுத்ததாக, கிறிஸ்துவினிடத்தில் நாம் கொண்டிருக்கும் விசுவாசத்தின் விளைவு சகோதர சிநேகமாயிருக்கிறது. புதிய பிறப்பு தேவனுடைய பிள்ளைகளோடு அன்பான ஐக்கியம் கொள்ள நம்மை அழைத்துச் செல்லுகிறது. நாம், தேவனுடைய பிள்ளைகளிடத்தில் அன்புகூராமல், தேவனடத்தில் அன்பு கூரமுடியாது. தேவனிடத்தில் அன்புகூர்ந்தால் சகோதரசிநேகம் உடையவர்களாயிருப்போம் என்பதை யோவான் வேதத்தின் பக்கங்களலே பறைசாற்றுகிறார். நாம் காண்கிற சகோரனிடத்தில் அன்புகூராமல் நாம் காணாத தேவனிடத்தில் அன்பு கூரவே முடியாது என்றும் எச்சரிக்கிறார். ஆனால், இன்று சபையிலே சகோதரர்கள் மத்தியிலே அன்பு தணிந்துபோயிருப்பதைக் காணும்போது அது மிகுந்த மன வேதனையை அளிக்கிறது.

கிறிஸ்தவர்கள் உண்மையாக, பரிசுத்தமாக ஜீவிக்க வேண்டுமென்றுயோவான் மீண்டும் மீண்டும் வலியுறுத்தி எழுதுகினார். தேவன் மீதான நம்முடைய அன்பும், அவருடைய கற்பனைகளுக்கு நாம் கீழ்ப்படிவதும் ஒன்றேடொன்று இணைபிரியாத செயலாகும். எப்படியெனில், தேவன் மீதான உண்மையான அன்பை அவருடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிவதின் மூலமாகவே வெளிப்படுத்த முடியும். இயேசு கிறிஸ்துவினிடத்தில் நாம் கொண்டிருக்கும் விசுவாசமே நாம் இவ்வுலகத்தை ஜெயிக்க அனுமதிக்கிறது. ஆகையால், தேவனுடைய வார்த்தையை விசுவாசித்து, தேவனால் பிறந்தவன் எவனும் இயேசுவை கிறிஸ்து என்று விசுவாசிக்கிறான். ஒரு கிறிஸ்தவன் தேவனிடத்திலும், அவருடைய பிள்ளைகளிடத்திலும் அன்புகூருகிறான். இவ்வன்பின் விளைவாக அவன் ஒரு பரிசுத்தமான வாழ்வை வாழ்கிறான். இப்படிப்பட்ட மனநிலையோடு வாழும் கிறிஸ்தவர் கிறிஸ்துவின் மீது கொண்டிருக்கும் அன்பினிமித்தமாக இவ்வுலகத்தை ஜெயிக்க முடியும்.

விசுவாசமே உலகத்தை ஜெயிக்கும் ஜெயமாக இருக்கிறபடியில், ஒரு கிறிஸ்தவனுடைய வாழ்கையில் விசுவாசமே முக்கியப் பங்கு வகிக்கிறது.மேலும், விசுவாசம் நாம் தேவனோடு கொண்டிருக்கும் ஐக்கியத்தின் ஆரம்பமும், முடிவுமாயிருக்கிறது. ஆனால், ஓர் உண்மையைத் தெளிவாக நாம் புரிந்து கொள்வது அவசியம். அதாவது, விசுவாசம் மாத்திரமே எல்லாவற்றிற்கும் போதுமானது என்று வேதம் போதிக்காமல், கிரியையுள்ள விசுவாசம் தான் ஒரு கிறிஸ்தவனுக்கு தன் வாழ்க்கையில் மிகவும் அவசியம் என்று வலியுறுத்திப் போதிக்கிறது. பவுலும், இதேவிதமான கருத்தை கலா. 5:6 ல் பதிவு செய்திருக்கிறார். கிறிஸ்து இயேசுவினிடத்தில் விருத்தசேதனமும், விருத்த சேதனமில்லாமையும் ஒன்றுக்கு உதவாது. அன்பினால் கிரியை செய்கிற விசுவாசமே உதவும் என்று.

சரி, தேவன் மீதான உங்கள் விசுவாசம் எவ்வளவு உறுதியாக இருக்கிறது? நீங்கள் என்ன நினைக்கிறீர்கள், என்ன சொல்லுகிறீர்கள் என்பது ஒரு பொருட்டே அல்ல. மாறாக, நீங்கள் வாழும் வாழ்க்கை தான் முக்கியமானதாகக் காணப்படுகிறது. எப்படியெனில், கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று விசுவாசித்தல், பரிசுத்த வாழ்வு, அன்பு போன்ற காரியங்கள் தான் தேவனால் பிறந்த ஒருவனுக்கு அடையாளங்களாகக் காணப்படுகின்றன. ஒருவேளை, நீங்கள் இந்த அடையாளங்களை வெளிப்படுத்தாவிட்டால் நீங்கள் தேவனால் பிறக்கவில்லை, இப்படிப்பட்டவர்களுக்கு பரலோகத்தில் நித்திய ஜீவனுக்கான நம்பிக்கை இல்லை என்றும் வேதாகமம் திட்டமும் தெளிவுமாக உறுதிபடக் கூறுகிறது. ஆகவே, தேவனால், பிறந்தவர்களான நீங்கள் உங்கள் குணாதிசயங்களை மற்றவர்களுக்கு வெளிப்படுத்தி தேவன் மீதான உங்கள் அன்பை உறுதி செய்து கொள்ளுங்கள். அப்பொழுது, பரலோகத்தில் பரமப் பிதாவின் வாசஸ்தலத்தில் உங்களுக்கான ஒரு ஸ்தலம் உறுதியாக உண்டு என்று இயேசு வாக்களித்திருக்கிறார். வாக்களித்தவர் உண்மையுள்ளவர். அவர் அதை அப்படியே நிறைவேற்ற வல்லவராக இருக்கிறார்.



# விசுவாசம் தலையிலிருந்தா அல்லது இருதயத்திலிருந்தா?

# HEAD FAITH or HEART FAITH?

Byron Nichols

**வே**தாகமத்தை ஆராய்ந்து பார்த்தால், அதில் பலவகையான விசுவாசங்களை காணமுடியும். ஆனால், தேவனிடத்தில் நாம் கொண்டிருக்கும் விசுவாசம் மாத்திரம் நம்மை இரட்சிப்புள்ளாக வழிநடத்தாது என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

நாம் தேவனிடத்திலும், அவருடைய ஒரே பேறான குமாரனாகிய கிறிஸ்துவினிடத்திலும் வேத அறிவின்படியாக விசுவாசமாயிருப்பது சாத்தியமானதே. ஆனால், அந்த விசுவாசம் நம் இருதயத்தோடு கலக்காது. இங்கே நான் இருதயம் என்று குறிப்பிடுவது சாரீரப்பிரகாரமான இருதயம் அல்ல. மாறாக, நம் செயல்களையும், எண்ணங்களையும் ஆளுகை செய்கிற உணர்வுகளின் மையமாகிய மனதைக் குறிப்பிடுகிறேன்.

**விசுவாசம் பற்றிய சில அடிப்படை வேதாகம உண்மைகள்**

எபிரெயர் 11 : 1–ல் விசுவாசத்திற்கான மிகச்சிறந்த விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறது. விசுவாசம் என்பது நம்பப்படுகிறவைகளின் உறுதியும் காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது. அடிப்படையில், விசுவாசத்தை உண்டாக்குவதும், அதை நிலைத்திருக்கச் செய்வதும் மனரீதியான செயல்பாடாக இருக்கிறது.

நம் செயல்பாட்டின் விளைவுதான் விசுவாசம். இது நமக்கு நேரிடுகின்ற ஒரு காரியமல்ல. ரோமர் 10 : 17 ல் – விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும் என்று சொல்லப்பட்டுள்ளது. நாம் காரியங்களைக் கேட்கும்போதும் அல்லது வாசிக்கும்போதும் அதில் சிலவற்றை மனரீதியாக ஏற்றுக்கொள்ளுகிறோம். விசுவாசம் நம்மை இரட்சிக்கும் விசுவாசமாக இருக்க வேண்டுமானால், நாம் அதை முழுமையாகச் செயல்படுத்துகிறவர்களாக இருக்க வேண்டும். நாம் நம் மனதிற்குள்ளாக பல காரியங்களைக் கொண்டு சென்றாலும், அவைகளை முழுமையாகச் செயல்படுத்துவதில்லை. ஏனென்றால், நாம் அவைகளை உறுதியாக நம்பவில்லை என்பதால் அப்போஸ்தலனாகிய பவுல் II கொரி. 13 : 5 ல் நீங்கள்

விசுவாசமுள்ளவர்களோவென்று உங்களை நீங்களே சோதித்து அறியுங்கள் என்று எச்சரிக்கிறார். விசுவாசம் சிலவேளைகளில் வாழ்க்கை முழுவதும் நம்மோடு வருவதில்லை என்னும் உட்பொருளுடன் இங்கே பவுல் பேசுகிறார். அதாவது, சில வேளைகளில் நாம் விசுவாசத்தில் இல்லாமலே, விசுவாசத்தில் இருப்பதாக நினைத்துக் கொள்வதைப் பற்றி எச்சரிக்கிறார்.

பவுல் I கொரி. 16 : 13-ல் விழித்திருங்கள் விசுவாசத்திலே நிலைத்திருங்கள், புருஷராயிருங்கள், திடன்கொள்ளுங்கள் என்று வலியுறுத்துகிறார். அவருடைய தொடர்ச்சியான செய்தி என்னவென்றால் நம்முடைய சிந்தையில் நாம் விசுவாசிக்கும்பொழுது அது நம் இருதயத்தால் ஈர்க்கப்படுவதில்லை.

**விசுவாசம் பற்றிய சில அடிப்படை வேதாகம உண்மைகள்**

இயேசு சொன்னார் விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான் (மாற்கு 16:16). நம் இரட்சகர் யோவான் 8:24-ல், நானே அவர் என்று நீங்கள் விசுவாசியாவிட்டால் உங்கள் பாவங்களிலே சாவீர்கள் என்று சொன்னார். மேலும், எபிரெயர் 11:6 ல் விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம். ஏனென்றால் தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும் என்றும் நாம் காண்கிறோம். தேவனை உண்மையாய்த் தேடுகிறவர்களுக்கு இருக்கும் விசுவாசம் சிந்தையிலிருந்து உதித்த ஒன்றாகயிராமல் அது இருதயத்திலிருந்து ஊற்றெடுத்து ஒன்றாக இருக்க வேண்டும்.

**தலையிலிருந்து வரும் விசுவாசம் முதலில்; அடுத்தது இருதயத்திலிருந்து வரும் விசுவாசம்**

யோவான் சுவிசேஷப் புத்தகத்தின் மையக்கருத்து யோவான் 20:31-ல் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்திய ஜீவனை அடையும்படியாகவும் இவைகள் எழுதப்பட்டிருக்கிறது. இந்த வசனத்தில், யோவான் சிந்தையிலிருந்து வரும் விசுவாசத்தைப் பற்றி, யோவான் பேசிக்கொண்டிருக்கிறார். சிந்தையிலிருந்து வரும் விசுவாசமா? அல்லது மனதிலிருந்து வரும் விசுவாசமா? அவருடைய நாமத்தினாலே விசுவாசத்தை உண்டாக்கும் விசுவாசமாக இருந்தால், நிச்சயமாகவே அது இருதயத்திலிருந்து வரும் விசுவாசமாக இருக்கிறது.

## தலையில் உதிக்கும் விசுவாசத்திற்கும், இருதயத்திலிருந்து ஊற்றெடுக்கும் விசுவாசத்திற்குமான உதாரணங்கள்

ஆகிலும், அதிகாரிகளிலும் அநேகர் அவரிடத்தில் விசுவாசம் வைத்தார்கள். அப்படியிருந்தும் ஜெப ஆலயத்துக்குப் புறம்பாக்கப்படாதபடி, பரிசேயர் நிமித்தம் அதை அறிக்கை பண்ணாதிருந்தார்கள். அவர்கள் தேவனால் வருகிற மகிமையிலும், மனுஷரால் வருகிற மகிமையை அதிகமாய் விரும்பினார்கள் (யோவான் 12:42, 43). இந்த அதிகாரிகளுக்கு எவ்வகையான விசுவாசம் இருந்தது?

ரோமர் 10:9,10-ல் என்னவென்றால் கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே, அறிக்கையிட்டு தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய். நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கை பண்ணப்படும் என்று சொல்லப்பட்டுள்ளது. இது, தலையிலிருந்து வரும் விசுவாசமா? அல்லது இருதயத்திலிருந்து வரும் விசுவாசமா?

வேதாகமத்தின் சில பகுதிகள் புரிந்து கொள்வதற்கு கடினமானது என்பது உண்மைதான். ஆனால், வேதாகமம் தலையிலிருந்து வரும் விசுவாசத்தையும், இருதயத்திலிருந்து வரும் விசுவவாசத்தையும் பற்றி பேசும்போது, அது புரிந்து கொள்வதற்குக் கடினமானதல்ல. அடிப்படையாகவே, தலையில் உதிக்கும் விசுவாசம் செயல்படாத ஒன்றாகவே இருக்கிறது. வேதாகமம், தேவனையும் கிறிஸ்துவையும் பற்றி சொல்லுகிற காரியங்களை நாம் நன்றாகப் புரிந்துகொள்ளலாம். ஆனால், யோவான் 12-ல் நாம் பார்த்த யூத அதிகாரிகளைப் போல் விசுவாசத்தை செயலில் காட்டுவதில்லை.

ஆராதனையில் உங்கள் வருகை குறைவாக இருக்கும்போதும், சபை பணிகளில் உங்கள் பங்களிப்பு இல்லாதபோதும், உங்கள் விசுவாசம் இருதயத்திலிருந்து வரும் விசுவாசம் என்பதைத் தேவன் ஏற்றுக்கொள்வாரா?

ரோமர் 6:17 - ல் அப்போஸ்தலனாகிய பவுல் மனப்பூர்வமாய்க் கீழ்ப்படிந்த கிறிஸ்தவர்களைக் குறித்துக் களிகூறுகிறார். இருதயத்திலிருந்து கீழ்ப்படிந்து மனப்பூர்வமாகத் தேவனுக்கு ஊழியம் செய்கிறவர்களைப்பார்த்து ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோகத்தில் பிரவேசிப்பானேயல்லாமல் என்னை நோக்கி; கர்த்தாவே, கர்த்தாவே என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை என்று மத். 7:21-ல் சொன்ன வார்த்தைகளைக் குறித்து கலங்க வேண்டிய அவசியம் இல்லை.

உங்கள் விசுவாசம் எப்படிப்பட்ட விசுவாசமாயிருக்கிறது? உங்கள் செயல்பாடுகளின் அடிப்படையில் அது இருதயத்திலிருந்து வரும் விசுவாசமாயிருக்கிறதா? அல்லது வெறுமனே தலையிலிருந்து வரும் விசுவாசமாயிருக்கிறதா? ✝

# போதிக்கப்படாதவர்கள் இரட்சிக்கப்பட்டிருக்கிறார்களா?

# *Are the Untaught are Saved ?*

***J.C. Choate***

எல்லா மனுக்குலத்துக்கும் சுவிசேஷத்தை எடுத்துச் செல்வதில், நாம் என்ன செய்ய வேண்டுமென்று இயேசு சொன்னாரோ, அதைச் செய்வதற்கு சபையில் கொஞ்சம் பேர் தான் உள்ளார்கள். ஏன் இந்த நிலைமை? புள்ளி விவரங்கள் ஓர் அதிர்ச்சியான தகவலை நமக்குக் கொடுக்கிறது. அநேகர், குறிப்பாக இளைஞர்கள் மற்றும் பல்வேறு தரப்பினர் கட்டளைகளை அறியாமல் வாழ்ந்து கொண்டுள்ளபடியால், அதாவது சுவிசேஷத்தைக் கேள்விப்படாதபடியால், நியாயத்தீர்ப்பில் இரட்சிக்கப்படுவோம் என்று நம்புகிறார்கள்.

இந்த வாதத்தின் அடிப்படையில் இவர்கள் இப்படிப்பட்ட ஒரு முடிவுக்கு வருகிறார்கள். தேவனைப் பற்றி அறியாமலிருப்பது, அவர்கள் நித்திய காலத்திற்கும் இழந்து போகாமலிருக்கச் செய்யுமானால், நாம் சுவிசேஷத்தை அவர்களுக்கு எடுத்துச் செல்லக்கூடாது. ஏனெனில் நாம், போதித்து, அவர்கள் இரட்சிப்பின் செய்தியை ஒருவேளை தள்ளிவிட்டால், நியாயத்தீர்ப்பின் நாளில் குற்றவாளிகளாகக் காணப்படுவார்களே!

இப்படி சுவிசேஷத்தைக் கேள்விப்படாத எல்லா ஜனங்களும் பாதுகாப்பாக இருக்கிறார்கள் என்று நம்புகிறார்கள். கர்த்தருடைய இரட்சிப்பின் செய்தியை அவர்களுக்கு எடுத்துச் செல்வதில் எந்த ஒரு முயற்சியும் எடுக்கமாட்டார்கள் . தங்கள் அறியாமையினிமித்தம் அவர்கள், நித்திய காலத்திற்கும் இரட்சிக்கப்பட்டிருப்பது உண்மையானால், நாம் அவர்களுக்குப் போதிப்பதில் எந்த ஒரு நன்மையும் செய்வதில்லை.

இவர்களின் இந்தக் குதர்க்க வாதம் தர்க்க ரீதியாக சரியாக இருப்பது போல் தோன்றினாலும், வேதாகமத்தின் அடிப்படையில் தவறானது. உண்மை என்னவென்றால், ஜனங்கள், சுவிசேஷத்தைக் கேட்காமல் இருப்பதாலோ இழந்து போகிறதில்லை. மாறாக, பாவிகளாயிருப்பதாலும், பாவத்தில் இருப்பதாலுமே இழந்து போகிறார்கள். அவர்கள் பாவிகளாயிருப்பதால், தங்கள் பாவங்களுக்கு மன்னிப்புப் பெறாத நிலையில் மரிக்கும்போது, நித்திய காலத்திற்கும் இழந்து போகிறார்கள்.

ஆனால், அவர்கள் எப்படி இரட்சிக்கப்படமுடியும்? அவர்களுக்கும் சுவிசேஷம் அறிவிக்கப்பட வேண்டும், இயேசு கிறிஸ்துதான் அவர்களை இரட்சிக்க முடியும், ஆனால் அவருடைய சித்தத்தைக் கேள்விப்பட்டபிறகு இரட்சிக்கப்படும்படி சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிய வேண்டும் (மாற்கு 16 : 15 , 16). தேவனை அறியாதவர்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு, கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும், ஜுவாலித்து எரிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப்படும்போது அப்படியாகும் ( II தெசலோனிக்கேயர் 1:7,8 ). இங்கே பவுல் சொல்கிறதைக் கவனியுங்கள். அதாவது, தேவனை அறியாதவர்களையும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களையும் தண்டிக்கும்படி இயேசு திரும்ப வருகிறார் என்று சொல்லுகிறார். மேலும், பேதுரு இப்படியாகக் கேட்கிறார். நியாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டிலே துவக்குங் காலமாயிருக்கிறது; முந்தி நம்மிடத்திலே அது துவக்கினால் தேவனுடைய சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களின் முடிவு என்னமாயிருக்கும், நீதிமானே இரட்சிக்கப்படுவது அரிதானால் பக்தியில்லாதவனும் பாவியும் எங்கே நிற்பான்? (I பேதுரு 4: 17,18 ) இதற்குத் தெளிவான பதில் இருக்கிறது.

முதல் ஆணும் பெண்ணும் ஏதேன் தோட்டத்தில் தேவனுக்குக் கீழ்ப்படியாத போது அவர்களுடைய கண்கள் திறக்கப்பட்டு அவர்கள் பாவிகளானார்கள். ஆதாம், ஏவாளுடைய பாவத்தை சுமந்து கொண்டு யாரும் பிறவாத போதிலும், ஒருவன் நன்மை, தீமையை அறிந்து கொள்ளும் வயது வரும்போது அவன் பாவியாகிறான். பவுல் சொல்லும்போது, எல்லாரும் பாவஞ்செய்து தேவமகிமையற்றவர்களாகி என்றும், பாவத்தின் சம்பளம் மரணம் என்றும் ரோமர் 3 : 23; ரோமர் 6 : 23 வசனங்களில் சொல்லியிருக்கிறார். அது உண்மையாக இருக்கிறபடியால், தேவனுடைய சித்தத்திற்கு ஒரு பாவி கீழ்ப்படிந்தால்தான் (மாற்கு 16 : 16) அவன் இரட்சிக்கப்பட முடியும், மேலும் அவன் கிறிஸ்துவின் அடிச்சுவடிகளைப் பின்தொடர்ந்தால், இயேசு கிறிஸ்துவின் இரத்தம் அவன் பரலோகத்தில் பிரவேசிக்கும்படி சகல பாவங்களையும் கழுவிச் சுத்திகரிக்கும் (1யோவான் 1: 7).

ஆனால், ஒரு பாவி எப்படி தேவனுடைய சித்தத்தை அறிந்து கொள்ள முடியும்? அவன் வேதவசனங்களினால் போதிக்கப்பட வேண்டும். எனவே தான், கர்த்தர் அப்போஸ்தலர்களிடம் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் என்று கட்டளையிட்டார் (மாற்கு 16 : 15). நாம் சகல ஜாதிகளுக்கும் உபதேசம் பண்ண வேண்டும் என்று மத்தேயுவில் சொன்னார் ( மத்தேயு 28 : 19, 20 ). ஆனால், மனிதன் ஏற்கனவே இரட்சிக்கப்பட்டிருந்தால் ஏன் இதை ஆண்டவர் கட்டளையாகச் சொல்லவேண்டும்?

கர்த்தர் தம்முடைய சித்தத்தை அறியாதவர்களை இரட்சித்துக் கொண்டு, சுவிசேஷத்தை அவர்களுக்கு எடுத்துச் சொல்லாதினால் கீழ்ப்படியாமைக்காக நம்மை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தால் எப்படி இருக்கும் என கற்பனை செய்து பாருங்கள்!. அதன்பின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிய அவர்களுடைய தொடர் தோல்வியினால் அவர்கள் இழந்து போகிறதற்கு காரணமாகின்ற சுவிசேஷத்தை அவர்களிடத்தில் எடுத்துச்சென்றால் என்னமாயிருக்கும்? இரட்சிக்க உபதேசித்திருக்கிற செய்தி உண்மையிலேயே ஆக்கினையாக மாறிவிடும். ஆனால், உண்மை என்னவென்றால் அறியாமையுள்ளவர்கள் தங்கள் பாவங்களினால் ஏற்கனவே இழந்து போய்விட்டார்கள். அவர்களுடைய ஒரே நம்பிக்கை நாம் அவர்களுக்கு சுவிசேஷத்தை எடுத்துச் செல்வதுதான். ஒரு மனிதன் அறியாமையில் இரட்சிக்கப்பட முடியுமென்றால் நம்முடைய அருமை இரட்சகராகிய இயேசு எதற்காக சிலுவையில் மரித்து இரட்சிப்பிற்கான கிரயத்தை செலுத்தி, நித்திய ஜீவனின் நம்பிக்கையை கொடுக்க வேண்டும்? இந்த விஷயத்தில் அறியாமைதான் சிறந்தது என்றால், அது கிறிஸ்துவின் இரத்தத்தை விட மிகவும் வல்லமையுள்ள இரட்சிக்கிற ஒன்றாக மாறிவிடும்!

ஆகையால், யாருமே பாவத்திலும் அறியாமையிலும் இரட்சிக்கப்பட முடியாது. மேலும், தேவனை அறியாதவர்களுக்கு சுவிசேஷத்தைக் கொண்டு செல்ல நாம் தவறினால், தங்கள் பாவங்களிலிருந்து எப்படி இரட்சிக்கப்பட வேண்டும் என்கின்ற அறியாமையினால் அவர்கள் மாத்திரம் இழந்து போகிறதில்லை, நாமும் தேவனுக்கு கீழ்ப்படிய மறுத்ததினாலோ, தவறினதினாலோ அவர்கள் இழந்து போனால், இயேசு நம்மை எதைச் செய்ய கேட்டுக்கொண்டாரோ அதைச் செய்ததினால் நாம் இரட்சிக்கப்படுவோம்.

அப்போது இந்த முழு உலகமும் சிறந்த அறிவுள்ளதாக விளங்கும் என்பதை நாம் உணர்ந்து கொள்வோம். உதாரணமாக, வேதாகமம் உலகில் உள்ள அநேக மொழிகளில் மொழியாக்கம் செய்யப்பட்டு உலகம் முழுவதும் பிரதிகள் விநியோகிக்கப்படுகின்றன. கத்தோலிக்க மற்றும் புரோடஸ்டன்ட் சபைகள் தங்கள் ஊழியர்களை உலகம் முழுவதும் அனுப்பி, ஜனங்களிடத்தில் குறைந்தபட்சம் தேவன் ஒருவர் இருக்கிறார், இரட்சகர் இருக்கிறார் என்றும், வேதாகமம் அவர்களுக்கான செய்தி என்றும் விழிப்புணர்வை ஏற்படுத்தினர்.

நிச்சயமாகவே, கிறிஸ்துவின் சபையாரால் ஸ்தல ஊழிய முயற்சிகள் மற்றும் அஞ்சல் வழி பாடம் போன்றவைகளால், அநேக போதனைகள் செய்யப்படுகின்றன. கிறிஸ்துவின் சபைகள் உலகின் முக்கியமான நாடுகளில் இருக்கின்றன, முக்கியமான பட்டணங்களிலும், எண்ணற்ற சிறிய பட்டணங்களிலும் காணப்படுகின்றன.

இந்த உண்மைகளோடு கூடுதலாக இலக்கிய பதிப்புகளின் விநியோகம், வானொலி மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் இன்னும் எண்ணற்ற வழிகளில் கிறிஸ்துவின் போதனைகள் அறிவிக்கப்பட்டு வருகின்றன. வேதாகம செய்தி அதன் முழு சத்தியத்தோடு உலகில் உள்ள பெரும்பாலான மக்களிடத்தில் சென்றடைந்து இருக்கிறது. இது மக்கள் மத்தியில் மனிதன் இழந்துபோயிருக்கிறான், அவனுக்கு இரட்சகர் ஒருவர் தேவை என்கின்ற உண்மையைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தியிருக்க வேண்டும். எனவே, இப்படிப்பட்டவர்களிடத்தில் சத்தியம் ஓரளவு அறிவிக்கப்பட்டிருக்கிறபடியால் அவர்கள் தொடந்து அதைப்பற்றிய அறிவை ஏன் வளர்த்துக் கொள்ளவில்லை என்று தேவன் இவர்களிடத்தில் கணக்குக் கேட்பார், இதை நியாயத்தீர்ப்பு தான் வெளிப்படுத்தும்.

ஆனால், நிச்சயமாகவே தேவனுடைய வார்த்தையை எடுத்துச் சென்று இரட்சிப்பின் சுவிசேஷத்தை ஒவ்வொருவருக்கும் அறிவித்து நம்முடைய வேலையை முடிப்பது நம் கடமையாக இருக்கிறது. அறியாமை அல்ல, கிறிஸ்துவின் இரத்தமே பாவத்திலிருந்து ஆத்துமாவை இரட்சிக்கும் வல்லமை உடையதாக இருக்கிறது. ✞

## ஏன் அநேகர் இன்னும் இரட்சிக்கப்படவில்லை

அநேகர் தேவனுடைய வார்த்தையை சாத்தான் தங்கள் இருதயங்களிலிருந்து பரித்துகொள்ள அனுமதிப்பதனால் (மத்தேயு 13:19).

அநேகர் தேவனால் வருகிற மகிமையிலும் மனுஷரால் வருகிற மகிமையை அதிகமாய் விரும்புவதினால் ( யோவான் 12:43 ).

அநேகர் கர்த்தரைவிட குடும்பத்தை அதிகமாக நேசிக்கிறதினால் (மத்தேயு 10: 37 ).

அநேகர் தங்கள் இரட்சிப்பைப்பற்றி கவலையில்லாமல் இருப்பதினால் ( எபிரெயர் 2:4).

# சாறிபாத் விதவை

## WIDOW OF ZAREPHATH

*P.C. Philemon Rajah*

சாறிபாத் என்னும் ஊரில் வாழ்ந்த விதவையிடமிருந்து ஆவிக்குரிய காரியங்களை கற்றுக்கொள்ள நம் மனதை நாம் ஆயத்தப்படுத்துவோம். சாறிபாத் என்னும் ஊருக்கு சரெப்தா என்னும் வேறு பெயரும் உண்டு. இவளது பெயர் வேதாகமத்தில் சொல்லப்படவில்லை. அவளுக்கு ஒரு குமாரன் மாத்திரம் இருந்ததாகச் சொல்லப்பட்டுள்ளது. ஆண்டவருடைய பிரசங்கத்தில் இந்த விதைவையும் இடம் பிடித்ததால், இந்த விதவை எவ்வளவு சிறப்பு வாய்ந்தவள் என்பதை நாம் அறிய முடியும். ஆயினும், எலியா, சீதோன் நாட்டிலுள்ள சரெப்தா ஊரிலிருந்த ஒரு விதவையினிடத்தில் அனுப்பப்பட்டானேயல்லாமல் மற்றொருதியினிடத்திற்கும் அனுப்படவில்லை (லூக் 4 : 26).

நம்முடைய தேவன், விதவைகளைக் குறித்து மிகவும் அக்கறையுள்ளவர் என்பதை நாம் மனதில் கொள்வோம். யாக். 1 : 27 திக்கற்ற பிள்ளைகளும் விதவைகளும் படுகிற உபத்திரவத்திலே அவர்களை விசாரிக்கிறதும், உலகத்தால் கறைபடாதபடிக்குத் தன்னைக் காத்துக்கெள்ளுகிறதுமே பிதாவாகிய தேவனுக்கு முன்பாக மாசில்லாத சுத்தமான பக்தியாயிருக்கிறது.

### 1. இவள் தேவனால் தேர்ந்தெடுக்கப்பட்டவள்

எலியாவை சில நாட்கள் போசிக்கும்படி இவள் தேவனால் தேர்ந்தெடுக்கப்பட்டாள். 1 ராஜா 17 : 9 – ல், நீ எழுந்து, சீதோனுக்கடுத்த சாறிபாத் ஊருக்குப் போய், அங்கே தங்கியிரு ; உன்னைப் பராமரிக்கும்படி அங்கே இருக்கிற ஒரு விதவைக்குக் கட்டளையிட்டேன் என்றார்.

நாம் ஒவ்வொருவருமே ஒரு நோக்கத்திற்காக தேவனால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். ரோமர் 8:30 எவர்களை முன்குறித்தாரோ அவர்களை அழைத்துமிருக்கிறார். எவர்களை அழைத்தாரோ அவர்களை நீதிமான்களாக்கியுமிருக்கிறார். மேலும் நாம், தேவனால் பிடிக்கப்பட்டவர்கள், பிரித்தெடுக்கப்பட்டவர்கள். பிலி 3 : 12 நான் அடைந்தாயிற்று, அல்லது முற்றும் தேறினவனானேன் என்று எண்ணாமல், கிறிஸ்து இயேசுவினால் நான் எதற்காகப் பிடிக்கப்பட்டேனோ அதை நான் பிடித்துக்கொள்ளும்படி

ஆசையாய்த் தொடருகிறேன். நாம் ஒரு தூய்மையான, களங்கமில்லாத நோக்கத்திற்காக அழைக்கப்பட்டவர்கள். I யோவான் 2 : 25 நித்தியஜீவனை அளிப்பேன் என்பதே அவர் நமக்குச் செய்த வாக்குத்தத்தம்.

**2. அவள் தேவனுடைய கைகளில் தன்னை வெள்ளை காகிதமாக ஒப்படைத்தாள்.**

தேவனுடைய அழைப்பை ஏற்று அவர் பின்னே வருகிற நம்மிடம் தேவன் எதிர்பார்ப்பது இந்தக் குணத்தைத் தான். அவள் தன்னை முழுவதுமாக தேவசித்தத்திற்கு ஒப்புக்கொடுத்தாள். அந்த ஒப்புக்கொடுத்தலில் நிலை நிற்கவும் செய்தாள். 1 ராஜா 17 : 13 அப்பொழுது எலியா அவளைப் பார்த்து: பயப்படாதே, நீ போய் உன் வார்த்தையின்படி ஆயத்தப்படுத்து, ஆனாலும் முதல் அதிலே எனக்கு ஒரு சிறிய அடையைப் பண்ணி என்னிடத்தில் கொண்டுவா, பின்பு உனக்கும் உன் குமாரனுக்கும் பண்ணலாம்.

செய் என்றார், செய்து நின்றாள் ! 1 ராஜா 17 : 15 அவள் போய், எலியாவின் சொற்படி செய்தாள், அவளும், இவனும், அவள் வீட்டாரும் அநேக நாள் சாப்பிட்டார்கள். தேவன் அவர் விருப்பப்படி நம்மை பயன்படுத்துவதற்கும், நாம் விரும்புகிறபடி தேவனுக்கு பயனுள்ளவர்களாக இருப்பதற்கும் வித்தியாசம் உண்டு. நம்மை தேவன் அவருடைய சித்ததின்படியும் பயன்படுத்துவார், நம்முடைய விருப்பத்தின்படியும் அனுமதிப்பார். நம்மை எப்படி பயன்படுத்த வேண்டும் என்ற கோரிக்கைகளுடன் தேவனிடம் நெருங்க வேண்டாம். நம்மை அவர் சித்தப்படி பயன்படுத்த அவருக்கு முழு உரிமை இருக்கிறது அல்லவா ?

ஏசா 64 : 8 இப்பொழுதும் கர்த்தாவே, நீர் எங்களுடைய பிதா, நாங்கள் களிமண்; நீர் எங்களை உருவாக்குகிறவர், நாங்கள் அனைவரும் உமது கரத்தின் கிரியை. நாம் தேவனுடைய கரங்களில் வெள்ளைக் காகிதமா? சிந்திப்போம் !

**3. தேவன், தனது நிலையை விட பெரியவர் என அறிந்திருந்தாள்.**

இங்கே சூழ்நிலைக்கு அவள் கட்டுப்படாமல், சூழ்நிலையைக் கட்டுப்படுத்தினாள் மீறினாள், தோற்கடித்தாள். அவள் நிலை என்பது வறுமை, தேசத்திலே பஞ்சம், சரீரத்திலே பசி, நாளை என்பது மரணமாக இருந்தது.1 ராஜா 17 : 12 அதற்கு அவள்: பானையில் ஒரு அடையும் இல்லையென்று உம்முடைய தேவனாகிய கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன்; இதோ, நானும் என் குமாரனும் சாப்பிட்டுச் செத்துபோக, அதை எனக்கும் அவனுக்கும் ஆயத்தப்படுத்துகிறதற்கு இரண்டு விறகு பொறுக்குகிறேன் என்றாள்.

தனது நிலையிலிருந்து தேவனை அதிகம் நேசித்தாள், மற்றும் விசுவாசித்தாள். தன்னுடைய காலங்கள் கர்த்தருடைய கரங்களில் இருக்கிறது என்பதை உணர்ந்திருந்தாள். சங் 31 : 15 என் காலங்கள் உமது கரத்திலிருக்கிறது; என் சத்துருக்களின் கைக்கும் என்னைத் துன்பப்படுத்துகிறவர்களின் கைக்கும் என்னைத் தப்புவியும்.

சூழ்நிலை எல்லாம் சாதகமாக அமையும்பொழுது, கர்த்தருக்குக் கீழ்படிவது என்பது, உண்மையான கீழ்படிதலாகவோ, அன்பாவோ, நாம் தேவனை சார்ந்தவர்கள் என்பதாகவோ இருக்க முடியாது. அவைகள் நமக்கு எதிரே அணியணியாய் வந்தாலும் நாம் தேவனுக்கு தொடர்ந்து கீழ்படியும் பொழுதுதான், நாம் முற்றிலும் தேவனை சார்ந்தவர்கள் என்பதையும், தேவனை உண்மையாகவே நேசிக்கிறோம் என்பதையும் வெளிப்படுத்த முடியும்.

ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான். எப்பொழுது? அவனும் அவன் மனைவியும் குழந்தை பெற்றெடுக்கத் தகுதியற்ற சூழ்நிலையில். ரோமர் 4 : 19 - 21 அவன் விசுவாசத்திலே பலவீனமாயிருக்கவில்லை; அவன் ஏறக்குறைய நூறுவயதுள்ளவனாயிருக்கும்போது, தன் சரீரம் செத்துப்போனதையும் சாராளுடைய கர்ப்பம் செத்துப்போனதையும் எண்ணாதிருந்தான். தேவன் வாக்குத்தத்தம் பண்ணினதை நிறைவேற்ற வல்லவராயிருக்கிறாரென்று முழு நிச்சயமாய் நம்பி, தேவனை மகிமைப்படுத்தி, விசுவாசத்தில் வல்லவனானான். இவள் அல்லவோ ஆபிரகாமின் குமாரத்தி ! நம் வாழ்வில் இயேசு மட்டுமே பெரியவரா ? அல்லது பெரியவர்களில் இயேசுவும் ஒருவரா?

**4. அவள் தன் ஜீவனை விட தேவனை நேசித்தாள்.**

அவளிடம் இருந்த அந்த ஒரு கை மாவு தான் அவளுக்கும் அவளுடைய மகனுக்கும் ஜீவன். ஆயினும் அதையும் அவள் இழக்க தயாரானாள். தேவசத்தம் அவள் காதில் கேளாதவரை,அந்த மாவை தனக்கு ஜீவனாக எண்ணினாள். அது தேவனுக்கு தேவை என்று கேட்டவுடன் அதை இழக்கத் துணிந்தாள். இயேசுவுக்கு உயிரையே கொடுப்பேன் என்பதனை, இவள் இங்கே செயல் விளக்கப்படுத்தினாள்.

நாமும் இயேசுவுக்கு உயிரையே கொடுப்பேன் என்று கூறுகிறோம். ஆனால், அதை செயல்விளக்கப்படுத்தத் தவறுகிறோம். ஏனெனில், நம்மில் ஜீவனை கொடுக்கத் துணிந்தவர்கள் எத்தனையோ பேர், தங்கள் நேரத்தையோ, சரீர சௌகரியத்தையோ கொடுக்கத் தவறுகிறோம். மேலும், அந்தத் தவறை தொடர்ந்து செய்ய நமக்கு நாமே நியாயமான காரியங்களைச் சேகரிக்கிறோம். எபி 12 : 4 பாவத்திற்கு விரோதமாகப் போராடுகிறதில் இரத்தஞ்சிந்தப்படத்தக்கதாக நீங்கள் இன்னும் எதிர்த்து நிற்கவில்லையே !

சாத்தானுக்கு எதிரான இந்தப் போராட்டத்தில் போராட ஆயத்தமா? அப்படியானால், இந்த விதவை போலவும் மற்றும் பவுலைப் போலவும், வைராக்கியம் பற்றி எரிய வேண்டும். அப் 21 : 13 அதற்குப் பவுல்: நீங்கள் அழுது என் இருதயதை ஏன் உடைந்து போகப்பண்ணுகிறீர்கள்? எருசலேமில் நான் கர்த்தராகிய இயேசுவின் நாமத்திற்காகக் கட்டப்படுவதற்கு மாத்திரமல்ல, மரிப்பதற்கும் ஆயத்தமாயிருக்கிறேன் என்றார். நாமும் ஆயத்தம் என்றால், தானியேலைப் போல சிங்கக் கெபியிலே போடப்படலாம், ஸ்தேவானைப் போலக் கல்லெறியப்படலாம்.

மத் 10 : 39 தன் ஜீவனைக் காக்கிறவன் அதை இழந்துபோவான், என்னிமித்தம் தன் ஜீவனை இழந்துபோகிறவன் அதைக் காப்பான். உயிரே போனாலும் பரவாயில்லை, இயேசு தான் உயிர் என்பதாக நம் வாழ்வு இருக்கிறதா? இயேசுவை நம் வாழ்வை விட அதிகமாக நேசிக்கிறோமா? அல்லது நம் வாழ்வை, இயேசுவை விட அதிகம் நேசிக்கிறோமா?

**5. தேவன் தான் எனக்கு எல்லாம் என நிரூபித்தாள்**

அவள் அந்த அப்பத்தை கொடுப்பதால், தான் மட்டுமல்ல தனது மகனும் மரிக்க வேண்டியதாயிருக்கும்; அதற்கும் அவள் துணிந்தாள். நம்மில் அநேகர் கிறிஸ்துவிற்காக நாம் கஷ்டப்பட ஆயத்தமாயிருப்போம். ஆனால் நம்மைச் சார்ந்தவர்கள் கஷ்டப்படுவதை தாங்கக் கூடாதவர்களாயிருப்போம். அப்படி நாம் செய்யும்பொழுது , இயேசுவை விட நம் உறவு தான் எல்லாம் என்று வாயினால் சொல்லாமல், செயலினால் செய்கிறவர்களாயிருப்போம்.

முதலாம் நூற்றாண்டு விசுவாசிகள், நீரோ ராயன், ஆண்டியோகஸ், எபிபேகஸ் மற்றும் டொமிசியன் போன்ற பேரரசர்களின் காலத்தில் தங்களை மட்டுமல்ல, தங்களைச் சார்ந்தவர்களையும் அல்லவா இழந்தார்கள். இந்தியாவில் வந்து ஊழியம் செய்த மிஷனரிமார்களை நினைத்துப் பாருங்கள். தன்னை மட்டுமல்ல தங்கள் இனிய குடும்பத்தையுமே இழந்தார்கள்.

கர்த்தர் அனுமதிக்கிற இன்பத்தை மட்டமல்ல, கர்த்தர் நிமித்தம் வருகிற துன்பத்திற்கும் யோபு, தன்னையும், தன் வீட்டாரையும், தன்னுடைய யாவையும் இழந்தாரல்லவா? யோபு 2 : 10 அதற்கு அவன்: நீ பயித்தியக்காரி பேசுகிறது போலப் பேசுகிறாய்: தேவன் கையிலே நன்மையைப் பெற்ற நாம் தீமையையும் பெறவேண்டாமோ என்றான். இவைகள் எல்லாவற்றிலும் யோபு தன் உதடுகளினால் பாவஞ்செய்யவில்லை. நம் வாழ்வில் எது முன்னுரிமை கொண்டுள்ளது. பணமா? வேலையா? உலகமா? உறவா? நம்முடைய வாழ்வில் இயேசுவே எல்லாமுமாக இருக்கிறாரா அல்லது இருக்ற எல்லாவற்றிலும் அவரையும் ஒருவராக வைத்திருக்கிறோமா? சிந்திப்போம். மனமாற்றம் அடைவோம்! தேவ ஆசீர் பெறுவோம்!! ✞

# என் ஜனம்

# MY PEOPLE

*B. Arjunan*

நீங்கள் உங்கள் தேவனாகிய கர்த்தருக்குப் பரிசுத்தமான ஜனங்கள்; பூமியின் மீதெங்குமுள்ள எல்லா ஜனங்களிலும் உங்களையே கர்த்தர் தமக்குச் சொந்த ஜனங்களாயிருக்கத் தெரிந்துகொண்டார் (உபா. 14:2). கர்த்தர் தம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலரைப் பார்த்து தம்முடைய தீர்க்கதரிசியைக் கொண்டு பேசினார். இன்றைக்கு நீங்கள் இவர்களைப்போல கர்த்தரால் தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்களாயிருக்கிறீர்களா? கர்த்தர் தாம் தெரிந்துகொண்ட ஜனங்களை நேசிக்கவும் போஷிக்கவும் அறிந்திருக்கிறார். அவர்களை எல்லாவிதமான இக்கட்டுகளுக்கும் விடுவித்து அவர்களைக் காக்கிறார். ஆகையால், அவரால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் அவருடைய நாமத்தை பூமியெங்கும் பிரஸ்தாபப்படுத்த வேண்டும். நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக் கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள் என்கிறார் அப்போஸ்தலன் பேதுரு (1பேதுரு 2:9). இப்படித் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் பரிசுத்தமான ஜாதியாகவும், அவருக்குச் சொந்தமான ஜனமாகவும் இருக்கிறார்கள். இது எத்தனை ஆசீர்வாதமான வசனம் என்று பார்த்தீர்களா? இப்படி ஆசீர்வாதத்தைப் பெற்ற ஜாதிவேறே எது? அன்பானவர்களே, இந்தவிதமாக தெரிந்துகொள்ளப்பட்டவர்கள்தான் இஸ்ரவேலர்கள். ஆனால், அவர்களோ, ஜீவனுள்ள தம்மை விட்டுவிட்டார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

என் ஜனங்கள் இரண்டு தீமைகளைச் செய்தார்கள்; ஜீவத்தண்ணீர் ஊற்றாகிய என்னை விட்டுவிட்டார்கள்; தண்ணீர் நிற்காத தொட்டிகளாகிய வெடிப்புள்ள தொட்டிகளைத் தங்களுக்கு வெட்டிக்கொண்டார்கள் (எரே. 2:13). அநேகர், ஜீவனுள்ள தேவனை விட்டு விட்டு தங்களுடைய ஆலோசனைப்படி வாழ்க்கையை மாற்றியமைத்துக்கொள்ளுகிறார்கள். அப்படிப்பட்டவர்களுடைய பிரயாசம் எல்லாம் வீணாய்ப்போய்விடுகிறது. நன்கு

சம்பாத்தியம் பண்ணுகிறார்கள் ஆனால், கடனாளியாக வாழ்கிறார்கள். தங்களுடைய பிரயாசத்தின் பலன் ஒன்றும் நிற்பதில்லை. தண்ணீர் நிற்காத தொட்டிகளைப்போல அவர்களுடைய வாழ்க்கையில் சம்பாதிக்கிற பணம் அவர்ளுக்கு ஆசீர்வாதமாக இருப்பதில்லை. இதற்கு முக்கியக் காரணம் அவர்கள் ஜீவத்திண்ணீர் ஊற்றாகிய தேவனை விட்டுவிட்டார்கள் என்பதே. நீங்கள் உங்களுடைய வாழ்க்கையில் ஜீவத்தண்ணீர் ஊற்றாகிய தேவனையும் அவருடைய உபதேசத்தையும் விட்டுவிடாது காத்துக்கொள்ளுங்கள்.

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து பிதாவைநோக்கி ஜெபிக்கும்போது; நான் இனி உலகத்திலிரேன், இவர்கள் உலகத்திலிருக்கிறார்கள்; நான் உம்மிடத்திற்கு வருகிறேன் பரிசுத்த பிதாவே, நீர் எனக்குத் தந்தவர்கள் நம்மைப்போல் ஒன்றாயிருக்கும்படிக்கு, நீர் அவர்களை உம்முடைய நாமத்தினாலே காத்துக்கொள்ளும் என்று ஜெபித்தார் ( யோவா.17 : 11 ). தேவன், குறிப்பிட்ட ஜனங்களைத் தம்முடைய ஜனங்களாகத் தெரிந்துகொண்டதினிமித்தம், ஆண்டவர் இங்கு ஜெபிக்கும்போது நம்மைபோல் ஒன்றாயிருக்கும்படிக்கு நீர் அவர்களை உம்முடைய நாமத்தினாலே காத்துக்கொள்ளும் என்று ஜெபிக்கிறார். ஆக, ஆண்டவர் இயேசு தம்முடைய ஜனங்களுக்காக மன்றாடியிருக்கிறதை நாம் வாசிக்கிறோம். ஆகவே, நாம் தேவன் தெரிந்துகொண்ட ஜனங்களை நேசிக்கிறோமா? அவர்களுக்காக ஜெபிக்கிறோமா? அப்படிப்பட்டவர்களுக்குக் கர்த்தர் நிமித்தமாக உதவி செய்கிறோமா? என்பதை எண்ணிப்பாருங்கள்.

ரூத் என்ற பெண்ணைக் குறித்து நாம் வேதாகமத்தில் படிக்கிறோம். அவளோ ஒரு புறஜாதிப் பெண். தன் கணவன் இறந்தபின் தனது மாமியார் நகோமியை விடாது பற்றிக்கொண்டாள். நகோமியோ அவளைப்பார்த்து; இதோ, உன் சகோதரி தன் ஜனங்களிடத்துக்கும் தன் தேவர்களிடத்துக்கும் திரும்பிப்போய்விட்டாளே; நீயும் உன் சகோதரியின் பிறகே திரும்பிப்போ என்றாள்; அதற்கு ரூத்: நான் உம்மைப்பின்பற்றாமல் உம்மைவிட்டுத் திரும்பிப்போவதைக்குறித்து, என்னோடே பேசவேண்டாம்; நீர் போகும் இடத்திற்கு நானும் வருவேன்; நீர் தங்கும் இடத்திலே நானும் தங்குவேன்; உம்முடைய ஜனம் என்னுடைய ஜனம்; உம்முடைய தேவன் என்னுடைய தேவன் என்றாள் ( ரூத் 1:16 ). இவளுடைய நம்பிக்கையைப் பார்த்தீர்களா? மற்றவளைப்போல தன் ஜனத்தண்டைக்கும் தன் தேவர்களண்டைக்கும் திரும்பிப்போகாமல், நகோமியை பின்தொடர்ந்தாள். நகோமியின் தேவன் ஜீவனுள்ளதேவன் என்பதையும், நகோமியின் ஜனம் ஆசீர்வதிக்கப்பட்ட ஜனம் என்பதையும் அறிந்திருந்தாள். ஆகையால், நகோமியை விடாது பின்பற்றி உம்முடைய ஜனம் என்னுடைய ஜனம் என்றும் உம்முடைய தேவன் என்னுடைய தேவன் என்றும் எடுத்த தீர்மானத்தில் உறுதியுடனிருந்து

தேவனால் ஆசிர்வதிக்கப்பட்டாள். இந்தவிதமான உறுதி உங்களுக்குள் இருக்கிறதா? ரூத்தைப்போல தேவனுடைய ஜனங்களோடு சோர்ந்துகொண்டு தேவனை ஆராதித்து வருகிறீர்களா? அப்படிச்செய்யும்போது நீங்களும் ரூத்தைப்போல ஆசிர்வதிக்கப்படுவீர்கள்.

ரூத்தைப்போல எஸ்தர் என்ற ஒரு பெண்ணைக் குறித்தும் படிக்கிறோம். அவள் தன் ஜனத்தின்மீது மிகவும் பற்றுள்ளவளாக இருந்தாள். ஆமான் என்று சொல்லக்கூடிய மனுஷன் யூதர்களுக்கு விரோதமான காரியங்களைச் செய்துகொண்டுவந்தான். இதை அறிந்த எஸ்தர் ராஜாவை நோக்கி: ராஜாவுக்குச் சித்தமாயிருந்து அவர் சமுகத்தில் எனக்குக் கிருபை கிடைத்தது, ராஜசமுகத்தில் நான் சொல்லும் வார்த்தை சரியென்று காணப்பட்டு, அவருடைய கண்களுக்கு நான் பிரியமாயிருந்தால், ராஜாவின் நாடுகளிலெல்லாம் இருக்கிற யூதரை அழிக்கவேண்டும் என்று அம்மெதாத்தாவின் குமாரனாகிய ஆமான் என்னும் ஆகாகியன் தீவினையாய் எழுதின கட்டளைகள் செல்லாமற் போகப்பண்ணும்படி எழுதி அனுப்பப்படவேண்டும். என் ஜனத்தின் மேல் வரும் பொல்லாப்பை நான் எப்படிப் பார்க்கக்கூடும்? என் குலத்துக்கு வரும் அழிவை நான் எப்படிச் சகிக்கக்கூடும் என்றாள் ( எஸ்தர் 8:5,6 ). யூத குலத்திலே பிறந்து தன் ஜனங்களுக்கு ஏற்படவிருந்த அழிவை ராஜசமூகத்திற்குத் தெரியப்படுத்தி அதைத் தடுத்து நிறுத்தினாள். அந்நாட்களில் நூற்றி இருபத்தேழு நாடுகளிலே இருந்த யூதர்கள் காக்கப்பட்டார்கள். எஸ்தரைப்போல தேவனுடைய ஜனங்கள் காக்கப்பட நீங்கள் போராடியதுண்டா? என் ஜனத்தின்மேல் வரும் பொல்லாப்பை நாம் எப்படிப்பார்க்கக்கூடும் என்றாள்.

இன்றைய நாட்களில் வாழ்ந்துகொண்டிருக்கிற நாமும் தேவனுடைய ஜனங்களை நேசிக்கவும், அவர்களுக்காக குரல்கொடுக்கவும், நம்மை தூண்டுவதாக இச்செய்தி இருக்கிறதல்லவா. மேலும், அவள் ராஜசமுகத்தில் அவர் அழைத்தால் ஒழிய ஒருவரும் உள்ளே போகக்கூடாது என்ற உத்தரவு இருந்தபோதிலும் நான் செத்தாலும் சாகிறேன் என்று சொல்லி துணிந்து ராஜசமூகத்திற்குச் சென்றாள். அவளுடைய துணிவு தன் ஜனத்தை எவ்வளவாய் நேசித்திருக்கிறாள் என்பதை நமக்கு எடுத்துக்காட்டுகிறது. இன்றைக்கு, நான் வாழ்ந்தால்போதும். நாம், நம்முடைய குடும்பம் என்று வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். தேவனுடைய ஜனங்களைப் பற்றி அக்கறை கொள்வதில்லை. அன்பானவர்களே! தேவன் தம்முடைய ஜனத்தை நேசிக்கிறார். அதைப்போல அவரால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களும் அவருடைய ஜனங்களை நேசிக்கிறதை நாம் காண்கிறோம். அப்படியிருக்கிறபடியால் நாமும் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்களை நேசிக்கவும், அவர்களுக்கு உதவிடவும் வேண்டும். அதை இன்றே உங்களுடைய வாழ்க்கையில் துவங்குங்கள்.

மேலும், இந்த நெகேமியா ஜெபிக்கும்போது, உமது அடியாராகிய இஸ்ரவேல் புத்திரருக்காக இன்று இரவும்பகலும் உமக்கு முன்பாக மன்றாடி, இஸ்ரவேல் புத்திரராகிய நாங்கள் உமக்கு விரோதமாகச் செய்த பாவங்களை அறிக்கையிடுகிற அடியேனுடைய ஜெபத்தைக் கேட்கிறதற்கு, உம்முடைய செவி கவனித்தும், உம்முடைய கண்கள் திறந்தும் இருப்பதாக; நானும் என் தகப்பன் வீட்டாரும் பாவஞ்செய்தோம் என்றான் ( நெகே. 1:6 ). நீங்கள் என்றாவது இந்த நெகேமியாவைப்போல உங்களுடைய ஜனங்களுக்காகவும், நீங்கள் தேவனுக்கு விரோதமாக செய்த பாவங்களை அறிக்கை செய்து ஜெபித்ததுண்டா? தன் ஜனங்கள் இரட்சிக்கப்பட வேண்டும் என்பதற்காக தேவனை நோக்கி மன்றாடினான். நெகேமியாவின் உயர்வான எண்ணத்தைப் பார்த்தீர்களா? இந்தவிதமான சிந்தையில் நாமும் வளர்சியடையவேண்டும். அதுமட்டுமல்ல எருசலேம் பாழாயிருக்கிறதையும், அதின் வாசல்கள் அக்கினியால் சுட்டெரிக்கப்பட்டுக் கிடக்கிறதையும் கண்டு அவைகளைத் திரும்பக் கட்டினான். நெகேமியாவின் முயற்சியினால் அலங்கங்கள் திரும்பக் கட்டப்பட்டது.

அன்பானவர்களே! இங்கே, நெகேமியா மூன்று காரியங்களில் கர்த்தருடைய மக்களை நேசித்திருக்கிறான். முதலாவது அவர்களை அழைத்து பொல்லாதவர்கள் அக்கினியால் அழித்துப்போட்ட எருசலேமின் அலங்கங்களைக் கட்டினான். இன்றைக்கு நாட்டில் என்ன நடக்கிறது என்பதை நாம் அறிவோம். கர்த்தருடைய பிள்ளைகள் எந்த விதமான சூழ்நிலையில் இருக்கிறார்கள் என்பதையும் அறிவோம். நாம் இந்த நெகெமியாவைப்போல ஜெபிக்கவும், அவர்களை விசாரிக்கவும், அவர்களோடு சேர்ந்து கர்த்தருடைய ராஜ்யத்தைக் கட்டவும் செயல்படுவோமானால், நெகேமியாவைப்போல தேவனால் ஆசீர்வதிக்கப்படுவோம்.

ஆகையால் நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத்தக்கதாக, யாவருக்கும், விசேஷமாக விசுவாசக் குடும்பத்தார்களுக்கும் நன்மை செய்யக்கடவோம் ( கலா. 6:10 ). நாம் பொதுவாக உலகத்தில் உள்ள எல்லோரையுமே நேசிக்கக் கற்றுக்கொள்ளவேண்டும். யாரும் நமக்கு வேண்டாதவர்கள் இல்லை. கண்ட சகோதரனிடத்தில் அன்புகூராதவன் காணாத தேவனிடத்தில் எப்படி அன்புகூருவான் என வேதாகமம் கேள்வி எழுப்புகிறது. ஆகையால் நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத்தக்கதாக யாவருக்கும், விசேஷமாக விசுவாசகுடும்பத்தார்களுக்கும் நன்மைசெய்து, தேவனுடைய ஜனங்களை நேசித்து, அவர்களுக்கு நன்மைசெய்ய நாடுங்கள். அப்பொழுது கர்த்தருடைய வாக்குத்தத்த ஆசீர்வாதங்கள் உங்களோடிருந்து உங்களை வழிநடத்தும். ✞

# கிறிஸ்து கற்பித்த சமத்துவம் காப்போம்!

# Equality That Jesus Taught!

*E.Z. Selvanayagam*

நீங்களோ ரபீ என்றழைக்கப்படாதிருங்கள். கிறிஸ்து ஒருவரே உங்களுக்குப் போதகராயிருக்கிறார். நீங்கள் எல்லாரும் சகோதரர்களாயிருக்கிறீர்கள். பூமியிலே ஒருவனையும் உங்கள் பிதா என்று சொல்லாதிருங்கள். பரலோகத்திலிருக்கிற ஒருவரே உங்களுக்குப் பிதாவாயிருக்கிறார். நீங்கள் குருக்கள் என்றும் அழைக்கப்படாதிருங்கள். கிறிஸ்து ஒருவரே உங்களுக்குக் குருவாக இருக்கிறார். உங்களில் பெரியவனாகியிருக்கிறவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக் கடவன் என்று இயேசு தம்மைப் பின்பற்றியவர்களுக்கு அறிவுரை கூறினார். (மத் 23:8-11).

ஆனால், நாம் இன்று காண்பது என்ன? இயேசுவானவர் எவைகளை வேண்டாம் என்று தடை விதித்தாரோ அவைகளை நாங்களும் அவரைப் பின்பற்றுகிறோம் என்று கூறுகிற மக்களே அவைகளை மீறிச்செயல்பட்டுக் கொண்டுவருகிறதைப் பார்க்கிறோம். தேவபக்தியின் வேஷத்தைத் தரித்துக் கொண்டு அவரை வார்த்தையால் மறுதலிக்கிற இந்த மனிதர்கள் அது பற்றி வருத்தப்படவாவது செய்கிறார்களா என்றால் இல்லை என்றே தோன்றுகிறது.

யூத மார்க்கத்தில் உயர்வு தாழ்வுகள், ஒழுங்கு முறைகள், வகுப்பு வித்தியாசங்கள் இருந்தன. ஆசாரியர், லேவியர், சாதாரண மக்கள் என்ற பாகுபாடுகள் இருந்தன. அதேபோன்று, மனிதர்களால் தோற்றுவிக்கப்பட்ட சமயங்களிலும் ஆசாரியத்துவமுறை ( குருக்கள் ) சாதாரண மக்கள் என்ற பாகுபாடு நிலவுகிறது.

மனிதர்கள் அதிகாரத்துக்கும் ஆட்சிக்கும் ஆசைப்படுகிற இயல்புகளை உடையவர்கள். தங்களுடனே வாழும் சக மனிதர்களிடமிருந்து மாலை மரியாதைகளை எதிர்பார்க்கின்றனர். அது நமக்குப் புரிகிறது. ஆனால், கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொள்கிற கூட்டத்தாரும், கிறிஸ்து வேண்டாம் என்று தள்ளின இவ்வேற்றுமை உணர்வுகளை ஊக்குவிக்கும் முறைகளைக்

கூசாமல் பின்பற்றி, உலகப்பிரகாரமாக ஒரு தலைவர், ஒரு தலைமை ஸ்தலம், குருமார்களுக்குள்ளேயே ஏற்றத்தாழ்வு போன்றவைகளை உண்டாக்கி தலைவராயிருப்பவர்களுக்கு மற்றவர்கள் எல்லாம் பணிந்து நடக்குமாறு செய்து திருப்தியடைகின்றனர். இவைகள் மனிதர்களைப் பிரித்துவைத்து, சமத்துவ உணர்வைக் கொல்லுகின்றன, வேறுபடுத்திக் காட்டுகின்றன. ஒருவரை மற்றவர்களைக்காட்டிலும் சிறப்பித்துக் காட்டுகின்றன.

இயேசுபெருமான் தானே முன்மாதிரியாக வாழ்ந்து காட்டி, மக்களுக்கு வகுத்தருளியுள்ள முழு நிறைவான நலம் பயக்கும் சமத்துவக் கோட்பாட்டிற்கும், மனிதத் தலைவர்களால் தோற்றுவிக்கப்பட்டு ஒரு மனிதனை மற்றவர்களைக் காட்டிலும் சிறப்பிக்கிற சமய சித்தாந்தக் கோட்பாட்டிற்கும் உள்ள வேறுபாட்டை ஒப்பு நோக்கிப் பாருங்கள். இயேசுவின் சிந்தனையோட்டத்திற்கும் இவைகள் எல்லாம் எவ்வளவு முரணானவைகள் என்பது எளிதில் நமக்கு விளங்கும்.

கிறிஸ்தவ சமதாயம் என்பது ஒரு குடும்பம். அதிலே அடிமைகளும் ஆண்டான்களும் இல்லை. சிறப்பு வணக்கத்துக்குரியவர்களும் இல்லை, மற்றவர்கள்மீது அதிகாரம் செலுத்தி ஆளுவதற்கு ஒருவருக்கும் உரிமை இல்லை. கடவுளின் நேரடி அன்பின் கீழும், பராமரிப்பின் கீழும் எல்லா மனிதர்களும் சம உரிமையுள்ளவர்களாக இருக்கிறோம்.

கடவுள் முன்னிலையில் ஒருவர் மற்றவர்களை விடப் பெரியவர் அல்லர். கடவுளின் கிருபை, ஆசீர்வாதங்கள் ஆகியவற்றைப் பெறுவதிலும் மனிதர்கள் ஒருவரைவிட மற்றொருவர் சிறப்புச் சலுகை பெற்றவர் அல்லர். கிறிஸ்தவ உறவு முறையிலும் ஒருவர் மற்றவரைவிட பெரியவராக இருக்க இடமில்லை; இருக்க விரும்பவும் கூடாது. ஊழியம் செய்வதில் வேண்டுமனால் ஒருவர் மற்றவரைவிட அதிகமாக ஊழியம் செய்யலாம்; ஊழியத்திலே ஒருவர் பெரியவராக இருக்கலாம்.

எல்லோரும் மூத்த சகோதரராகிய இயேசு கிறிஸ்துவின் அதிகாரத்தின் கீழ் இருக்கிறோம் அவர் மூலமாய் பிதாவிடத்தில் சேருவதற்கு எல்லா மனிதருக்கும் சம உரிமை உண்டு. இயேசு கிறிஸ்துவே, நாம் அறிக்கை பண்ணுகிற அப்போஸ்தலரும் பிரதான ஆசாரியருமாயிருக்கிறார் ( எபி 3:1) அவருக்குக் கீழ் எல்லோரும் சம அந்தஸ்து உள்ள ஆசாரியர்களே (I பேதுரு 2 : 9 : 5 : 1) எந்த மனிதனுக்கும் தன் சகோதரனுக்கும் கடவுளின் சிங்காசனத்துக்கும் மத்தியில் நின்று தன் சகோதரனுக்கு ஓர் ஆசீர்வாதத்தைப் பெற்றுத் தருவதற்கோ அல்லது அதனை மறுப்பதற்கோ அதிகாரம் இல்லை; உரிமையுமில்லை. ஆவிக்குரிய எல்லா வாய்ப்புகளும் ஆசீர்வாதங்களும் குடும்பத்தலைவரின் அதிகாரத்தில் இருக்கின்றன. ஒவ்வொரு அங்கத்தினரும், அவர் அளவிலேயே அவருக்குத் திறந்துவிடப்பட்டுள்ள புதியதும் உயிருள்ளதுமான வழியின் மூலம் அவரிடம் செல்வதற்கு கட்டுப்பாடில்லாத உரிமையுண்டு (எபி 10 : 19-23).

நீங்கள் எல்லோரும் சகோதரர்களே. இதுவே கிறிஸ்து நமக்கு அளித்துள்ள உரிமைப் பத்திரம் : இக்கிறிஸ்தவ ஜனநாயகம் எல்லாவிதத்திலும் காப்பாற்றப்பட வேண்டும். சகோதரர்களுக்குள்ளே உயர்வு , தாழ்வு வேற்றுமைகளைக் கற்பிக்கும் எந்த முயற்சியும் தகர்த்தெறியப்படவேண்டும். கிறிஸ்தவர்களுக்கு அவர்களின் ஒரே தலைவராகிய கிறிஸ்து வழங்கின பொருள் செறிந்ததும், முழுமையும் , எளிமையும் நிறைந்த உரிமைகள், வாய்ப்புகள் பாதுகாக்கப்பட வேண்டும். இயேசுவே வேண்டாம் என்று ஒதுக்கிய ஆசாரியத்துவ முறையைப் புகுத்தி மெய்கிறிஸ்தவத்தின் தூய்மையை மாசுபடுத்தும் எவ்வித முயற்சியையும் அனுமதிக்கக் கூடாது. அப்படி அனுமதித்தால் ஒரு சில சகோதரர்களை ரபீ என்றும், பிதா என்றும், போதகர் என்றும் அழைக்குமாறு கட்டாயப்படுத்துகிறார்கள். இவர்களில் பெரியவர்களாயிருப்பவர்கள் மற்றவர்களுக்கு ஊழியம் செய்வதற்கு பதிலாக தங்களுக்கு ஊழியம் செய்ய மற்றவர்களை நிர்பந்திக்கிறார்கள்.

இத்தொடர் கொடுமைகளை எதிர்த்துக் கொதித்தெழுந்த சில நல்லவர்களின் முயற்சியால் இக்கோணலாட்சி முறைகள் அவ்வப்பொழுது சென்றபின் மீண்டும் சாத்தான் அவர்களை வஞ்சித்து விடுவான். அந்தப் பழைய கோணலாட்சி வேறு ரூபத்தில் துளிர்விடும். மீண்டும் குழப்பம். புதிய பெயரில் ஆதிக்கம் வளரும். கள்ளப் போதகங்கள் உள் நுழையும்.

சகோதரர்களே! இருபத்தோறாம் நூற்றாண்டு பல சாதனைகளைச் செய்து புகழ் பெற்று விளங்குகிறது. மார்க்க விசயத்திலும் ஒரு நல்ல முயற்சியை நாம் ஏன் தொடங்கக்கூடாது? நாம் செய்யவேண்டியது அப்படியொன்றும் பெரிய புரட்சியில்லை; ஏற்கனவே பலர் நமக்கு முன்னோடிகளாக நடந்து காட்டிய பாதையில் நடைபோட வேண்டியது தான். மனோவாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக்கொண்டு காரியங்கள் இப்படி இருக்கிறதா என்று ஆராய்ந்து பார்த்த பெரோயா பட்டணத்தாரைப் போல ( அப் 17 : 11) வேதாகமத்தைக் கவனமாய் ஜெப சிந்தனையுடன் படித்து கிறிஸ்துவின் போதனைகளைக் கீராமல், கிழியாமல், கூட்டாமல், குறைக்காமல் பின்பற்றுவோம்! எவ்வளவு பெரிய மனிதராக இருந்தாலும் சரி, வேதாகம அடிப்படை, ஆதாரம், அங்கீகாரம் இல்லாமல் போடும் எந்தத் தீர்மானத்தையும், உத்தரவுகளையும் புறக்கணிப்போம்.

நினைவிருக்கட்டும், வானத்திலும், பூமியிலும் சகல அதிகாரமும் உள்ள ஒரே தலைவர் இயேசுகிறிஸ்துவே ( மத். 28 : 18 ). அவர் இயற்றிய சட்டங்களை, அவர் போதித்த உயர் நெறிகளை, மாற்றவும், கூட்டவும் குறைக்கவும் எந்த ஒரு மனிதனுக்கும்,குழுவுக்கும் அதிகாரமும், உரிமையுமில்லை. ✞

# மாதிரியின் மாண்பு

## Excellence of the Example

*Benny Martin*

அருமையானவர்களே! இன்றைய நாட்களில் அநேகர் திரைப்பட நட்சத்திரங்களை விளையாட்டு வீரர்களை, அரசியல் தலைவர்களை தங்கள் மாதிரிகளாக ஏற்றுக்கொண்டு செயல்படுகிறார்கள். இதன் காரணமாக பலர் வாழ்க்கை அந்தரங்கத்தில் ஊசலாடிக் கொண்டிருக்கிறதை நம்மால் காண முடியும். நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வைத்துப் போன மாதிரியை நாம் பின்பற்றும்போது, பிரபலமானவர்களின் மாதிரியெல்லாம் அவசியமில்லை, நாம்தான் அவர்களுக்கு ஆதர்ச ஒளியை வீசமுடியும். இருள் சூழ்ந்த இவ்வுகில் சுவிசேஷமென்னும் ஒளியை வீசச்செய்து மாதிரியாக இருப்போம். அப்போஸ்தலனாகிய பவுல் தான் விசுவாசத்தில் பெற்றெடுத்த உத்தமக் குமாரனாகிய தீமோத்தேயுவுக்கு எழுதும் போது நீ வார்த்தையிலும் நடக்கையிலும் அன்பிலும் ஆவியிலும் விசுவாசத்திலும் கற்பிலும் விசுவாசிகளுக்கு மாதிரியாயிரு என்று எழுதுகிறார் ( I தீமோத்தேயு 4 : 12). இங்கே, வாலிபனாகிய தீமோத்தேயு மட்டுமல்ல, விசுவாசியாகிய நாம் ஒவ்வொருவரும் விசுவாசிகளுக்கும் இந்த உலகத்தாருக்கும் மாதிரியாக இருக்க வேண்டுமென்பதைத் தான் இது வலியுறுத்துகிறது. நாம் அப்படிச் செய்யவில்லையென்றால் நம் கிரியைகளினிமித்தம் தேவனுடைய நாமம் துஷிக்கப்படும் (ரோமர் 2: 17, 24). இப்போது நாம் எவைகளிலெல்லாம் விசுவாசிகளுக்கு மாதிரியாக இருக்க வேண்டுமென்று பார்போம்.

**1. வார்த்தையில் மாதிரியாக இருக்கவேண்டும்**

நாம் ஒவ்வொருவரும் பேசுகிற வார்த்தைகளைக் குறித்து ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். நாம் தேவையற்ற வீணான வார்த்தைகளைப் பேசக்கூடாது. நம் வார்த்தைகளை எல்லோரும் கவனிக்கிறார்கள் என்பதை உணர்ந்து பேச வேண்டும். கிறிஸ்தவர்களாகிய நாம் நம் வார்த்தைகளினாலே நீதிமான்கள் என்றும், குற்றவாளிகள் என்றும் தீர்க்கப்படுவோம் ( மத். 12:37 ). எனவே, நாம் கேட்கிறவர்களுக்குப் பிரயோஜனம் உண்டாகும்படி பக்திவிருத்திக்கு ஏதுவாக நல்ல வார்த்தைகளைப்பேசவேண்டும் (எபே 4:29).

**2. நடக்கையில் மாதிரியாக இருக்கவேண்டும்.**

நாம் நம்முடைய நடக்கையில் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குப் பாத்திரமாக இருக்கவேண்டும் ( பிலிப் 1:27 ). இவ்வுலகத்தின் மக்கள் கிறிஸ்துவின் உபதேசத்தை மிக உயர்வாகக் கருதுகிறார்கள். அவர்கள் தத்துவ ஞானிகளின் உபதேசங்களை உதறித் தள்ளிவிட்டு கிறிஸ்துவின் உபதேசத்திற்குச் செவிசாய்க்க வேண்டுமென்றால் நாம் அதற்குப் பாத்திரமாக நடந்து கொள்ள வேண்டும். இன்றைய நாட்களில் அநேக கிறிஸ்தவர்கள் தாறுமாறாக நடந்து கிறிஸ்துவின் உபதேசத்தை தூஷித்துக் கொண்டிருக்கிறார்கள். நாம் நல்நடவடிக்கையினால் அநேகரை கிறிஸ்துவினிடத்தில் வழி நடத்துகிற வாழ்கையை வாழவேண்டும். நாம் பரிசுத்தமாயிருக்க வேண்டும் என்று தேவன் கட்டளையிருகிறார் (I பேதுரு 1:16).

**3. அன்பில் மாதிரியாக இருக்கவேண்டும்.**

நாம் அன்பில் மற்றவர்களுக்கு முன் மாதிரியாக இருக்கவேண்டும். எப்படியெனில், நாம் முழு இருதயத்தோடும் முழுமனதோடும் முழு பலத்தோடும் அன்பு கூருவதில் சிறந்த விளங்கி அதில் விசுவாசிகளுக்கு முன்மாதிரியாக இருக்க வேண்டும். சுத்த இருதயத்தோடே ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்புகூர வேண்டும் என்று வேத வசனம் சொல்லுகிறது (I பேதுரு 1: 22). இதில், சத்துருக்களைச் சிநேகிப்பது உலகத்தின் மக்களால் முடியாத காரியம். எனவே இதில் நாம் மாதிரியாக இருந்து விட்டால் கிறிஸ்தவத்தை நம்மால் உயர்த்திக்காட்ட முடியும். பாவத்தில் மரித்தவர்களை நாம் நேசித்து அவர்களுக்கு சுவிசேஷத்தை அறிவிப்பதினால், இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் அவர்களுடைய பாவங்கள் கழுவப்படமுடியும். அவர்கள் இவ்வுலகிலும் சிறந்த வாழ்க்கையை வாழ முடியும்.

**4. ஆவியில் மாதிரியாக இருக்க வேண்டும்.**

இங்கே ஆவி என்பது மனநிலை அல்லது மனப்பான்மையைக் குறிக்கிறது. விசுவாசிகளாகிய நாம் விட்டுக்கொடுக்கிற மனப்பான்மையைப் பெற்றிருக்க வேண்டும். இன்று நம் மத்தியில் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை அறவே இல்லை என்னும் குற்றச்சாட்டு உண்டு. அதேபோல் நாம் மற்றவர்களிடத்தில் கரிசனை உடையவர்களாக காணப்படவேண்டும். ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து கிறிஸ்துவின் பிரமாணத்தை நிறைவேற்றுகிறவர்களாக இருக்க வேண்டும் (கலா 6: 12). சுருக்கமாகச் சொன்னால், நாம் கிறிஸ்துவின் சிந்தையை உடையவர்களாக இருக்க வேண்டும். இவ்வுலகில் காணப்படும் கூச்சல், குழப்பம், சண்டைகள், யுத்தங்கள் எல்லாவற்றிருக்கும் காரணம் கிறிஸ்துவின் சிந்தை இல்லாதது தான். எல்லோருமே கிறிஸ்துவின் சிந்தையைப் பெற்றுக்கொண்டால் இவ்வுலகம் எவ்வளவு அழகானதாக, இன்பமானதாக இருக்கும் என்பதை சிந்தித்துப்பாருங்கள்.

**5. விசுவாசத்தில் மாதிரியாக இருக்க வேண்டும்.**

நம்முடைய விசுவாசம் மற்றவர்களும் தேவனிடத்தில் விசுவாசமாயிருப்பதற்கு தூண்டுகோலாக அமைய வேண்டும். விசுவாசம் என்பது எபி 11:1 ன்படி நம்பப்படுகிறவைகளின் உறுதியும் காணப்படாதவைகளின் நிச்சியமுமாயிருக்கிறது. வேதாகமத்தில் நாம் பார்க்கும்போது தேவதாசர்கள் தேவன் மீது விசுவாசம் வைத்து வாழ்ந்தார்கள் என்று பார்க்கிறோம். நம் விசுவாசம் மற்றவர்களும் காணத்தக்கதாக இருக்கவேண்டும். நாம் தேவனுடைய சித்தத்தின்படி செய்யும்போது அவர் நமக்குச் செய்த வாக்குத்தத்தங்களையெல்லாம் நிறைவேற்றுவார் என்று விசுவாசிக்க வேண்டும். விசுவாசத்தின் தகப்பனாகிய ஆபிரகாம் விசுவாசத்தினாலே தான் சுதந்தரமாகப் பெறப்போகிற இடத்திற்கு போகும்படி அழைக்கப்பட்டபோது கீழ்ப்படிந்து, தான் போகும் இடம் இன்னதென்று அறியாமல் புறப்பட்டுப் போனான் என்று பார்க்கிறோம் ( எபி 11:8 ). அப்படிப்பட்ட விசுவாசத்தை உடையவர்களாக நாம் இருக்கும்போது பிறர் அதைக் கண்டு தேவனிடத்தில் விசுவாசம் வைப்பதற்குத் தூண்டப்படுவார்கள்.

**6. கற்பில் மாதிரியாக இருக்க வேண்டும்.**

கிறிஸ்தவர்களாகிய நாம் எல்லாவிதத்திலும் நம் கற்பைக் காத்துக் கொள்ள வேண்டும். இந்த உலகம் முழுவதும் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறதென்று நாம் அறிந்திருக்கிறோம். பாவம் நிறைந்த இவ்வுலகில் நம்மை நாம் கறைப்படுத்தாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று தேவன் நம்மிடம் எதிர்பார்க்கிறார். எல்லாவித வேசித்தனத்துக்கும் நாம் விலகியோட வேண்டுமென்று தேவன் நமக்குக் கட்டளையிடுகிறார் (I தீமோ 2:22 ) நம் ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதும் நம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக (I தெச5:23).

பிரியமானவர்களே! மேற்சொல்லப்பட்ட ஆறு காரியங்களிலும் நீங்கள் இவ்வுலகத்தின் மக்களுக்கு மாதிரியாக இருந்தால் பலரை கிறிஸ்துவுக்குள்ளாக உங்களால் வழிநடத்த முடியும். இதினிமித்தம் புறஜாதிகள் மத்தியில் தேவனுடைய நாமம் மகிமைப்படும். எனவே, தீவிரமாக நாம் செயல்பட்டு மற்றவர்களுக்கு மாதிரியைக் காண்பிப்போம். தேவன்தாமே அதற்கு உதவி செய்வாராக! ஆமென். ✞

# கிறிஸ்து எழுந்திருக்கவில்லையென்றால்

## If Christ Be Not Raised

Raymond Elliot

இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் புதிய ஏற்பாட்டின் உபதேசங்களுக்கு முதன்மையான ஒன்றாக இருக்கிறது. புதிய ஏற்பாட்டின் பக்கங்களில் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைப்பற்றி 38 இடங்களில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. குறிப்பாக, அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில் அவர் மரணத்தின் மீது பெற்ற வெற்றியைப் பற்றி 13 முறை குறிப்பிடப்பட்டிருக்கிறது . மேலும், அப்போஸ்தலர்கள் மற்றும் தேவ ஆவியினால் ஏவப்பட்டவர்களின் பிரசங்கத்தின் மையமாக கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் இருக்கிறபடியால் வேதாகமத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கிற அற்புதங்கள் எல்லாம் உண்மை என்று விசுவாசிக்கும் ஒருவரால் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலும் உண்மை என்று விசுவாசிக்க முடியும்.

உயிர்தெழுதலைப் பற்றி விவரமாக அப்போஸ்தலனாகிய பவுல், கொரிந்து பட்டணத்து சபைக்கு எழுதியிருக்கிறார். அதிலே, குறிப்பாக, கர்த்தருடைய வருகையின்போது, நடைபெறும் பொதுவான உயிர்த்தெழுதல் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததை ஆதாரமாகக் கொண்டிருப்பதை நாம் காணமுடியும் . பவுலின் நாட்களில் கிரேக்கர்கள் சரீர உயிர்த்தெழுதலை நம்பவில்லை. அவர்கள், தங்கள் ஆவி, சரீரத்தை விட்டு விடுபடுவதை ஆசீர்வாதமாகக் கருதினார்கள். அதன் விளைவாக, மனித சரீரம் ஒருபோதும் உயிர்தெழாது என ஆணித்தரமான நம்பிக்கை கொண்டிருந்தனர். யூதர்கள் மத்தியில் கூட சதுசேயர் என்ற ஒரு பிரிவினர் உயிர்த்தெழுதல் இல்லை என்று சாதித்தனர் (மத் 22 : 23). ஆனால், வேதம் தனது பரிசுத்த பக்கங்களில் I கொரி 15-ம் அதிகாரத்தில் உயிர்த்தெழுதலைப் பற்றி ஆழமாகப் பதிவுசெய்திருக்கிறது.

கிறிஸ்து மரித்தோரிலிருந்து உயிர்த்தெழவில்லையென்றால் நாம் கீழ்க்காணும் சில மோசமான விளைவுகளைப் பெற்றிருப்போம் என்பதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

**பிரசங்கம் விருதாவாயிருந்திருந்திருக்கும் ( வ.14 )**

அப்போஸ்தல உபதேசத்தின் மையப்பொருள் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலாகும். அதாவது, கிறிஸ்துவானவர் நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு வேதவக்கியங்களின்படி மூன்றாம் நாளிலே உயிர்த்தெழுந்தார் என்று I கொரி. 15 : 3,4 - ம் வசனங்களில் நாம் பார்க்கிறோம். அப்போஸ்தலர்களால் பிரசங்கிக்கப்பட்ட முதல் பிரசங்கமே, கிறிஸ்துவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதலை உள்ளடக்கிய ஒன்றாகத் தான் இருந்தது (அப். 2:24,30,31).

**நம்முடைய விசுவாசம் விருதாவாயிருந்திருந்திருக்கும் ( வ. 14, 17 )**

கிறிஸ்துவின் தெய்வீகத் தன்மையின் மீது நாம் கொண்டிருக்கும் விசுவாசம் அவருடைய உயிர்த்தெழுதலை ஆதாரமாகக் கொண்டுள்ளது. கிறிஸ்து உயிர்த்தெழவில்லையென்றால், அவருடைய வார்த்தைகள் உண்மையில்லாதவைகளாயிருந்திருக்கும் . ஏனென்றால், அவரே தம்முடைய உயிர்த்தெழுதலைக் குறித்து முன்னறிவித்திருக்கிறார். இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக : இந்த ஆலயத்தை இடித்துப்போடுங்கள், மூன்று நாளைக்குள்ளே இதை எழுப்புவேன் என்றார். அப்பொழுது யூதர்கள்: இந்த ஆலயத்தைக் கட்ட நாற்பத்தாறு வருஷம் சென்றதே, நீர் இதை மூன்று நாளைக்குள்ளே எழுப்புவீரோ என்றார்கள். அவரோ தம்முடைய சரீரமாகிய ஆலயத்தைக் குறித்துப் பேசினார். அவர் இப்படிச் சொன்னதை அவர் மரித்தோரிலிருந்தெழுந்த பின்பு அவருடைய சீஷர்கள் நினைவு கூர்ந்து, வேதவாக்கியத்தையும் இயேசு சொன்ன வசனத்தையும் விசுவாசித்தார்கள் ( யோவான் 2 : 19-22 ). கிறிஸ்து மரித்தோரிலிருந்து உயிர்த்தெழாமலிருந்திருப்பாரென்றால் அவர் மரணத்திற்கும், கல்லறைக்கும் கீழ்பட்டவராக இருந்திருப்பார். மாறாக, தேவனுடைய மீட்பின் பணி கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலினாலே நிறைவேற்றப்பட்டது. இதன் விளைவாக, பரிசுத்த ஜீவியம் ஜீவிப்பதற்கான ஆவிக்குரிய வல்லமை உயிர்தெழுதலை விசுவாசிக்கும் ஒவ்வொருக்கும் தேவனால் இன்றளவும் பகிர்ந்தளிக்கப்பட்டு வருகிறது.

நாம் உயிர்த்தெழுந்த இரட்சகரை சேவிக்கிறோம் என்பதற்குச் சான்றாக, அரிமத்திய ஊரானாகிய யோசேப்பிற்குச் சொந்தமான கல்லறை எவ்வித சந்தேகங்களுக்கும் இடமின்றி வெறுமையாக இருக்கிறது !

**நாம் கிறிஸ்துவுக்கு பொய்யான சாட்சிகளாயிருந்திருப்போம் ( வ. 15 )**

அப்போஸ்தலர்கள் தமக்கு சாட்சிகளாயிருக்கும்படி, கிறிஸ்துவால் கட்டளைபெற்றிருந்தார்கள் ( அப். 1 : 8 ). கிறிஸ்து ஒருவேளை உயிர்த்தெழுந்திருந்திருக்கவில்லையென்றால், அப்போஸ்தலர்கள், தாங்கள், உயிர்த்தெழுந்த கிறிஸ்துவை கண்டோம் என்று சொன்னது பொய்யான சாட்சியாக இருந்திருக்கும். அப்படியானால், இந்த இரண்டில் ஏதாவது ஒன்றுதான் உண்மையாக இருக்க வேண்டும். அதாவது கிறிஸ்து உயிர்த்தெழுந்திருக்க வேண்டும் அல்லது அவர் உயிர்த்தெழாமலிருந்திருக்க வேண்டும். கிறிஸ்து உயிர்த்தெழுந்திருந்திருக்காவிட்டால் அப்போஸ்தலர்கள் தங்களை தாங்களே வஞ்சித்துக் கொண்டவர்களாகவும் பொய்யர்களாகவும், உலக மக்களிடையே மிகப்பெரிய ஏமாற்றுக்காரர்களாகவும் இருந்திருந்திருப்பர். இது எவ்வளவு மோசமான சாட்சியாக அப்போஸ்தலர்களுக்கு மக்கள் மத்தியில் இருந்திருக்கும் என்று நினைத்துப் பாருங்கள். ஆகவே, கிறிஸ்துவைப் பற்றிய பொய்யான சாட்சி பகர்வது நம் ஆத்துமாவை காரிருளின் பாதையில் வழிநடத்தி மிகவும் மோசமான அந்தகாரத்திற்குள்ளாக அழைத்துச் சென்றுவிடும். எச்சரிக்கையாயிருப்போம்.

**நாம் இன்னும் பாவங்களிலே தான் இருந்திருப்போம் ( வ. 17 )**

கிறிஸ்து உயிர்தெழவில்லை என்றால் அவர் மீட்பரே அல்ல! மாறாக, கிறிஸ்து நமது பாவங்களுக்காக மரித்து அடக்கம் பண்ணப்பட்டு, உயிர்த்தெழுந்தது உண்மை என்று வேதாகமம் பறைசாற்றுகிறது. ரோமர் 5 : 10-ல் அப்போஸ்தலனாகிய பவுல் இதே கருத்தை உரக்கச் சொல்லுகிறார் கவனியுங்கள் நாம் தேவனுக்குச் சத்துருக்களாயிருக்கையில், அவருடைய குமாரனின் மரணத்தினாலே அவருடனே ஒப்புரவாக்கப்பட்டோமானால், ஒப்புரவாக்கப்பட்பின் நாம் அவருடைய ஜீவனாலே இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே என்று எழுதினார். இன்னுமாக அவர், நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நாம் நீதிமானாக்கப்படும்படி எழுப்பப்பட்டிருக்கிறார் (ரோமர் 4:25).

**கிறிஸ்துவுக்குள் நித்திரையடைந்தவர்களும் கெட்டிருப்பார்கள் (வ.18 )**

கிறிஸ்து உயிர்த்தெழுந்திருக்கவில்லையென்றால், கிறிஸ்துவின் உபதேசத்துக்குக் கீழ்ப்படிந்து அவருக்காக வாழ்ந்து மரித்தவர்களும், இழந்துபோனவர்களாகவே இருந்திருப்பர். இதன் பொருள் அவர்கள் முற்றிலுமாக அழிந்துபோயிருப்பார்கள் என்பதல்ல, மாறாக, அவர்கள்

பிதாவாகிய தேவனுக்கு முன்பாக மத்தியஸ்தர் இல்லாமல் இருந்திருப்பர். அவர்களுக்கு உதவி செய்ய யாரும் இருந்திருக்கமாட்டார்கள். கிறிஸ்து உயிர்த்தெழவில்லையென்றால், அவர்கள் தேவனுடைய சமூகத்தில் பாவம் படிந்த நிலையில் தான் காணப்பட்டிருப்பார்கள். மேலும், கிறிஸ்துவுக்குள் நித்திரையடைந்தவர்கள் என்னும் பதம் வெற்று வார்த்தைகளாகவும், யாருக்கும் எந்தவொரு ஆறுதலையும் தராத அர்த்தமற்ற செயல்பாடாகவும் தான் இருந்திருக்கும். இதுபற்றி இயேசுவின் கூற்றைக் கவனியுங்கள். இதைக்குறித்து நீங்கள் ஆச்சரியப்படவேண்டாம்; ஏனென்றால், பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங் காலம் வரும்; அப்பொழுது, நன்மை செய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமை செய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள் என்று சொன்னார் (யோவான் 5 : 28,29). மேலும் பவுலடியார் I தெச 4 : 13-17 - ம் வசனங்களில், அன்றியும் சகோதரரே, நித்திரையடைந்தவர்களினிமித்தம் நீங்கள் நம்பிக்கையற்றவர்களான மற்றவர்களைப் போலத் துக்கித்து அறிவில்லாதிருக்க எனக்கு மனதில்லை இயேசுவானவர் மரித்தபின்பு எழுந்திருந்தாரென்று விசுவாசிக்கிறோமே; அப்படியே இயேசுவுக்குள் நித்திரையடைந்தவர்களையும் தேவன் அவரோடேகூடக் கொண்டுவருவார் என்று கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை வலியுறுத்திக் கூறியிருக்கிறார்.

அப்போஸ்தலர்கள் மற்றும் தேவ ஆவியினால் ஏவப்பட்ட மனிதர்களுடைய பிரசங்கத்தின் மையப்பொருள் இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் ஆகும்.

**எல்லா மனுஷரைப்பார்க்கிலும் பரிதபிக்கப்படத்தக்கவர்களாயிருந்திருப்போம் ( வ. 19 )**

கிறிஸ்து எழுந்திருக்கவில்லையென்றால், கிறிஸ்துவை விசுவாசிப்பவர்கள் அவிசுவாசியிலும் அதிகக் கேடுள்ளவர்களாயிருந்திருப்பார்கள். கிறிஸ்துவின் மீது தாங்கள் கொண்டிருக்கும் நம்பிக்கையின் காரணமாகப் படும் உபத்திரவங்கள், அடையும் பரிகாசங்கள் எல்லாம் வீணாய்ப்போய், அவர்கள் பரிதபிக்கப்படத்தக்கவர்களாய் இருந்திருப்பர். இங்கே, பவுல் குறிப்பிடுவதைக் கவனிப்போமானால், பரலோகத்தில் தனக்காகக் காத்திருக்கும் நித்தியகன மகிமையோடு தான்பட்ட உபத்திரவங்களை ஒப்பிடும்போது அவைகள் இலேசானது என்று விவரிக்கிறார். மேலும் காணப்படுகிறவைகளையல்ல, காணப்படாதவைகளை நோக்கியிருக்கிற நமக்கு, அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமாக நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது. ஏனெனில், காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள்,

காணப்படாதவைகளோ நித்தியமானவைகள் (கொரி 4 : 17, 18). ஒருவேளை, கிறிஸ்து உயிர்த்தெழுந்திருக்கவில்லையென்றால், இத்தகைய பாடுகளெல்லாம் வீணாகப்போயிருக்கும். அப்படியிராமல், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக. அவர், இயேசு கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்ததினாலே, அழியாததும், மாசற்றதும், வாடாததுமாகிய சுதந்தரத்திற்கேதுவாக ஜீவனுள்ள நம்பிக்கை உண்டாகும்படி தமது மிகுந்த இரக்கத்தின்படியே நம்மை மறுபடியும் ஜெநிப்பித்தார் (I பேது 1 : 3,4) போன்ற விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்கள் கிறிஸ்துவை விசுவாசிக்கும் ஒவ்வொருக்கும் ஆறுதலையும், சமாதானத்தையும் கொடுக்கக்கூடிய ஊன்றுகோலாக இருக்கிறது.

மேலும், இயேசுகிறிஸ்துவின் உயிர்தெழுதலை உறுதிசெய்யப்பட்ட உண்மைகளை, பவுலடியார் தனது பரிசுத்த பக்கங்களில் பதிவுசெய்திருக்கிறார். கிறிஸ்துவோ மரித்தோரிலிருந்து, நித்திரையடைந்தவர்களில் முதற் பலனானார். மனுஷனால் மரணம் உண்டானபடியால், மனுஷனால் மரித்தோரின் உயிர்தெழுதலும் உண்டாயிற்று. ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறது போல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள் (I கொரி 15 : 20-22). இதை இன்னும் அதிகமாக உறுதிப்படுத்த, கிறிஸ்து உயிர்த்தெழுந்து பரமேறுவதற்கு முன்பாக நாற்பது நாள் இப்பூமியில் சஞ்சரித்த பொழுது, மரியாள் உட்பட பலருக்கு தரிசனமானதையும் பவுலடியார் (I கொரி 15: 5-9)-ம் வசனங்களில் குறிப்பிட்டிருக்கிறார். ஆகவே, கிறிஸ்து உயிர்த்தெழுந்ததற்கான சான்றுகள் ஆச்சரியப்பட வைக்கின்றன. இந்த உண்மையை விசுவாசிக்கும் ஒவ்வொருவரும் உயிர்த்தெழுதலில் பங்கடைய முடியும் என தேவன் வாக்களித்திருக்கிறார்.

இதினிமித்தம், கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்குப் பிறகு, அப்போஸ்தலர்களுடைய வாழ்க்கை மாறிவிட்டது. கிறிஸ்தவமானது ரோம சாம்ராஜ்யம் மட்டுமல்ல, உலக முழுவதும் அசுரவளர்ச்சி அடைந்தது (ரோமர் 1: 8). இயேசுவானவர் உயிர்த்தெழுந்து இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பிறகும் கூட அவருடைய உயிர்த்தெழுதலின் மீது இன்றளவும் விசுவாசம் வைத்திருக்கும் எண்ணற்ற மக்களிடையே அவருடைய உயிர்த்தெழுதல் மிகுந்த தாக்கத்தை ஏற்டுத்தியிருக்கிறது. எப்படியெனில், முன்னே நீங்கள் பாவத்திற்கு அடிமைகளாயிருந்தம் இப்பொழுது உங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டத்திற்கு நீங்கள் மனப்பூர்வமாய்க் கீழ்ப்படிந்ததினாலே தேவனுக்கு ஸ்தோத்திரம், பாவத்தினின்று நீங்கள் விடுதலையாக்கப்பட்டு, நீதிக்கு அடிமைகளானீர்கள் (ரோமர் 6 : 17,18). ஆகவே, அவருடைய உயிர்த்தெழுதல் சபையின் அஸ்திபாரமாக இருக்கிறபடியால் அதை விசுவாசிப்பவர்களுக்கு அந்த நம்பிக்கை கிறிஸ்துவால் உறுதிசெய்யப்பட்டுள்ளது. ✝

# அன்பின் இனிய சொற்கள்

# Sweet Words Of Love

*Betty Burton Choate*

**நான் உன்னை மீட்டுக்கொண்டேன்**

நீர் என்னை ஒரு பொருட்டென்றெண்ணி
கசப்பான காடியை கணக்கில் கொள்ளாமல்
செந்நீர் சிந்தி என்னை சொந்தமாக்கி
நான் உன்னை மீட்டுக்கொண்டேன்
இதுவல்லவா அன்பின் இனிய வார்த்தை

**நான் உன்னைப் பேர் சொல்லி அழைத்தேன்**

முகமறியா எனக்கு முகவரி கொடுத்ததே
இயேசு என்ற விலையேறப்பெற்ற நாமம்தான்
அப்பழுக்கற்ற அந்நாமத்தை அணிய என்னைத் தகுதிப்படுத்தி
நான் உன்னைப்பேர் சொல்லி அழைத்தேன் என்றீரே
இதுவல்லவா அன்பின் இனிய வார்த்தை

**நீ என்னுடையவன்**

மதிப்பற்ற பொருளை யாரும் விரும்புவதில்லை
மதிப்பற்றவனாக எண்ணப்பட்ட என்னையும்
உம் திருக்கரங்களால் அரவணைத்துக் கொண்டு
நீ என்னுடையவன் என்றீரே
இதுவல்லவா அன்பின் இனிய வார்த்தை

**அன்பின் இனிய வார்த்தைகள்**


நான் உன்னை மீட்டுக்கொண்டேன்
நான் உன்னை பேர்சொல்லி அழைத்தேன்
நீ என்னுடையவன் – இது போதாதா ?

சாட்சியங்கள்

# அவன் தன் கண்களை ஏறெடுத்து.....

# He Lifted up his Eyes...

*Betty Buoton Choate*



ஒரு பிரதான நாளின் பகல் வேளையில் நண்பர்கள் இருவர் சாலையோரம் நடந்து சென்றுகொண்டிருந்தார்கள். அவர்களில் Bob என்பவர் தன் காலடியில் வந்து விழுந்த ஒரு சிறிய காகிதத்தை குனிந்து எடுத்து அது என்னவென்று பார்த்துக் கொண்டிருந்தயோது, அவருடைய நண்பர் Bill என்பவர் இது என்னவென்று கேட்டார். அதற்கு அவருடைய நண்பர் இது ஒன்றும் முக்கியமான தாள் அல்ல, இது ஒரு சிறு பிள்ளையின் பள்ளிக்கூட தாள்தான் ஒருவேளை அது வீட்டுப்பாடமாகக் கூட இருக்கலாம். இதல் அச்சிறுபிள்ளை அத்தாளில் கூட்டல் கணக்கை 2+2=5 என்று தவறாக்க கூட்டியிருப்பதைப் பார்த்து சிரித்து விட்டு, அச்சிறுபிள்ளை அநேகமாக ஒன்றாம் வகுப்பு படிக்கலாம் என்றும் இப்பிள்ளைக்கு எண்களைக் கூட்டுவது எவ்வளவு கடினமான காரியம் என்றும் கூறினார்.

அப்பொழுது அவருடைய நண்பர் Bill என்பவர், இன்று இப்பிள்ளை கணக்கு எழுதியிருக்கியிருக்கிற இக்காகிதம் காலத்தால் உருமாறியிருக்கின்ற ஒரு பொருள் தான் என்றும், அது இலட்சக்கணக்கான ஆண்டுகளாக படிப்படியாக தானாவே உருவாகியிருக்கவேண்டும் என்றும் சொன்னார்.

இக்கருத்தைப் பற்றி Bob தனது எண்ணத்தை வெளிப்படுத்தவும் இல்லை. அதே வேளையில் அவர் அதைப்பற்றி ஒன்றும் சொல்லவும் இல்லை. அவர்களிருவரும் வேறு சில காரிங்கள் பேசிக்கொண்டே சென்று ஒரு மலையில் ஏறினார்கள். அந்த மலையிலிருந்து பார்த்தபோது கண்ணுக்கு எட்டினதூரம் எங்கும் பசுமையான விளைச்சல் நிறைந்த தானியக் கதிர்களைக் கண்டார்கள். அப்பொழுது Bob என்பவர் அதைப்பார்த்து ஆச்சரியப்பட்டு, இத்தனை நிலப்பரப்பில் பயிரிட்டு அதை அறுவடை செய்ய எத்தனை ஆட்கள் , நாட்கள் வேண்டும். இதனை இத்தனை திட்டமாய் செயல்படுத்தின இந்நிலத்தின் விவசாயி ஒரு திறமைசாலியாக இருக்கவேண்டும் என்று கூறினார்.

அதற்கு Bill உங்களுடைய புரிந்துகொள்ளுதல் தவறு. இது ஒரு பண்ணைபோல் காட்சியளிக்கிறது. இதையாரும் உருவாக்கவில்லை, பல இலட்சம் ஆண்டுகளுக்கு முன்பாக தானாகவே இந்நிலத்தில் பாத்திகள் உருவாகி, மண் பண்பட்டபோது தூரத்திலிருந்து வெள்ளத்தால் அடித்துவரப்பட்டு இங்கே ஒதுங்கியதின் விளைவாகத்தான் இங்கே இன்று இதை தானியக் களஞ்சியமாகப் பார்க்கிறீர்கள் என்றார். அதற்கு Bob என்பவர் இதற்கு எந்தயோசனையும், அசாதாரான அறிவும் தேவை இல்லை என்று நீங்கள் சொல்லுகிறீர்களா? என்று கேட்டார். அதற்கு Bill என்பவர். ஆம் இவைகளெல்லாம் தானாகவே நடக்கும் காரியங்களாகும். காலப்போக்கில் எதுவேண்டுமானாலும் நடக்கலாம் என்று பதிலளித்தார்.

இப்படிப் பேசிக்கொண்டே அவர்கள் இருவரும் இன்னொரு மலையில் மேல் ஏறி. அங்கேயிருந்து தூரத்திலிருந்த ஒரு பட்டணத்தைப் பார்த்து Bob என்பவர் இப்பட்டணத்தின் கட்டிடங்களைப் புத்திக்கூர்மையும் நுணுக்கமும் வாய்ந்த கட்டிடக்கலை நிபுணர்கள்தான் வடிவமைத்திருக்க வேண்டும் என்று சொன்னார். அதற்கு Bill என்பவர் அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. உங்களுக்குப் புவியியலும் வேதியியலும் தெரியும் . அவைகள் ஒருங்கிணைந்து இயற்கை விதிகளை உள்ளடக்கியிருக்கியிருக்கின்றன. அந்த விதிகளுக்கு பொருட்களை ஒருங்கிணைக்கும் சக்தி உண்டு. ஆகவே, பல இலட்சக்கணக்கான ஆண்டுகளுக்கும் முன்பாகவே பருவநிலைகளில் மாற்றம் ஏற்பட்டு இக்கட்டிடங்கள் எழும்பியிருக்க வேண்டும். இந்த வடிவமைப்புக்குப் பின்னால் கட்டிடக்கலை நிபுணரெல்லாம் இல்லை எந்த ஒரு நிபுணரும் அஸ்திபாரங்கள் போட்டு இதை எழுப்பவில்லை. காலப்போக்கில் எல்லாமே இயற்கை விதிகளுக்குட்பட்டு உருமாறுகின்றன என்றார்.

இவைகளுக்கு பிறகு ஒரு நாள் இரவில் Bob மற்றும் Bill இருவரும் ஒரு காட்டுக்குள் சென்றனர். அங்கே சென்று ஒரு நீரோடை அருகே கூடாரத்தை அமைத்து தீ மூட்டி சமையல் செய்து சாப்பிட்டனர், பிறகு நெருப்பருகே கை, கால்களை நீட்டி ஓய்வெடுத்தனர். அவ்வேளையில் Bob என்பவர் மிகுந்த யோசனையுடன் நாம் வானத்து நட்சத்திரங்களைப் பார்க்கும் போதெல்லாம் தேவனுடைய மகத்துவத்தையும் மேன்மையையும் எண்ணி மலைத்து போகிறோம். மேலும், விஞ்ஞானிகள் இலட்சக்கனக்கான பால்வழிப்பாதைகள் இருப்பதாக சொல்கிறார்கள், விண்வெளி எல்லையற்றது. ஆனால் அங்கே உள்ள எல்லாவற்றையும் உண்டாக்கும் வல்லமை தேவனுக்கு உண்டு. ஒரு நாள் அவருடைய சமூகத்தில், அவர் இருக்கிற வண்ணமாகவே அவரை தரிசிக்கும் அத்தருணத்தை ஒருவர் எண்ணிப்பார்த்தால் ஆச்சிரியமாயிருக்கும். அவரால் நியாயந்தீர்க்கபடுவதைக் குறித்தும், அவர் கொடுத்த வாழ்க்கையை நாம் எப்படி வாழ்ந்தோம் என்றும் கணக்கு கொடுக்கும் அந்த நாள் என்னமாயிருக்கும்?

ஆனால் Bill வானத்து நட்சத்திரங்களை உற்றுப்பார்த்த போது சிரித்துக் கொண்டே இவைகளெல்லாம் தானாகவே உருவாக ஆயிரத்து நானூறு கோடி வருடங்கள் பிடித்ததை எண்ணி பார்கிறேன் என்று சொன்னதோடு தேவனைப் பற்றி நாம் நினைக்கவே இல்லை என்றும் சொன்னார். மேலும், அவர் நீண்டநாட்களுக்கு முன்பாகவே கடவுள் என்று ஒருவர் இல்லவே இல்லை என்று தன் மனதில் தீர்மானித்துக்கொண்டதாகவும் சொன்னார். வேதாகம எழுத்தாளர்கள் தேவனை மகாப்பெரியவராகவும், மகிமையானவராகவும் போற்றி அவரைச் சுற்றிலும் இருந்தவர்கள் தானகவே அவருடைய பாதத்தில் விழுந்து தொழுதுகொண்டனர் என்று சொல்லும் போது அவர்கள் பொய் சொல்லுகிறார்கள். மகாபெரிய தேவன் என்று யாருமில்லை, இயேசு கிறிஸ்து என்றும் யாருமில்லை என்று Bill சொன்னார்.

அந்த இரவே மரித்துப்போனார். ...அவர் தன் கண்களை ஏறெடுத்து... (லூக்கா 16:19-31) . ✞

தேவனுடைய வார்த்தை

# வேதாகமத்தின் சுருக்கம்

## A Summary Of The Bible

Franklin Camp

வேதாகமத்தை ஒருவர் படிக்கும்போது அதிலுள்ள காரியங்களை ஜாக்கிரதையாகக் கையாள வேண்டும். ஏனென்றால், இப்புத்தகம் ஒரு சாதாரண புத்தகமல்ல, எப்படியெனில், இதை நாம் படிக்கும்போது, நம்மீது இது இரண்டு விதமான தாக்கத்தை ஏற்படுத்துகிறது. முதலாவது, இப்புத்தகத்தை நாம் முறையாகப் படித்து அதை நம் வாழ்வில் நடைமுறைப்படுத்தினால், அது இவ்வாழ்விலும், நித்திய வாழ்விலும் நமக்கு நன்மை பயக்கும். மாறாக, நாம் இதை முறையாக நடைமுறைப்படுத்தாவிட்டால் அது நம் ஆத்துமாவை இழந்துபோகச் செய்துவிடும்.

வேதாகமம் எல்லோருக்குமான ஒரு பொதுவான மற்றும் விசேஷித்த புத்தகமாயிருக்கிறது. இது ஒரு குறிப்பிட்ட மக்களுக்காக எழுதப்பட்ட புத்தகமல்ல. மாறாக, எல்லா சராசரி மனிதனுக்காகவும் எழுதப்பட்ட புத்தகமாகும். மேலும், இப்புத்தகத்தை கல்விமான்களும் படிக்கலாம். ஆனால், அவர்களை மனதில் வைத்து அவர்களுக்காக மாத்திரம் எழுதப்படாமல், எல்லோருக்காகவும் எழுதப்பட்ட ஓர் உன்னதமான பொக்கிஷமாக இப்புத்தகம் திகழ்கிறது (வெளி 1:3)

வேதாகமத்தில் இடம்பெற்றிருக்கிற காரியங்களைக்காட்டிலும், இவ்வுலகில் அதிகமான காரியங்களைத் தெரிந்தவர்கள் ஒருவருமில்லை. அதே வேளையில், ஒருவர் வேதாகமத்தை எந்த அளவுக்குப் படிக்கிறாரோ, அந்த அளவுக்கு அவரால் ஆழமாகவும், விவரமாகவும் காரியங்களைத் தெரிந்துகொள்ளவும் நித்தியத்தைப் பற்றி அறிந்துகொள்ளவும் உதவுகிறது. மேலும், அந்நபர் வேதத்தை முழுமையாகக் கற்றுக்கொண்டு கடைபிடிக்கும்பொழுது அவரால் பயனுள்ள கிறிஸ்தவராக இருக்க முடியும்.

வேதாகம வல்லுநரான Mathew Hendry என்பவர் சொல்லும் போது, வேதவாக்கியங்கள் மனிதனை வானசாஸ்திரிகளாக அல்லது விண்வெளி வீரர்களாக உருவாக்குவதற்காக எழுதப்படாமல், மனிதன் பரிசுத்தவானாக வாழ வேண்டும் என்பதற்காகத்தான் எழுதப்பட்டது என்று சொன்னார்.

அப்போஸ்தலனாகிய பவுலும் தீமோத்தேயுவிடம் நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னை தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு என்று சொன்னதில் ஆச்சரியம் எதுவுமில்லை (II தீமோ. 2:15).

♦ வேதாகமம் தான் இவ்வுலகிலேயே மிகச்சிறந்த புத்தகம். இதை எல்லோரும் எளிதில் வாசித்து பயனடையும்படியான புத்தகமாகத் திகழ்கிறது. வேறெந்த புத்தகத்திலும் இல்லாத உண்மை சத்தியத்தை இதிலே நாம் காணமுடியும்.

♦ வேதாகமம் மாத்திரமே தேவன், உலகம், மனிதன், பாவம், இரட்சிப்பு, இம்மை மற்றும் மறுமையின் வாழ்க்கை போன்றவற்றைப் பற்றி ஆதாரத்துடன் கூடிய தெளிவான விளக்கத்தைக் கொடுக்கிறது.

♦ வேதாகமம் மனிதனுடைய தவறுகளை வெளிப்படுத்தி, பாவங்களை கடுமையாக உணர்த்தி, அவனுடைய பலவீனங்களில் பொறுமையாயிருக்கிறது.

♦ வேதாகமத்தை சொந்தமாக ஒருவர் வைத்துக்கொண்டிருக்கும் போது அவர் தான் இவ்வுலகில் மிகப்பெரிய ஐசுவரியவான். இதனை அறிந்துகொண்டு விசுவாசிக்கும் போது ஜீவனைக் கண்டுகொள்ள முடியும்.

♦ வேதாகமம் தன்னைப் படிப்பவரை ஞானியாக்குகிறது. மேலும் அவர் அதற்குக் கீழ்ப்படியும்போது பெலனைப் பெற்றுக்கொள்கிறார்.

♦ வேதாகமத்தை அறிந்துகொள்வது மட்டும் போதாது. அதை தாம் சரியாக் கையாளுகிறவர்களாக இருந்தால் அதுவே கிறிஸ்தவ வாழ்வின் சாதனையாகும்.

♦ வேதாகமத்தைப் பற்றி ஒருவர் அறிந்திருக்கவில்லையென்றால் அவர் வானசாஸ்திரம், இலக்கியம், இசை, தத்துவஞானம் போன்றவற்றைத் தெரிந்திருந்தாலும் அவர் தன் வாழ்வில் இழந்து போனவராகவே இருக்கிறார்.

♦ வேதாகமத்தை அறிந்து கொள்ள விரும்பும் ஒருவர் தன் வாழ்நாள் பயணத்தில், அதில் இடம்பெற்றிருக்கிற கதாபாத்திரங்கள் மற்றும் அதில் உள்ளடங்கியிருக்கிற உபதேசம் மற்றும் சத்தியங்களைக் கற்றுக்கொண்டு கைக்கொள்ள முயற்சி எடுக்கிறார்.

♦ வேதாகமம் பலருடைய துக்கத்தை நீக்கி மகிழ்ச்சியைத் தரும் புத்தகமாகத் திகழ்கிறது.

♦ வேதாகமத்தைப் படித்து அதைக் கையாளத் தெரிந்தவர் உலகத்திற்கு மிகப்பெரிய சேவை செய்யும் தகுதியைப் பெற்றுவிடுகிறார். பவுல் தீமோத்தேயுவிடம், உன்னை தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு என்று சொன்னார். நம்முடைய ஆசையும் அதுவாகத்தான் இருக்கவேண்டும் என்பதில் ஆச்சரியம் எதுவுமில்லை.

♦ வேதாகமம் நம்மை நாமே காணச்செய்யும் கண்ணாடியாக இருக்கிறது.

♦ வேதாகமம் நாம் சோர்ந்து போகும் வேளையில் பெலனையும், சத்துவத்தையும் கொடுக்கிறது.

♦ வேதாகமம் பேசாத எந்தவொரு வாழ்க்கைச் சம்பவமும் இல்லை.

♦ வேதாகமத்தின் காரியங்களை நாம் எல்லோரும் ஜாக்கிரதையுள்ளவர்களாக செயல்படுத்த, வேதவசனங்கள் நமது வாழ்வை நமக்குக் காட்டி, மெய்யான பரலோக வாழ்வைக் கண்டறியும்படி செய்கிறது. ✞

## ஆறுதல் கிடைப்பதாக

அது ஒரு உணவு விடுதி

வேதாகமத்தை இவ்விடத்தில் வைத்த மனிதனை தேவன் ஆசீர்வதிப்பாராக;

நான் பத்தொன்பது வயது நிரம்பிய ஓர் இளம் பெண் ;

எனக்குத் தாயுமில்லை, தகப்பனுமில்லை ;

இன்று இப்புத்தகம் நான் தவறான முடிவு எடுக்காதபடி

என்னைக் காப்பாற்றியது ;

வேதாகமத்தை யார் அடுத்ததாக வாசிக்கப்போகிறாரோ அவருக்கும்

எனக்குக் கிடைத்த ஆறுதல் கிடைப்பதாக !

# மாதிரியின் வல்லமை

## The Power Of Example Wayne Jackson

Wayne Jackson

கிரேக்க மொழியிலுள்ள புதிய ஏற்பாட்டில் deigma என்னும் சொல் தமிழில் மாதிரி என்னும் பொருளைத் தருகிறது. இவ்வார்த்தையைத் தான் யூதா ஆசிரியர் தனது நிருபத்தில் இவ்விதம் குறிப்பிடுகிறார். அப்படியே சோதோம் கொமோரா பட்டணத்தார்களும், அவைகளைச் சூழ்ந்த பட்டணத்தார்களும், அவர்களைப்போல் விபாசாரம் செய்து, நித்திய அக்கினியின் ஆக்கினையை அடைந்து, திருஷ்டாந்தமாக வைக்கப்பட்டிருக்கிறார்கள் ( யூதா 7 ). அதுபோலவே Hypodeigma என்னும் கிரேக்க பதமும் மாதிரியைக் குறிக்கும் சொல்லாகவே இருக்கிறது. நாம் வனாந்தரத்தில் இஸ்ரவேலர்கள் விழுந்து போனதுபோல் விழுந்து போகக்கூடாது (எபி 4 : 11). இன்னும் Tupos என்னும் கிரேக்கப்பதமும் மாதிரியின் பொருளையே கொடுக்கக்கூடியதாயிருக்கிறது. மூப்பர்கள் மந்தைக்கு மாதிரிகளாக இருக்கவேண்டுமென்று தேவனால் கட்டளை பெற்றிருக்கிறார்கள் (I பேதுரு 5: 3).

### மாதிரியைப் பற்றிய வேதத்தின் கூற்று

மாதிரியின் வல்லமை பற்றி வேதாகம் மிகத் தெளிவாக வலியுறுத்துகிறது. ஏனென்றால், நாம் வேதம் காட்டும் மாதிரியின்படியாக உண்மையாக வாழ்வோமானால் நிச்சயம் தேவனிடத்தில் சேரும் பாக்கியம் உண்டென்று அவருடைய வாக்கியம் சான்றளிக்கிறது. அதுபற்றிய காரியங்கள் சிலவற்றைக் காண்போம்.

### தேவன் மாதிரியாக இருக்கிறார்.

தேவனாகிய கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களைப் பார்த்து நான் பரிசுத்தர் ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள் ( லேவி 19 : 2 ) என்று கட்டளையிட்டார். இதைப்போலவே, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் ஆகையால் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறது போல, நீங்களும் பூரண சற்குணராயிருக்கக்கடவீர்கள் ( மத் 5 : 48 ) என்று போதித்தார்.

இதுபோன்ற தேவனுடைய அன்பும், கிருபையும் தான் தாவீதின் வாழ்க்கையில் ஒரு மாபெரும் உந்துசக்தியாக விளங்கியது. உம்முடைய கிருபை என் கண்களுக்கு முன்பாக இருக்கிறது; உம்முடைய சத்தியத்தில் நடந்து கொள்ளுகிறேன் ( சங். 26 : 3 ). அதுபோல நாமும் ஒருவருக்கொருவர் தயவாயும், மன உருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் நமக்கு மன்னித்ததுபோல நாமும் ஒருவருக்கொருவர் மன்னிக்க வேண்டும் என்பதற்கு மாதிரியாகத்தான் தேவன் நம்முடைய பாவங்களை நமக்கு மன்னித்தார் (எபேசியர் 4 : 32).

## கிறிஸ்து மாதிரியாயிருக்கிறார்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பல்வேறு வழிகளில் நமக்கு ஆச்சரியமூட்டும். நீதியான வாழ்க்கைக்கு மிகச்சிறந்த முன்மாதிரியாக இருக்கிறார். அவர் ஒருபோதும் பாவத்திற்கு அடிபணியாமல் (எபி. 4 : 15), பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுவதில் மகிழ்ச்சியடைந்து ( சங். 40 : 8 ). எப்பொழுதும் பிதாவுக்குப் பிரியமானவைகளைச் செய்து (யோவான் 8 : 29), சேவை செய்வதற்கும், பாடுபடுவதற்கும் நமதாண்டவர் மிகச்சிறந்த முன்மாதிரியாக இருக்கிறார் (யோவான் 13 : 15; I பேதுரு 2 : 2). அப்போஸ்தலர் நடபடிகள் கிறிஸ்துவின் உபதேசத்திற்கு மாதிரியாக வாழ்ந்த பேதுருவும், யோவனும் பேசுகிற தைரியத்தைக் கண்ட யூத ஆட்சியாளர்கள், அவர்கள் இயேசுவுடனேகூட இருந்தவர்களென்று அறிந்துகொண்டார்கள் (அப். 4 : 13). நம் ஆண்டவரைப் பற்றி என்னே பொருத்தமான வர்ணனை ! அப்போஸ்தலர்கள் போலவே நாமும் கிறிஸ்துவின் மாதிரியை நம்மிடமிருந்து வெளிப்படுத்தவும், மற்றவர்கள் கிறிஸ்துவின் உபதேசத்தை நம்மிடம் காணவும் நாமும் அம்முயற்சியின் சிகரத்திற்கு உந்தப்படுவோமாக !

கிறிஸ்தவர்கள் எப்போதுமே நல்ல முன்மாதிரிகளாக இருக்கவேண்டுமென்று தேவன் எதிர்பார்க்கிறார். அப்போஸ்தலன் பவுல் ஆவியானவரால் ஏவப்பட்டு எழுதின தனது நிருபங்களில், உபதேசத்தின்படி வாழ்ந்து, கிறிஸ்துவின் வாழ்க்கையை அப்படியே தங்களது வாழ்வில் பிரதிபலிக்க வேண்டுமென்று வலியுறுத்திக் கூறுகிறார். மேலும், அவர் நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறதுபோல நீங்கள் என்னைப் பின்பற்றுகிறவர்களாயிருங்கள் ( I கொரி. 11 : 1) என்றும் தனது குறிப்பால் உணர்துகிறார். இன்னும், பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதும்போது,

நீ வார்த்தையிலும், நடக்கையிலும், அன்பிலும், ஆவியிலும், விசுவாசத்திலும், கற்பிலும் விசுவாசிகளுக்கு மாதிரியாயிரு என்று உற்சாகப்படுத்துகிறார் ( I தீமோ 4 : 12 ). இவ்வுலகில் நல் முன்மாதிரிக்கு ஈடுஇணை எதுவுமே இல்லை என்பது நிச்சயம். அதனால் தான் அப்போஸ்தலனாகிய பேதுரு, கிறிஸ்தவ பெண்கள், அவிசுவாசியான தன் கணவனுக்கு வாய்வழியாக உபதேசம் பண்ணாமல், பயபக்தியோடுகூடிய தங்கள் கற்புள்ள நடக்கையினாலே தன் கணவனை ஆதாயப்படுத்திக்கொள்ள முடியும் என்று மாதிரியின் வல்லமை பற்றி முழங்குகிறார் (Iபேதுரு 3 : 1). ஆகவே நாம் ஒவ்வொருவரும் நல்ல மாதிரிகளாக ஜீவித்து, இயேசுவின் வழி நடந்து, ஆவிக்குரிய வாழ்வில் அநேகரை ஆதாயப்படுத்தி, பரலோகத்திற்கு மாதிரியாயிருக்கிற கிறிஸ்துவின் சபையிலே அங்கம் பெற செய்து, பரலோகத்தில் தேவகுமாரனாம் கிறிஸ்து ஆயத்தப்படுத்துகின்ற கைவேலையல்லாத நித்திய வீட்டை ஆதாயமாக்க ஆயத்தமாவோம்.

## மாதிரியும் அதிகாரமும்

இன்றைய நாட்களில் அப்போஸ்தலருடைய மாதிரிகள் நம்மைக் கட்டுப்படுத்துகிற ஒன்றாக இருக்கிறதா என்பதைக் குறித்து முரண்பாடான கருத்துக்கள் நிலவுகின்றன. உதாரணமாக, முதல் நூற்றாண்டு சபை வாரத்தின் முதல்நாள் தோறும் கர்த்தருடைய பந்தியை அனுசரித்தது. அது இன்றைய நாட்களில் கிறிஸ்துவின் உபதேச சட்டத்தின்படி கூடிவரும் சபைகளைக் கட்டுப்படுத்துகிற மாதிரியாக இருக்க முடியும் ?

இப்போது நாம் இந்த எளிய கேள்வியை எழுப்புவோம். புதிய ஏற்பாடு, மாதிரி என்னும் செயல் ஒரு அதிகார சக்தியாக இருக்கமுடியும் என்னும் கருத்தை ஆதரிக்கின்றதா? அதற்குமுன், கீழ்காணும் காரியங்களை ஆழ்ந்து சிந்தியுங்கள் 1. அப்போஸ்தலர் 11-ம் அதிகாரத்தில், புறஜாதிகளை சபைக்குள் ஏற்றுக்கொள்வது சம்பந்தமான விவாதத்தில், சகோதரருக்கு முன்பாகப் பேசின பேதுரு, கொர்நேலியுவின் வீட்டாரோடு பரிசுத்த ஆவியானவர் இடைப்பட்டது, புறஜாதிகளும் கிறிஸ்தவர்களாவதற்குத் தகுதி பெற்றிருக்கிறார்கள் என்பதற்கு அத்தாட்சியாயிருக்கிறது; அப்படியிருக்கும்போது, புறஜாதிகளுக்கு சபையில் வாய்ப்பை மறுப்பது தேவனை எதிர்த்து நிற்பதாயிருக்கிறது என்றார். நான் பேசத்தொடங்கினபோது, பரிசுத்த ஆவியானவர் ஆதியிலே நம்மேல் இறங்கினது போலவே, அவர்கள் மேலும் இறங்கினார். யோவான் ஜலத்தினாலே ஞானஸ்நானங் கொடுத்தான், நீங்களோ பரிசுத்த

ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள் என்று கர்த்தர் சொன்ன வார்த்தையை அப்பொழுது நினைவு கூர்ந்தேன். ஆதலால், கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசித்திருக்கிற நமக்கு தேவன் வரத்தை அநுகிரகம் பண்ணியிருக்கும்போது தேவனைத் தடுக்கிறதற்கு நான் எம்மாத்திரம் என்றான் ( அப். 11 : 15-17 ). 2. அப்போஸ்தலர் 15- அம் அதிகாரத்தில் புறஜாதிகள் இரட்சிக்கப்பட விருத்தசேதனம் பண்ணவேண்டுமா? என கேள்வி எழுப்பியபோது, பவுலும், பர்னபாவும், பேதுருவும் புறஜாதிகள் மோசேயின் பிரமாணத்திற்குக் கீழ்ப்படியாமலேயே தேவன் அவர்களுக்கு இரட்சிப்பை நல்கியதை மேற்கோள் காட்டினார்கள். ஆகவே, மாதிரிகள், கிறிஸ்துவுக்குள்ளான நம் ஆவிக்குரிய வாழ்வை கட்டுப்படுத்தத்தான் செய்கின்றன. நீ கிறிஸ்து இயேசுவைப்பற்றிய விசுவாசத்தோடும் அன்போடும் என்னிடத்தில் கேட்டிருக்கிற ஆரோக்கியமான வசனங்களின் சட்டத்தைக்கைக் கொண்டிரு ( II தீமோ. 1:13 ).


இப்போது, கர்த்தருடைய பந்தி சம்பந்தமான கேள்விக்கு நாம் திரும்புவோம். வாரத்தின் முதல் நாளாகிய ஞாயிற்றுக்கிழமையில் கர்த்தருடைய பந்தியில் அப்போஸ்தலர்களும், முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்களும் பங்கெடுத்ததைப் போன்ற முன் மாதிரி இன்றும் நம்மைக் கட்டுப்படுத்துகிறதாக இருக்கிறதா? ( அப். 20 : 7 ). இதற்கான பதிலை நாம் புதிய ஏற்பாட்டில் தேடிப்பார்க்கும் போது, கர்த்தருடைய பந்திக்கும், வாரத்தின் முதல் நாளுக்கும் ஆவிக்குரிய தொடர்பு இருப்பதை நாம் காண முடியும். கர்த்தருடைய பந்தியில் அப்பமும், திராட்சை ரசமும் நம் இரட்சகருடைய மரணத்தைக் குறித்து நம்மை ஆழ்ந்து சிந்திக்க வைக்கிறது ( மத். 26 : 26-28 ). வாரத்தின் முதல் நாளில் கைவிடும்போது அது நம் இரட்சகருடைய உயிர்த்தெழுதலை நமக்கு நினைவுபடுத்துகிறது ( யோவான் 20- ம் அதிகாரம் ). இவைகளையெல்லாம் வைத்து நாம் பார்க்கும்போது கர்த்தருடைய பந்தியை நாம் அனுசரிப்பதற்குச் சரியான நாள் வாரத்தின் முதல் நாளாகிய ஞாயிற்றுக்கிழமை என்னும் முன்மாதிரி நம்மை நிச்சயமாகவே கட்டுப்படுத்துகிறது. ✞

**இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள்; ஏனெனில், கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின் வைத்துப்போனார் (1 பேதுரு 2; 21).**

வசன ஆராய்ச்சி

# ரோமர் 13 : 8 – 14

## *Romans 13 : 8 - 14*



*Jerry Bates*

1. மற்றவர்களிடம் கடன் வாங்குவதில் ஏதாவது தவறு இருக்கிறதா? (வ.8)
2. நாம் ஒருவரிலொருவர் அன்பாயிருந்தால் எதை நிறைவேற்றுகிறோம் என்று பவுல் சொன்னார்? (வ.8)
3. எந்தப் பிரமாணத்தைப் பற்றி பவுல் பேசினார்? (வ.9)
4. பிறனிடத்தில் அன்பு கூருவது என்பதன் பொருள் என்ன? (வ.9)
5. நம்மிடத்தில் அன்பு கூருவதுபோல் பிறனிடத்திலும் அன்பு கூரவேண்டுமென்று சொன்ன இன்னொருவர் யார்?
6. நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாக இருப்பது எது? எப்படி?(வ.10)
7. ஒருவர் எப்போது நித்திரையைவிட்டு எழுந்திருந்து தெளிந்தபுத்தியுள்ள வராயிருக்கவேண்டும்? (வ.11)
8. அந்தகாரக் கிரியை என்பது எதைக் குறிக்கிறது? (வ.12)
9. ஒருவர் ஒளியின் ஆயுதத்தை எப்போது தரித்துக் கொள்ளுகிறார்?(வ.12)
10. பகலிலே நடக்கிறவர்களைப்போல் சீராய் நடப்பது என்பதன் பொருள் என்ன?(வ.13)
11. களியாட்டு என்பதன் பொருள் என்ன?(வ.13)
12. கிறிஸ்துவை தரித்துக்கொள்வதும், ஒளியின் ஆயுதத்தை தரித்துக்கொள்வதும் ஒன்றா ? (வ.12,13,14)
13. ஒருவர் மாம்ச இச்சைகனை நிறைவேற்றிக்கொள்வது தேவனுடைய பார்வையில் சரியானதா?

# ரோமர் 13:8-14

ஒருவரிடத்திலொருவர் அன்புகூருகிற கடனேயல்லாமல். மற்றொன்றிலும் ஒருவனுக்கும் கடன்படாதிருங்கள். பிறனிடத்தில் அன்புகூருகிறவன் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுகிறான். எப்படியென்றால் விபசாரம் செய்யாதிருப்பாயாக, கொலை செய்யாதிருப்பாயாக, களவு செய்யாதிருப்பாயாக, பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக, இச்சியாதிருப்பாயாக என்கிற இந்தக் கற்பனைகளும். வேறே எந்தக் கற்பனையும் உன்னிடத்தில் நீ அன்புகூருகிறது போலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்கிற ஒரே வார்த்தையிலே தொகையாய் அடங்கியிருக்கிறது. அன்பானது பிறனுக்குப் பொல்லாங்கு செய்யாது. ஆதலால் அன்பு நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாயிருக்கிது. நித்திரையைவிட்டு எழுந்திருக்கத்தக்க வேளையாயிற்றென்று, நாம் காலத்தை அறிந்தவர்களாய் இப்படி நடக்கவேண்டும். நாம் விசுவாசிகளானபோது இரட்சிப்பு சமீபமாயிருக்கிறதைப் பார்க்கிலும் இப்பொழுது அது நமக்கு அதிக சமீபமாயிருக்கிறது. இரவு சென்று போயிற்று, பகல் சமீபமாயிற்று. ஆகையால் அந்தகாரத்தின் கிரியைகளை நாம் தள்ளிவிட்டு ஒளியின் ஆயுதங்களைத் தரித்துக் கொள்ளக்கடவோம். வேசித்தனமும் காமவிகாரமும் வாக்குவாதமும் பொறாமையும் உள்ளவர்களாய் நடவாமல் பகலிலே நடக்கிறவர்கள்போலச் சீராய் நடக்கக்கடவோம். துர்இச்சைகளுக்கு இடமாகஉடலைப் பேணாமலிருந்து, கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைத் தரித்துக்கொள்ளுங்கள்.

**குறிப்பு :**

இந்த வசனப்பகுதி இரண்டு பிரிவுகளைக் கொண்டுள்ளது. முற்பகுதி நாம் பிறரிடத்தில் அன்புகூருவதைப் பற்றி பேசுகிறது. பிற்பகுதி பரிசுத்தத்தைப் பற்றி பேசுகிறது. இங்கே பவுல், நாம் ஒவ்வொருவரும் நம்மில் அன்பு கூருவதுபோல் பிறரிடத்திலும் அன்புகூரவேண்டுமென்று சொல்லுகிறார். இதினிமித்தம் நாம் ஒவ்வொருவரும் ஒருவருக்கொருவர் அன்பெனும் கடன்பட்டிருக்கிறோம். ஆனபோதிலும், மற்றவர்களிடம் போதுமான அளவு அன்புகூர்ந்து விட்டோமென்று ஒருபோதும் வாழ்க்கையின் எந்தவொரு கட்டத்திலும் நாம் சொல்லவே முடியாது. மாறாக, அன்பானது பிறருக்கு தீங்கிழைக்க நம்மை ஒருபோதும் அனுமதிக்காது என்பதால், நாம் ஒருவருக்கொருவர் அன்புகூருகிறபொழுது அதினிமித்தம் தேவனுடைய பிரமாணங்களை நிறைவேற்றுகிறவர்களாயிருக்கிறோம்.

பவுல் இவ்வசனப்பகுதியின் இரண்டாவது பகுதியில் நாம் விழித்துக்கொள்ள வேண்டுமென்று நம்மை உற்சாகப்படுத்துகிறார். இந்த வசனங்களில் விசுவாசிகள் நித்திரை பண்ணுகிறவர்களாக விவரிக்கப்பட்டிருக்கிறார்கள். ஏனென்றால், அவர்கள் நாம் யாரும் பூரணரல்ல என்று செல்லி தங்கள் பாவங்களை நியாயப்படுத்துகிறவர்களாக இருந்தனர். இது அவர்களின் வாழ்வில் அவசர நிலையைக் காட்டுகிறது இங்கே பாவம் என்பது அந்தகாரக் கிரியையாயிருக்கிறது. ஆகவே, நாம் எல்லா அந்தகாரக் கிரியைகளையும் விட்டு விட்டு பகலுக்கேற்ற வாழ்க்கை முறையை அமைத்துக்கொள்ள வோண்டும்.

பவுல் மூன்று வகையான பாவங்களைக் குறிப்பிடுகிறார். இங்கே குறிப்பிட்டிருக்கும் பாவங்களில் கிறிஸ்தவர்களும் மூழ்க முடியும் என்றே இவ்வசனப் பகுதி நமக்குக் காட்டுகிறது. இருந்தபோதிலும், இத்தகைய பாவங்களுக்கு ஒருபோதும் நாம் உட்பட்டுவிடக்கூடாது. ஒருவேளை உட்பட்டுவிட்டோமானால் அதற்கு நாம் கூறும் சாக்குபோக்குகளைத் தேவன் ஏற்றுக் கொள்ளமாட்டார். ஆகவே, இயேசு இப்பூமியில் வாழ்ந்த நாட்களில் தாம் சுயமாய் ஒன்றும் செய்யாமல் பிதாவின் சித்தத்திற்கு தம்மை முழுமையாக ஒப்புக்கொடுத்து வாழ்ந்தாரோ அப்படிப்பட்ட குணாதிசயத்தை நாமும் வெளிப்படுத்தி நம்முடைய பக்தி வாழ்வை கிறிஸ்துவின் உபதேசத்தின்படி வாழ்ந்து அதை அப்படியே செயல்படுத்தவேண்டும். ✝

## கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் உண்மை

★ நாம் உயிர்த்தெழுந்த இரட்சகரை சேவிக்கிறோம் என்பதற்கு சான்றாக, அரிமத்திய ஊரானாகிய யோசேப்பினுடைய கல்லறை எவ்வித சந்தேகங்களுக்கும் இடமின்றி வெறுமையாக இருக்கிறது!

★ கிறிஸ்துவைப் பற்றிய பொய்யான சாட்சி பகர்வது நம் ஆத்துமாவை காரிருளின் பாதையில் வழிநடத்தி மிகவும் மோசமான அந்தகாரத்திற்குள்ளாக அழைத்துச் சென்றுவிடும்.

★ அவருடைய உயிர்த்தெழுதல் சபையின் அஸ்திபாரமாக இருக்கிறபடியால் அதை விசுவாசிப்பவர்களுக்கு அந்த நம்பிக்கை கிறிஸ்துவால் உறுதிசெய்யப்பட்டுள்ளது.

# இரட்சிப்பின் அடையாளங்கள்

## *The Marks Of Salvation*

*Grady Miller*

நாம் பாவத்திலிருந்து இரட்சிக்கப்பட, தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படியும் அவசியத்தை வேதவாக்கியங்கள் நமக்கு அறிவுறுத்துகின்றன. மேலும், இவ்வுலக வாழ்க்கையில் தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படியாமல் வாழுகின்ற யாராக இருந்தாலும் அவர்கள் இரட்சிக்கப்படுவதில்லை என்னும் உண்மையையும் வேதவசனங்கள் உறுதிசெய்கின்றன.

### I கீழ்ப்படிதல் தேவனுக்கான அன்பின் அடையாளமாக இருக்கிறது.

நமதாண்டவராகிய இயேசுகிறிஸ்து நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளாகக் கைக்கொள்ளுங்கள் என்று போதித்தார் (யோவான் 14 : 15). ஒருவன் என்னில் அன்பாயிருந்தால் அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான், அவனில் என் பிதா அன்பாயிருப்பார். நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம்பண்ணுவோம். என்னில் அன்பாயிராதவன் என் வசனங்களைக் கைக்கொள்ளமாட்டான். நீங்கள் கேட்கிற வசனம் என்னுடையதாயிராமல் என்னை அனுப்பின பிதாவினுடையதாயிருக்கிறது (யோவான் 14 : 23,24). இந்த வெளிப்படையான வாக்கியங்கள் புரிந்துகொள்வதற்குக் கடினமான ஒன்றல்ல. நாம் மெய்யாகவே இயேசு கிறிஸ்துவினிடத்தில் அன்புகூர்ந்தால் நாம் அவருக்குக் கீழ்ப்படிவோம். நம்முடைய அன்பு நம் வார்த்தைகளினாலல்ல, மாறாக, நம் செய்கைகளினால் தான் வெளிப்படுத்தப்படுகிறது அல்லது நிரூபிக்கப்படுகிறது. ஆகவே, கர்த்தர் மீதான உண்மையான அன்பு கீழ்ப்படிதலுக்கு நேராக நம்மை வழிநடத்தும்.

## II கீழ்ப்படிதல் இரட்சிக்கும் விசுவாசத்தின் அடையாளமாயிருக்கிறது

வேதாகமம் விசுவாசத்தில் உறுதியாயிருந்தவர்களைப் பற்றியும் பெலவீனமாயிருந்தவர்களைப் பற்றியும் பேசுகிறது. அப்படியானால், அவர்களிடையே காணப்பட்ட வித்தியாசம் என்ன? விசுவாசத்தில் உறுதியாயிருந்தவர்கள் தேவனுடைய கட்டளைகளுக்கு அப்படியே கீழ்ப்படிந்தார்கள். விசுவாசத்தில் பெலவீனமாயிருந்தவர்கள் அப்படிச் செய்யவில்லை. இச் செய்கையானது அவ்வளவு சுலபமல்ல. ஆகவே, தேவன்மீதான நம்முடைய அன்பு நம் வார்த்தைகளினாலல்ல, நம் செய்கையின் மூலம் தான் வெளிப்படுத்த வேண்டும். நமதாண்டவராகிய இயேசு கிறிஸ்து, தம்முடைய நாட்களில் வாழ்ந்த விசுவாசமற்ற, கீழ்ப்படியாத மக்களைப் பார்த்து, என்னை ஆண்டவரே ! ஆண்டவரே ! என்று நீங்கள் சொல்லியும், நான் சொல்லுகிறபடி நீங்கள் செய்யாமற்போகிறதென்ன? " என்று கடிந்து கொண்டார் ( லூக்கா 6 : 46 ). பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல் என்னை நோக்கி கர்த்தாவே!கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை என்றும் எச்சரிக்கிறார்(மத்தேயு 7 : 21). இன்னுமாக யாக்கோப்பு ஆசிரியர் ஆபிரகாம் தேவனை விசுவாசித்தது மாத்திரமல்ல தேவன் சொன்னபடி அப்படியே செய்தபடியால் அவருடைய விசுவாசம் பூரணமான விசுவாசம் என்று சாட்சி பகர்ந்தார் (யாக்கோப்பு 2 : 21-23 ). ஆகையால், இரட்சிக்கும் விசுவாசம் கீழ்ப்படிதலை உள்ளடக்கியதாயிருக்கிறது.

***இரட்சிக்கப்படுவதற்கும், அதை அறிந்துகொள்வதற்குமான ஒரே வழி, இயேசு கிறிஸ்வை விசுவாசித்து அவருக்கு கீழ்ப்படிவதுதான். யாருடைய விசுவாசம் கீழ்ப்படிதலுக்குள் வழிநடத்துகிறதோ, அவர்களுக்குத்தான் நித்திய ஜீவனின் வாக்குத்தத்தமும், நிச்சயமும் இருக்கிறது.***

## III கீழ்ப்படிதல்–இரட்சிப்பின் அடையாளமாயிருக்கிறது.

தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான் என்பதும் (I யோவான் 2 : 17), தாம் பூரணரான பின்பு, தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணராகி (எபிரெயர் 5 : 9) என்பதும் மறுக்கமுடியாத ஓர் உண்மையாக இருக்கிறது. அப்போஸ்தலனாகிய பேதுரு, ஆவியினாலே சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து, ஆத்துமாக்களை சுத்தமாக்கிக் கொண்டவர்களுக்கு முதல் நிருபத்தை எழுதுகிறார் (I பேதுரு 1 : 22). இது தொடர்பான மிக முக்கியமான வசனப்பகுதி ரோமர் 6 : 17, 18. முன்னே நீங்கள் பாவத்திற்கு அடிமைகளாயிருந்தும், இப்பொழுது உங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டத்திற்கு நீங்கள் மனபூர்வமாய்க் கீழ்ப்படிந்ததினாலே, தேவனுக்கு ஸ்தோத்திரம். பாவத்தினின்று நீங்கள் விடுதலையாக்கப்பட்டு நீதிக்கு அடிமைகளானீர்கள். இவ்வசனப் பகுதியானது , நாம் விசுவாசித்த உடனேயே பாவத்திலிருந்து விடுதலையாக்கப்படுவதில்லை, மாறாக, நம் விசுவாசம் நம்மைக் கீழ்ப்படிதலுக்குள் வழிநடத்தும்போதுதான் இரட்சிக்கப்படுகிறோம் என்பதற்கு மிகச்சிறந்த சான்றாயிருக்கிறது. உண்மையாக நாம் கீழ்ப்படிகிறவர்களாயிருந்தால் நம் இரட்சிப்பை நாம் நிச்சயத்துக் கொள்ளலாம். அவருடைய கற்பனைகளை நாம் கைக்கொள்ளுகிறவர்களானால், அவரை அறிந்திருக்கிறோமென்பதை அதினால் அறிவோம் (I யோவான் 2 :3). இரட்சிப்பின் நிச்சயம் என்பது ஓர் இனிதான உணர்வாக இருக்கிறது. மேலும், தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொண்டால் நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் என்பதை அறிந்திருக்கிறோம். ஆகவே, கீழ்ப்படிதல் இரட்சிப்பின் அடையாளமாயிருக்கிறது.

இத்தனை வசனங்களைப் படித்த பிறகும் விசுவாசத்தினாலே இரட்சிப்பு என்னும் தவறான உபதேசத்தை ஒருவரால் எப்படிப் பிடித்துக் கொண்டிருக்க முடியும்? இரட்சிக்கப்படுவதற்கும், அதை அறிந்து கொள்வதற்குமான ஒரேவழி இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து அவருக்கு கீழ்ப்படிவதுதான். யாருடைய விசுவாசம் கீழ்ப்படிதலுக்குள் வழிநடத்துகிறதோ அவர்களுக்குத்தான் நித்திய ஜீவனின் வாக்குத்தத்தமும், நிச்சயமும் இருக்கிறது. ✝

# உயிர்
# Life
*Frank Chesser*

தாயின் கருவறையின் அந்தகார இருளிலிருந்து தேவசாயலை உடைய ஓர் அழகான குழந்தை வெளியே வருகிறது. அந்த அழகான குழந்தை பெற்றோரை அன்பென்னும் மகிழ்ச்சிக்கடலில் ஆழ்த்துகிறது. பிறக்க ஒரு காலமுண்டு (பிரசங்கி 3:2).

தவழ்ந்து செல்லும் குழந்தை நடக்க ஆரம்பிக்கிறது. குழந்தைப் பருவத்தின் நாட்கள் நினைவுப் பெட்டகங்களில் நிலைநிறுத்தப்படுகிறது. அதன்பின்பு, அக்குழந்தை இளமைப் பருவத்தை அடைகிறது. இளமைப் பருவத்தில் விதவிதமான ஆடைகள், நண்பர்களோடு சேர்க்கை, பட்டம், வேலை, திருமணம் என்று ஏதேன் தோட்டத்தில் தொடங்கின வாழ்க்கைச் சக்கரம் அதன் மாறாத நிலையில் உருண்டோடிக் கொண்டிருக்கிறது.

அசுரவேகத்தில், கவலையற்ற இளமைப்பருவம், பொறுப்புகளையும், சுமைகளையும் உள்ளடக்கிய முதிர்ச்சியடைந்த பருவத்திற்கு வழிவிடுகிறது. ஒரு குழந்தை வளர்ந்து தகப்பனாகும்போது, நாட்கள் கடினமாகி விடுகிறது. இப்போதெல்லாம், ஒரு நாள் ஒருமணி நேரத்தைப் போல் இருக்கிறது. ஒவ்வொரு வருடமும், நாட்கள் வேகமாகச் சென்றுகொண்டிருக்கின்றன. நாம் கண்ணாடியில் முகத்தைப் பார்க்கும்போது நரைமுடி, கன்னத்தில் குழி, தோல் சுருக்கம் போன்றவற்றைப் பார்த்து நமக்கு வயதாகிவிட்டது என்று வருத்தப்படுகிறோம். நாம் பெற்றோர்கள் என்னும் நிலையில் செலவிடும் நாட்கள் அதிகமாக இருந்தாலும்கூட, நம் வாழ்க்கையை, நாம் சற்றுப் பின்னோக்கிப் பார்க்கும்போது, அவைகள் குறுகிய கால அளவை உடையவைகளாகவே இருக்கின்றன. பேரக்குழந்தைகள், ஓய்வுக்காலம் போன்றவைகளெல்லாம் அன்று கனவாக இருந்தது இன்று நனவாகிவிட்டது. வாழ்க்கைச் சூரியன் அஸ்தமிக்கும் நேரம் நெருங்கிவிட்டது. காலம்

கரைந்துவிட்டது. இப்பொழுது வாலிபம் என்பது ஒரு நினைவாகத்தான் இருக்கிறது. முதல் மனிதனாகிய ஆதாமிலிருந்து வாழ்க்கையின் தன்மையை ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்த யோசுவா இதோ இன்று நான் பூலோகத்தார் எல்லாரும் போகிறவழியே போகிறேன் என்றார் ( யோசுவா 23 : 14 ). நிச்சயமாகவே, எல்லா மனுஷரும் இவ்வழியிலே போகத்தான் வேண்டும். ஒவ்வொரு மனிதனும் வாழ்க்கையை அனுபவிப்பதற்கும் மரணத்தைத் தழுவுவதற்கும் நேரம் உண்டு. இறக்க ஒரு காலமுண்டு (பிரசங்கி 3 : 2).

வாழ்க்கைநிலை சுருங்கும்போது, வாழ்க்கையில் உங்களுக்குக் கொடுக்கப்பட்ட நேரத்தைச் செலவழித்த விதத்தைக் குறித்து நீங்கள் கணக்குக் கொடுக்கவேண்டும். வாழ்க்கைப் பிழைப்புக்காக, செய்யப்பட்ட காரியங்களில் வாழ்க்கையை அமைக்கத் தவறிவிட்டீர்களா? இப்பூமியில் நீங்கள் செலவழித்த அந்தத் தற்காலிகமான நாட்களைக் குறித்து என்ன கணக்குக்கொடுப்பீர்கள், அவைகளை எப்படி நியாயப் படுத்துவீர்கள்?

உங்கள் வாழ்க்கையின் அர்த்தமும், முடிவும் கொஞ்சம் ஆஸ்திகளாகச் சேர்த்ததோடு முடிந்து விட்டதா? உங்கள் வாழ்க்கைப் பயணத்தில் தேவன் உங்களுக்கு அந்நியராக இருந்தாரா? அல்லது உங்கள் உற்ற நண்பனாக இருந்தாரா? சொல்லுங்கள்: ஜீவன், மரணத்திற்கு அடிபணிந்து, காலம் கல்லறைக்கு வழிவிடும்போது, நித்தியத்திற்குப் போக நான் என் ஆத்துமாவை இழக்கவில்லை என்று நம்மால் நிச்சயித்துச் சொல்ல முடியுமா? ✝

## நம் இரட்சகரை சிலுவையிலறைந்த பாவங்கள்

அறியாமை என்னும் பாவம் (அப். 3 : 17)

பகை என்னும் பாவம் (மத் 7 : 20)

பொறாமை என்னும் பாவம் (மாற்கு 5 : 11)

அவிசுவாசம் என்னும் பாவம் (யோவான் 1 : 11)

சுயநலம் என்னும் பாவம் (மத் 26 : 14 – 16)

# வேதாகம ஞானஸ்நானமும் சுவிசேஷ இரட்சிப்பும்

# Bible Baptism And Gospel Salvation

Perry N.Hall

இருப்பத்தொன்றாம் நூற்றாண்டில் இப்போது வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இன்றளவும் உலகம் இன்னும் பாவத்திலிருந்து மீளவில்லை. மக்கள் தொகைப் பெருக்கத்தின் காரணமாக இவ்வுலக வரலாற்றில், முன்பைவிட இப்போது, மனித இனம் கிறிஸ்துவின் இரத்தத்தால் கழுவப்படுவது அதிக அவசியமாயிருக்கிறது. ஆனால், இக்காலகட்டத்தைப் பலர் கிறிஸ்தவத்திற்குப் பிந்தய காலம் என்று அழைக்கின்றனர். அதாவது, இன்று கிறிஸ்தவம் இறங்கு முகமாகக் சென்று கொண்டிருப்பதால் அவர்கள் அப்படி அழைப்பதாகச் சொல்கிறார்கள். இக்கூற்று உண்மையாக இருக்குமானால், அதற்கான காரணம் மனிதன் வேதாகமத்தை தேவனுடைய வார்த்தையாக ஏற்றுக்கொண்டு அதன் உபதேசத்தைப் பின்பற்ற விரும்பமில்லாமல் இருப்பதுதான். மேலும், இன்றைய நாட்களில் நாங்களும் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறோம் என்று சொல்லிக் கொள்பவர்கள் கிறிஸ்தவத்தின் மிக மேன்மையான உபதேசங்களை மறுத்து, தெய்வீக வெளிப்பாட்டுக்கு மாறாக, மனிதனுடைய உபதேசங்களையும், கோட்பாடுகளையும் போதிப்பது வேதனைக்குரிய ஒரு செயலாகும்.

அதிலும் குறிப்பாக, வேதாகம ஞானஸ்நானத்திற்கும் சுவிசேஷ இரட்சிப்பிற்கும் உள்ள தொடர்பு என்னும் பகுதிக்கு வரும்போது இச்செயல் வெளிப்படையாகவே தெரிகிறது. நாங்களும் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறோம் என்று சொல்லிக்கொள்ளும் விசுவாசிகள்கூட, மார்க்கப் பிரிவினைக் கூட்டத்தாரால் போதிக்கப்படும் ஞானஸ்நானத்திற்கு செவிசாய்க்கிறார்களே தவிர, வேதாகம ஞானஸ்நானத்திற்கும்,சுவிசேஷ இரட்சிப்புக்கும் உள்ள தொடர்பை ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள். ஆனால், பரிசுத்த எழுத்துக்களில் பதிந்துள்ளபடி ஒரு பாவி, மனந்திரும்பி முழுக்கு ஞானஸ்நானம் பெறும்பொழுதுதான், இயேசு கிறிஸ்துவின் மரணம் அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலோடு தொடர்பை ஏற்படுத்திக்கொள்ள முடியும் (1கொரி.15:1-4;ரோமர்6:3-6).

இதினிமித்தம் ஒரு பாவிக்கும், இரட்சிப்புக்கும் இடையே தண்ணீர் ஞானஸ்நானம் ஏன் அவசியமாக இருக்கிறது என்பதைக் காண்பது எளிதான காரியமாகும் (மாற்கு 16 : 16 ; I பேதுரு 3 : 20,21). ஞானஸ்நானமானது ஒரு பாவி பாவமன்னிப்பைப் பெற்றுக்கொள்வதற்கு ஓர் பாலமாக இருக்கிறது (அப். 22 : 16) எப்படியெனில், இரட்சிப்பு கிறிஸ்துவுக்குள் இருக்கிறபடியால் (எபே. 1:3; II தீமோ. 2:10) மனந்திரும்பிய ஒருவர் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக முழுக்கு ஞானஸ்நானம் பெறும்பொழுது (ரோமர் 6 : 3). அதனிமித்தம் அவர் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டு (கலா. 3 : 27) புது சிருஷ்டியாகிறார் (II கொரி. 5:17).

ஒருவர் ஞானஸ்நானத்தை ஏற்க மறுத்தால், அவர் சந்தோஷமாக சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்டார் என்று சொல்லமுடியாது. மாறாக, அவர் தனக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டத்திற்கு மனப்பூர்வமாய்க் கீழ்ப்படியும்போது, அக்கீழ்ப்படிதலால் அவர் பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாகி அவர் கிறிஸ்துவை உடையவராகவும் மாறுகிறார் (ரோமர் 6 : 3-18; I கொரி. 1:12,13). மாறாக, அவர் ஞானஸ்நானம் பெறவில்லையென்றால், ஒருபோதும் அவரால் தேவனைப் பற்றும் நல்மனசாட்சியைப் பெற்றுக்கொள்ள முடியாது (I பேதுரு 3:21).

அருமையானவர்களே ! சுவிசேஷம் இரட்சிப்பு உண்டாவதற்கு தேவபெலனாயிருக்கிறபடியால், இரட்சிக்கப்படுவதற்கு அதை நாம் நம் வாழ்க்கையில் செயல்படுத்தவேண்டும். அதாவது அந்த சுவிசேஷத்திற்கு முழுமையாக நம்மை ஒப்புக்கொடுத்து கீழ்ப்படியவேண்டும்! (ரோமர் 1:16 ; 1:5; II தெச. 1 : 7-9 ; எபி. 5 : 8 , 9). ஆகையால், நீங்கள் இன்னும் ஏன் தாமதிக்கிறீர்கள்? எழுந்து வேதாகமம் போதிக்கும் ஞானஸ்நானத்தைப் பெற்று உங்கள் பாவங்கள் போகக் கழுவப்பட்டு அவருடைய சரீரமாகிய சபையிலே அங்கம் வகித்து அவருடைய வருகையிலே அவரோடு கூட கற்புள்ள கன்னிகையாக எடுத்துக்கொள்ளப்பட்டு, நமக்காக ஆயத்தமாக்கப்படும் கைவேலையல்லாத நித்தியவீட்டிலே நித்திய நித்திய காலமாய் அவரோடு கூட ஆளுகை செய்ய ஆயத்தமாவோம். ✝

*விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான் ; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான் (மாற்கு 16 : 16).*

இரட்சிப்பு

# மனிதன் சுவிசேஷத்தை மிஞ்சிவிட்டானா?

## Has Man Outgrown The Gospel?

*Allen Webster*

காலங்கள் மாறுகிறது, இன்றைய புதுமை நாளைய பழமையாகி விடுகிறது. இன்று காலை புதிய செய்தியாகச் சொல்லப்படும் தகவல் மாலையில் பழைய செய்தியாகி விடுகிறது. இந்த வருடம் பிரபலமான ஒரு நிகழ்வு வருங்காலங்களில் அது காணாமல் போய் விடுகிறது.

ஆனால், சத்திய வசனங்கள் என்றும் மாறுவதில்லை என்பது உண்மையாயிருக்கிறது. எப்படியெனில், அது நேற்று எப்படிச் சொல்லப்பட்டதோ, அப்படித்தான் நாளையும் சொல்லப்படும். சத்திய வசனமானது பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறது (யூதா. 3). சிலர், பழங்கால சுவிசேஷத்தை தாங்கள் மிஞ்சிவிட்டதாக எண்ணுகிறார்கள். அவர்கள், பாவம் மற்றும் ஆவிக்குரிய மரணம் போன்ற வார்த்தைகளுக்கு மாற்றாக, சுயஉயர்வு மற்றும் லௌகீகம் போன்ற வார்த்தைகளைப் பயன்படுத்துகிறார்கள். இனிவரும் உலகில் பரலோகத்தை சுதந்தரிப்பதற்காக நிகழ்காலத்தில் தன்னைத்தான் வெறுத்தல் போன்ற கோட்பாடுகளெல்லாம் காலத்தால் கரைந்துபோன ஒன்றாகிவிட்டது. வேதகாம கருத்துக்களான இரத்தத்தில் வல்லமை, கன்னியிடத்தில் பிறந்த மைந்தன், பாவமில்லாதவர், பலி, அற்புதமாக உயிர்த்தெழுந்த இரட்சகர் போன்றவைகளெல்லாம் இன்று பழங்காலத்துச் செய்திகளாகிவிட்டன. நவீனகால தலைமுறைக்கு சுவிசேஷம் தேவையில்லை என்னும் கருத்து நிலவுகிறது. மனிதன் சுவிசேஷத்தை மிஞ்சிவிட்டானா?

**மனிதன் ஆத்துமாவுக்குத் தேவையான ஆகாரத்தைக் கண்டுபிடிக்கும் வரை சுவிசேஷத்தை மிஞ்சமுடியாது.**

காய்கறிகளும் கனிவர்க்கங்களும் ஏவாள், ஏதேன் தோட்டத்தில் சமைக்க ஆரம்பித்ததிலிருந்து, இன்றுவரை நம்முடைய சமயலறையை அலங்கரித்துக் கொண்டுதான் இருக்கின்றன. ஆனால்

அதை யாரும் இவைகள் எல்லாம் பழையதாகி விட்டது என்று சொல்வதில்லை. ஜலப்பிரளத்திற்குப் பிறகு, நோவா இறைச்சித்துண்டை தீயில் சுட்டுத்தான் சாப்பிட்டிருப்பார். ஆனால், ஆயிரக்கணக்கான ஆண்டுகள் கழிந்தபிறகும் கூட, அப்படிப்பட்ட ஆகாரத்தைப் பரிமாறும் உணவகங்களை நோக்கி மக்கள் படையெடுத்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். அது பழங்கால சமையல் முறையென்று சொல்லி யாரும் ஒதுக்குவதில்லையே!

இன்று எது ஆத்துமாவைப் போஷிக்கிறது? நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்களையே சுவிசேஷம் திருப்தியாக்குகிறது (மத்தேயு 5 : 6). கிறிஸ்துவுக்குள் குழந்தைப் பருவத்திலிருப்பவர்கள் முதலில் களங்கமில்லாத சுவிசேஷமாகிய ஞானப்பாலை பருகுகிறார்கள் (I பேதுரு 2 : 2). அதன் பிறகு பலமான ஆகாரத்தை உட்கொள்ளுகிறார்கள் (எபிரெயர் 5 : 12-14). தேவனுடைய ஆத்தும ஆகாரத்திற்கு இணையாக இதுவரை எந்த மனிதனும் எதையும் கண்டுபிடிக்கவில்லை.

மனிதன் மிகப்பெரிய நோயாகிய பாவத்திற்கு பரிகாரத்தைக் கண்டறியும் வரை சுவிசேஷத்தை மிஞ்சமுடியாது.

மருத்துவ சிகிச்சை முறைகள் மோசேயின் காலத்திலிருந்தே இருந்துவருகிறது (லேவி 12 : 1-4 ; உபாகமம் 23 : 10-14). ஆனால் இன்றும், மருத்துவமனைகளும், மருந்தகங்களும் மூடப்படாமல் அவைகள் இயங்கிக்கொண்டுதான் இருக்கின்றன. பாவத்திற்கான பரிகாரமாக மன்னிப்பு என்னும் அடிப்படைத் தேவை இன்றும் நடைமுறையில் இருந்து வருகிறது (ரோமர் 3 : 23 ; 6 : 23). இன்றும் தொற்றுநோய் (பாவம்) நம்மைப் பற்றிக் கொண்டுதான் இருக்கிறது. உள்ளங்கால் தொடங்கி உச்சந்தலைமட்டும் அதிலே சுகமேயில்லை; அது காயமும், வீக்கமும், நொதிக்கிற இரணமுமுள்ளது; அது சீழ் பிதுக்கப்படாமலும், கட்டப்படாமலும், எண்ணெயினால் ஆற்றப்படாமலும் இருக்கிறது (ஏசாயா 1 : 6). ஆனாலும், அப்பாவத்தையே போக்கும் அருமருந்தாய் சுவிசேஷம் அமைந்துள்ளது. கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன்; முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவபெலனாயிருக்கிறது (ரோமர் 1 : 16). ✝

*மனிதனின் பாவத்தைப் போக்கும் அருமருந்தாய்*
**சுவிசேஷம்** உள்ளது.

# இன்றைய உலகில் இன்றைய சபை

## *Today's Church In Today's World*

Greg Tidwell

என் ஆத்துமா அவைகளை நினைத்து நினைத்து எனக்குள் முறிந்து போகிறது. இதை என் மனதிலே வைத்து, நம்பிக்கை கொண்டிருப்பேன். நாம் நிர்மூலமாகாதிருக்கிறது கர்த்தருடைய கிருபையே, அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை. அவைகள் காலைதோறும் புதியவைகள் ; உமது உண்மை பெரியதாயிருக்கிறது. கர்த்தர் என்பங்கு என்று என் ஆத்துமா சொல்லும், ஆகையால், அவரிடத்தில் நம்பிக்கை கொண்டிருப்பேன் ( புலம்பல் 3:20 - 24 ). கிறிஸ்துவம் ஒரு நடப்பு மார்க்கமாகும். எரேமியா தனது வாக்கியங்களில் சொன்னதுபோல தேவனுடைய இரட்சிப்பின் வழியானது காலைதோறும் புதியதாயிருக்கிறது.

என்னுடைய ஆலோசகர் Jim Bill இப்பாடத்தை எனக்குக் கற்றுத் தந்தார். அவருடைய பதிப்பகத்தின் ஊழிய அறிக்கையில் நிகழ்காலத்தில் புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவம் என்று அச்சிடப்பட்டிருந்தது. பெந்தேகொஸ்தே நாளில் சபை ஸ்தாபிக்கப்பட்டபோது, அது தேவன் சொன்ன வாக்கின்படியே கட்டப்பட்டது. பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள் (அப். 2:38).

முதல் நூற்றாண்டில் பாவமன்னிப்பையும், பரிசுத்த ஆவியின் வரத்தையும் அளித்த அந்த சுவிசேஷம், பாவமன்னிப்பையும், பரிசுத்த ஆவியையும் நமக்கு இந்த இருபத்தொன்றாம் நூற்றாண்டிலும் அளிக்கும் வல்லமையுள்ளதாயிருக்கிறது.

இக்கருத்துதான் ஆத்துமாவை மீட்டமைக்கும் சுவிசேஷப் பணியின் மையமாக இருக்கிறது. நாம் ஒரே சுவிசேஷத்தின் உபதேசத்தைப் பின்பற்றினால், அதினால் நமக்கு அநேகப் பலன்கள் கிடைக்கும். அது நம்முடைய ஆத்துமாவுக்கு நல்ல ஔஷதமாகவும் இருக்கும். பலவீனரை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்குப் பலவீனருக்குப் பலவீனனைப் போலானேன். எப்படியாகிலும் சிலரை இரட்சிக்கும்படிக்கு நான் எல்லாருக்கும் எல்லாமானேன். சுவிசேஷத்தில் நான் உடன்பங்காளியாகும்படிக்கு, அதினிமித்தமே இப்படிச்செய்கிறேன் (I கொரி 9:22,23 ).




அப்போஸ்தலனாகிய பவுல் சுவிசேஷத்தைப் போதிப்பதில் மாற்றம் தேவை என்பதை உணர்ந்திருந்தார். ஆனால் அவர் ஒரு போதும் சுவிசேஷத்தையே மாற்றவேண்டுமென்று விரும்பவில்லை. ஏனென்றால், தேவனுடைய தெய்வீகத் தன்மை மாற்றத்திற்கானதல்ல. மாறாக, மாறாத தேவனுடைய வார்த்தையைப் போதிக்கும் முறையில் தான் மாற்றங்கள் தேவை. தேவனுடைய வார்த்தை நித்தியமானதாக, மாறாததாக இருக்கிறபடியால், அவ்வார்த்தைகளைப் போதிக்கும் முறையில் மாற்றத்தைக் கொண்டுவர நம்மை தேவன் அனுமதிக்கிறார். ஆனால், அவருடைய சுவிசேஷத்தோடு கூட்டியோ, குறைத்தோ போதிப்பதை அவர் ஒருபோதும் அனுமதிப்பதே இல்லை.

நாம் இன்று சபையாக கூடி இன்றைய உலகை இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தின் செய்தியைக் கொண்டு தொடும் பொறுப்பைப் பெற்றிருக்கிறோம் என்பதை உணர்ந்து, சுவிசேஷம் உரைக்க உலகின் கடையாந்தரம் மட்டும் செல்ல நம்மை அர்ப்பணித்து ஆத்தும ஆதாயம் செய்வோம் (மத் 28:18-20). ✝

# ஆரோக்கியமான சபை

ஆரோக்கியமான சபை என்பது பார்வைக்கு நன்றாகத் தோற்றமளிக்கும் கட்டிடமல்ல, மாறாக, கிறிஸ்துவின் உபதேச சத்தியத்தால் ஊன்றக் கட்டப்பட்ட ஒருமனப்பாடுள்ள விசுவாசிகளின் கூட்டத்தைக் குறிக்கக்கூடிய ஒன்றாக இருக்கிறது!

## விசுவாசத்திலே ஆரோக்கியமுள்ளவர்களாய் இருக்கும்படி இவைகளை நாடுங்கள்!

| | |
|---|---|
| உபதேசத்தில் ஆரோக்கியம் | தீத்து 2:1 |
| விசுவாசத்தில் ஆரோக்கியம் | தீத்து 1:14 |
| கிரியையில் ஆரோக்கியம் | தீத்து 3:1 |
| ஒருமைப்பாட்டில் ஆரோக்கியம் | யோவான் 17 |
| ஆளுகை அமைப்பில் ஆரோக்கியம் | எபேசியர் 4:11 |
| ஆராதனையில் ஆரோக்கியம் | யோவான் 4:24 |
| கொடுத்தலில் ஆரோக்கியம் | II கொரி 9:7,8 |
| ஜாக்கிரதையில் ஆரோக்கியம் | II கொரி 9:2 |
| தலைமைத்துவத்தில் ஆரோக்கியம் | அப் 20:28-31 |

நீயோ ஆரோக்கியமான உபதேசத்துக்கேற்றவைகளைப் பேசு. [ தீத்து 2:1 ]

# “ உம்முடைய ராஜ்யத்தை நான் நேசிக்கிறேன், கர்த்தவே ”

# " I Love Thy Kingdom, Lord "

Paul White

நாம் தேவனை கிறிஸ்துவின் சபையிலே ஆராதிக்கும்போது பாடும் பாடல்கள் சபையின் பக்திவிருத்திக்கு மிகவும் முக்கியமானதாக இருக்கிறபடியால், நாம் பாடும் பாடலில் இடம்பெற்றுள்ள பாடல் வரிகள் ஒவ்வொன்றையும் நாம் பொருள் உணர்ந்து உள்ளத்தின் ஆழத்திலிருந்து நன்றியோடு பாடவேண்டும். நாம் பாடும் பல பாடல்களில் நம் சிந்தையைத் தூண்டும் வரிகள் இருப்பதை நாம் உணரும் போது மெய்சிலிர்த்துப் போகிறோம். அதிலும் குறிப்பாக சபையைப் பற்றிய பாடல்வரிகள் நம் கவனத்தை ஈர்க்கக்கூடியதாய் இருக்கிறது. சில பாடல் வரிகளை நாம் பார்க்கும்போது

*சபைக்காக நாம் கண்ணீர் சிந்த வேண்டும்*
*சபைக்காக நாம் கண்ணீர் சிந்த வேண்டும்*
*ஜெபங்கள் ஏறெடுக்கப்பட வேண்டும்*
*இவ்வுலகப் பாடுகளும் கவலைகளும் தீரும்வரை*
*சபைக்காக நான் கவலைப்படுவேன்............*

என்றெல்லாம் இடம்பெற்றிருக்கிறது. ஆகவே, சபையைக் குறித்து இப்படிப்பட்ட சிந்தையுடையவர்களாக நாம் இருக்க வேண்டும்.

கீழ்க்காணும் கேள்விகளை ஆழ்ந்து சிந்தித்து நம்மை நாமே நேர்மையாக ஆராய்ந்து பார்ப்போம். நாம் கண்ணீர்விடும் அளவுக்கு சபையை நேசிக்கிறோமா? விழுந்துபோனவர்களைக் குறித்து துக்கப்படுகிறோமா?சபைக்கடுத்த காரியங்களைக் கண்டுகொள்ளாமல் இருப்பதைக்குறித்து கவலைப்படுகிறோமா? ஜெபங்களைக் பற்றி நம் நிலை

என்ன? சபையின் ஆவிக்குரிய மற்றும் சரீரப் பிரகாரமான தேவைகளுக்காகவும், சபையின் ஒற்றுமைக்காகவும், பரிசுத்தத்திற்காகவும், வேதாகமத்தை நேசித்து சபையை வழி நடத்துகிறவர்களுடைய ஆவிக்குரிய மற்றும் சரீர நலனுக்காகவும் நாம் ஜெபிக்கிறோமா? ராஜ்யத்தின் விரிவாக்கப் பணிக்காக நாம் எந்த அளவு பிரயாசப்படுகிறோம்? கர்த்தருடைய வேலையில் ஈடுபாடுடையவர்களாக இருக்கிறோமா? சபைக்கடுத்த பணிகளில் நம்பத்தகுந்தவர்களாக இருக்கிறோமா? ராஜ்யத்துக்கடுத்த காரியங்களில் நாம் கவனம் சிதறாமல் இருக்கவேண்டுமென்றால், ஜாக்கிரதையுள்ளவர்களாக இருக்க வேண்டும். கர்த்தருடைய பணியை நேர்த்தியாகவும், சிறப்பாகவும் செய்யவேண்டுமென்றால், நம் வாழ்க்கையை கர்த்தருக்காக தியாகம் செய்கிறவர்களாய் இருக்க வேண்டும். நம்மால் கர்த்தருக்காக எவைகளைச் செய்யமுடியுமோ அவைகளை முழு பலத்தோடு செய்துவிடவேண்டும்.

சபை அங்கத்தினர்கள் பார்வைக்காக ஏதோ ஒன்றைச் செய்ய வேண்டுமென்று தேவன் ஒருபோதும் விரும்புவதில்லை. இப்படிச் செய்வது வெறுமனே சபையில் கூட்டத்தைக் காட்டுமே தவிர வேறொன்றையும் செய்யாது. மாறாக, சக விசுவாசிகளை சத்தியவசனத்தில் ஊக்கப்படுத்தி, பின்பு கர்த்தர்மீதும், சபையின்மீதும் அவர்களை அன்புகொள்ளச்செய்து, அதினிமித்தம் அவர்கள் கர்த்தருக்காக சேவை செய்ய வேண்டும் என்பதே நம்மை வெகுவாகத் தூண்டுகிற காரியமாக இருக்க வேண்டும். இன்று நாம் சபையை எந்த அளவுக்கு நேசிக்கிறோம், சபைக்காக நம்மை எந்த அளவுக்கு அர்ப்பணிக்கிறோம் என்பதைக் குறித்து ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

சரி, கர்த்தருடைய ராஜ்யத்தை நாம் நேசிக்கிறவர்களாக இருந்தால் நாம் அதன் பக்திவிருத்திக்காக கண்ணீரோடு ஜெபிக்க வேண்டும். விழுந்துபோனவர்களுக்காக துக்கப்படுவதோடல்லாமல், அவர்களைப் போய் சந்தித்து ஆவிக்குரிய காரியங்களால் அவர்களை திடப்படுத்தி சபைக்கு அழைத்துவரவேண்டும். கர்த்தருக்காக செய்யும் இப்படிப்பட்ட காரியங்களை ஒத்திவைக்காமல் துரிதமாய் செய்து முடிக்க வேண்டும் என்ற எண்ணம் நமக்குள்ளாக மேலோங்கி இருக்க வேண்டும். கர்த்தருடைய மணவாட்டியாக நாம் இருக்கிறபடியால் அதற்குள் பிரவேசிக்க நம்மையும், நம்மைச் சார்ந்தவர்களையும் ஆயத்தமாக்குவோம். ✝

# ஞானஸ்நானம் கொடுக்கும்படி கிறிஸ்து என்னை அனுப்பவில்லை சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவே அனுப்பினார்

# Christ Send Me Not To Babtize, But To Preach The Gospel

*A.L.Franks*

இரட்சிப்புக்கு ஞானஸ்நானம் அவசியமில்லை, ஏனென்றால் அப்போஸ்தலனாகிய பவுல், ஞானஸ்நானத்தைக் கொடுக்கும்படி கிறிஸ்து என்னை அனுப்பவில்லை, சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவே அனுப்பினார் என்று சொல்லியிருக்கிறாரே என்று ஒரு வாதம் வைக்கப்படுகிறது (I கொரிந்தியர் 1:17)

**விவாதம் :**

உண்மையாகவே ஞானஸ்நானம் அவசியமாக இருந்தால் அப்போஸ்தலனாகிய பவுல் I கொரிந்தியர் 1 : 14 - 17 வசனங்களில் எழுதியிருக்கிற காரியங்களை எழுதியிருக்கமாட்டார் அல்லவா. என் நாமத்தினாலே ஞானஸ்நானங் கொடுத்தேனென்று ஒருவனும் சொல்லாதபடிக்கு நான் கிறிஸ்புவுக்கும், காயுவுக்கு மேயன்றி உங்களில் வேறொருவனுக்கும் ஞானஸ்நானங் கொடுக்கவில்லை. இதற்காகத் தேவனை ஸ்தோத்தரிக்கிறேன் என்று பவுல் சொன்னதை மேற்கோள்காட்டி சிலர் விவாதிக்கின்றனர்.

**பதில் :**

வேதாகமத்தை ஆர்வமாகப் படிப்பவர்கள் வேதவாக்கியங்களைப் படிக்கும் போது, அதன் பின்னணியைப் பற்றி முழுவிபரமாகக் கற்றுக்கொள்ளவேண்டியது மிக மிக அவசியமானதாகும். நாம் பார்த்துக்கொண்டிருக்கிற வசனப்பகுதியின் பின்னணி அல்லது சூழ்நிலை என்னவென்று பார்க்கும்போது, கொரிந்து கிறிஸ்தவர்கள் வாக்குவாதத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்தார்கள்; அதாவது, அவர்கள் தங்கள் எஜமான விசுவாசத்தை சகமனிதர்களிடம் காட்டினார்கள். எப்படியெனில், அவர்கள் நான் பவுலைச் சேர்ந்தவனென்றும், நான் கேபாவைச் சேர்ந்தவனென்றும் சொல்லிக்கொண்டிருந்தார்கள் ( I கொரி 11 : 11,12 ).இதனிமித்தம் சபைக்குள்ளாக பிரிவினை உண்டாகி சபை பிரிந்துபோகக்கூடிய சூழ்நிலையில் இருந்தது.

கொரிந்தியர் நிருபத்தை எழுதிய, தேவ ஆவியினால் ஏவப்பட்ட அப்போஸ்தலன் பவுல், பிரிவினைக்குத் தீர்வை ஏற்படுத்த முயற்சித்தார். கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா? பவுலா உங்களுக்காகச் சிலுவையிலறையப்பட்டான்? பவுலின் நாமத்தினாலேயா ஞானஸ்நானம் பெற்றீர்கள்? என்று பவுல், கொரிந்து சபையாரிடம் சில கேள்விக் கணைகளைத் தொடுத்தார் .கொரிந்து சபையின் பிரிவினைக்குக் காரணம், மனமாற்றமடைந்தவர்கள், ஞானஸ்நானங் கொடுத்தவர்கள் மீது கொண்டிருந்த அதீதப் பற்றுதான். ஆகையால் தான், பவுல், என் நாமத்தினலே ஞானஸ்நானங் கொடுத்தேனன்று ஒருவனுக்கும் சொல்லாதபடிக்கு, நான் கிறிஸ்புவுக்கும் காயுவுக்குமேயன்றி உங்களில் வேறொருவனுக்கும் ஞானஸ்நானங் கொடுக்கவில்லை. இதற்காகக் தேவனை ஸ்தோத்தரிக்கிறேன். ஞானஸ்நானத்தைக் கொடுக்கும்படி கிறிஸ்து என்னை அனுப்பவில்லை. சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவே அனுப்பினார் என்று எழுதினார்.

இங்கே, அப்போஸ்தலனாகிய பவுல் ஞானஸ்நானத்தின் முக்கியத்துவத்தைக் குறைக்கவுமில்லை, ஞானஸ்நானம் வேண்டாமென்று சொல்லவுமில்லை. மாறாக, சுவிசேஷத்தை அறிவிப்பதுதான் என் வேலை அல்லது பங்கு மனமாற்றமடைந்தவர்களை ஞானஸ்நானப்படுத்துவதல்ல, அந்த வேலையைத் தன்னோடு ஊழியத்திலிருப்பவர்கள் செய்யட்டும் என்றுதான் சொல்லுகிறாரே தவிர, ஞானஸ்நானம் கொடுப்பதே தவறானது என்று அவர் ஒருபோதும் போதிக்கவில்லை. ஏனென்றால், அவரே தனது பாவங்கள் போகக் கழுவப்படும்படியாக ஞானஸ்நானம் பெற்றுள்ளார் (அப் 22:16).

இருந்தபோதிலும், கொரிந்தியரில் அநேகர் சுவிசேஷத்தைக் கேட்டு, விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றார்கள் ( அப் 8 : 8 ). பவுலும், தனது கரங்களாலே சிலருக்கு ஞானஸ்நானங் கொடுத்தார். அவர்கள் யாரெனில் கிறிஸ்பு, காயு மற்றும் ஸ்தேவனுடைய வீட்டார். இவர்களைத் தவிர கொரிந்து சபையிலே அவர் வேறு யாருக்கும் ஞானஸ்நானங் கொடுக்கவில்லை.ஆனால், சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதின் மூலம் மனமாற்றமடைந்து ஞானஸ்நானம் பெற்றவர்களை அவர் ஒருபோதும் வேண்டாம் என்று கூறவில்லை.

சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டபோது அதினோடு கூட ஞானஸ்நானமும் பிரசங்கிக்கப்பட்டது (மாற்கு 16 : 16 ; மத்தேயு 28 : 18-20). ஞானஸ்நானத்தின் முக்கியத்துவம் பற்றிய போதனை சுவிசேஷத்தின் பிரதானமான செய்தியாகும். ஒரு விசுவாசி, இயேசுவைத், தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டதற்கு அடையாளமாக ஞானஸ்நானம் திகழ்கிறது. இது பாவத்தைப் போக்கி, பரிசுத்தப்படுத்தி, கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டு பரிசுத்தமாய் வாழ வழிவகுக்கிறது (கலாத்தியர் 3:26,27).

முடிவாக : வேதாகமத்தை போதிப்பது என்பது சுவிசேஷத்தைப் போதிப்பதாகும். அதினிமித்தம் ஞானஸ்நானமும் போதிக்கப்பட்டது. ✞

# ஞானஸ்நானம் - ஒரு தொடக்கம்

## Baptism - A Beginning

*Jimmy Jividen*

ஒருவர் ஞானஸ்ஞானம் பெறும்போது ஏன் மகிழ்ச்சியிடைகிறார் ? அதற்கான காரணங்களுள் ஒன்று ஞானஸ்ஞானம் ஒரு புதிய ஆரம்பமாயிருக்கிறது. இப்படியிருக்க ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான், பழையவைகள் ஒழிந்துபோயின எல்லாம் புதிதாயின (I கொரி 5:17).

**ஞானஸ்நானம் என்பது புதிய பிறப்பாக இருக்கிறது :**

ஒருவர் தேவனுடைய வார்த்தையினால் ஜெநிப்பிக்கப்பட்டு, ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறக்கும்போது தேவனுடைய ராஜ்ஜியத்திற்குரியவராக மாறுகிறார். நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் ( யோவான் 3:5 ). என்றார். அப்படிப் பிறக்கும் ஒருவர் தேவனுடைய குடும்பத்தில் ஒரு பிள்ளையாக அவரை அப்பா பிதாவே என்று கூப்பிட முடியும். அப்படிப் பிறக்கும் ஒருவருக்கு குடும்ப ஆதரவு கிடைத்து அவர் தேவனுடைய ஆவிக்குரிய குடும்பத்தின் வாரிசாகவும் மாறுகிறார்.

**ஞானஸ்நானம் என்பது உயிர்த்தெழுதலாக இருக்கிறது :**

ஒருவர் தன்னுடைய பாவத்திற்கு மரித்து ஞானஸ்நானத்தில் அடக்கம்பண்ணப்பட்டு பின்பு புதிதான ஜீவனுள்ளவராய் நடந்துகொள்ள எழுந்திருக்கும் ஒரு சம்பவமாகும் ( ரோமர் 6:4-6 ). ஞானஸ்நானம் எல்லாவற்றையும் புதிதாக்கும் ஒரு செயலாகவும் இருக்கிறது. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, சரீர மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்ததுபோல, நாமும் ஆவிக்குரிய மரணத்திலிருந்து எழுந்திருக்கிறோம்.

**ஞானஸ்நானம் என்பது இரட்சிக்கும் நிகழ்வாகும்.**

உலகம் ஜலத்தினால் அழிக்கப்பட்டபோது நோவாவின் இரட்சிப்பின் ஒப்புமையை பேதுரு இவ்விதம் விளக்குகிறார். இதற்கு ஒப்பனையான ஞானஸ்நானமானது இப்பொழுது நம்மையும் இயேசு கிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலினால் இரட்சிக்கிறது (I பேதுரு 3:21). என்று சொல்லுகிறார். இவ்வுலகம் ஜலத்தினால் அழிக்கப்பட்டபோது, நோவாவின் கீழ்ப்படிதல், அவரையும் அவருடைய குடும்பத்தையும் இரட்சித்ததுபோல, ஞானஸ்நானத்தில் ஒருவருடைய கீழ்ப்படிதல், இவ்வுலகம் அக்கினியால் அழிக்கப்படும்போது இரட்சிப்பை நிச்சயம் கொண்டுவரும்.

# பழையவைகளே சிறந்தவைகளாக இருக்கின்றன

## Old Things Often Are The Best

*Hardman Nichols*

விடுமுறை நாட்களில் புதியவைகளால் நாம் ஈர்க்கப்படுவது ஆச்சரியப்படும்படியான ஒன்றல்ல. சிறு பிள்ளைகளும், பெரியவர்களும் விளையாட்டுச் சாமான்களையும், புதிய ஆடைகளையும், புதிய வாகனங்களையும் விரும்புவார்கள். இன்னும் சிலருக்கு புதிய வருடம் புதிய தொடக்கமாக இருக்கைவேண்டுமென்ற விருப்பமும், தங்கள் வீடுகளில், வேலை ஸ்தலங்களில், பள்ளிகளில் சிறந்து விளங்கவேண்டுமென்ற புதிய ஆசையும் ஏற்படுகின்றது. புத்தாண்டில் தான் நாம் புதிய தீர்மானங்களை எடுக்கிறோம். இவைகளெல்லாம் மெச்சத்தக்கவைகள். ஏனென்றால், இவைகளால் நமக்கு பழைய பொருட்களின் மீது வெறுப்பு ஏற்படுவதில்லை என்பதால்.

அதே நேரத்தில் பழையதா, புதியதா என்ற குழப்பத்தால் நாம் நம்மையும் அறியாமலேயே ஏதோ ஒரு உந்துசக்தியால் இழுக்கப்படுகிறோம். அது நம்மை காந்தம் இழுப்பதுபோல் இழுக்கத்துக்கொள்கிறது. உதாரணமாக, நாம் நம் பழைய நண்பர்களால் இழுக்கப்படுகிறோம். பழைய காலணிகள் புதியவைகளைவிட நன்றாக இருப்பதாக உணர்கிறோம். பளபளப்பான புதிய வாகனம் பழையதைப்போல கையாள்வதற்குச் சுலபமாயிருக்காது. அதேபோல, புதியவீடு பழையவீடு தந்த சௌகரியங்களைத் தருவதில்லை. பொதுவாகவே, நாம் பார்க்கும் போது பழையகாரியங்கள் அல்லது பழையவைகள் நமக்கு நன்கு பரிட்சயமாயருக்கிறபடியால், சிலவேளைகளில் பழையவைகளுக்காக நாம் ஏங்குகின்றோம். ஆனாலும், நம் விருப்பங்கள் அதைவிட சிறந்த அஸ்திபாரத்தை ஆதாரமாகக் கொண்டிருக்கவேண்டும்.

இங்கே கேள்வி என்னவென்றால் நாம் புதியவைகளால் ஈர்க்கப்படும்பொழுது பழையவைகளை வெறுத்துத்தள்ள வாய்ப்பிருக்கிறதா? இதற்கான பதில், நாம் எல்லாக் காரியங்களையும் எப்படி மதிப்பீடு செய்கிறோம்

என்பதில் தான் அமைந்துள்ளது. மார்க்க சம்பந்தமான காரியங்களென்று வரும்போது, நாம் கேட்கும் பிரதானமான கேள்வி இதுதான். இது தேவனுடைய வாக்கியங்களோடு இசைந்திருக்கிறதா? ஆம், எனில் தேவனுக்கான நம்முடைய சேவையில் பழையவைகளில்தான் அதாவது, முதல்நூற்றாண்டு சபையின் உபதேசக்காரியங்களில் தான் நாம் இரட்சிக்கப்படும்படியான மெய்யான சத்தியம் அடங்கியிருக்கிறது.

வேதாகமம் தான் எப்போதுமே நமக்கு மிகச்சிறந்த வழிகாட்டியாக இருக்கிறது. ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவும் வானமும், பூமியும் ஒழிந்துபோகும், என் வார்த்தைகளோ ஒழிந்துபோவதில்லை என்றும் என்னைத்தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளாதவனை நியாயந்தீர்க்கிறதொன்றிருக்கிறது, நான் சொன்ன வசனமே அவனைக் கடைசிநாளில் நியாயந்தீர்க்கும் என்று சொன்னார் ( மத்தேயு 24 : 35; யோவான் 12 : 48).

இவ்விதமான மனநிலையோடு இருக்கும் மக்கள் எல்லாக் கால கட்டங்களிலும் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள். இக்கருத்துக்கு வலுசேர்க்கும்படியாக, அத்தேனே பட்டணத்திலிருந்த தத்துவஞானிகள் புதிய காரியங்களுக்காக ஏங்கிக்கொண்டிருந்ததைக் காணமுடியும். அந்த அத்தேனே பட்டணத்தாரெல்லாரும், அங்கே தங்குகிற அந்நியரும் நவமான காரியங்களைச் சொல்லுகிறதிலும் கேட்கிறதிலுமேயொழிய வேறொன்றிலும் பொழுது போக்குகிறதில்லை (அப் 17 : 21).

நாம் புதிய வழியை அல்ல உண்மையான வழியைத் தேடவேண்டுமென்று தேவன் விரும்புகிறார். எரேமியா தீர்க்கதரிசி வழிகளிலே நின்று பூர்வ பாதைகள் எவையென்று கேட்டு விசாரித்து, நல்ல வழி எங்கே என்று பார்த்து, அதிலே நடவுங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்துமாவுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார் ; அவர்களோ நாங்கள் அதிலே நடக்கமாட்டோம் என்கிறார்கள் ( எரே 6 : 16 ) என்றுரைத்தார். இவ்வசனத்தில் நாம் பார்க்கும்போது பழையவைகளை அந்த ஜனங்கள் ஏற்றுக்கொள்ள மனமில்லாதிருந்தபடியினாலே, அதிலே நடக்கமாட்டோம் என்றார்கள்.

அவர்களைப்போல நாம் ஒருபோதும் தேவனுடைய குமாரனையும், அவருடைய வழியையும் அவமதிக்கவேண்டாம். ஆண்டவராகிய இயேசுவும், நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான் (யோவான் 14 : 6) என்று கூறியுள்ளார்.

நமக்கு புதியஏற்பாடு எந்த அளவுக்கு பழைமை வாய்ந்ததாக இருக்கிறதோ அந்த அளவுக்கு பழைமை வாய்ந்த சபையைத்தான் நாம் நாடவேண்டும். அப்படிப் பழைமை வாய்ந்த சபையாக கிறிஸ்துவின் சபை திகழ்கிறது. ஏனென்றால், கிறிஸ்துதான் அதைக் கட்டியவர் மத். 16 : 18-ல், இந்தக் கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன் என்று வாக்குத்தத்தம் செய்தார். எனவே, கிறிஸ்துவின் சபைக்கு மாற்றாக புதிதான ஒரு சபையை நாம் வைக்கவே முடியாது. சபையிலே கிறிஸ்து இயேசுவின் மூலமாய்த் தலைமுறை தலைமுறைக்கும் சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக ஆமென் (எபேசியர் 3 : 21) என்று அப்போஸ்தலன் பவுல் சொல்லியுள்ளார். ஆகவே, கிறிஸ்துவின் சபைக்கு மாற்றாக புதியதான சபை ஏதாவது இருந்தால் அது வேதத்தின் அடிப்படையில் உண்மையான சபை அல்ல.

ஆராதனையில் தேவனை எப்படி ஆராதிக்கவேண்டுமென்ற முறைமைகளை தேவனுடைய வசனங்களில் நாம் காண்கிறோம். அவைகளும் புதிய ஏற்பாட்டைப்போலவே பழைமை வாய்ந்தது. இதுகுறித்து இயேசு கிறிஸ்து, தேவன் ஆவியாயிருக்கிறார் அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளவேண்டும் என்று போதித்தார் (யோவான் 4 : 24). ஆதிக்கிறிஸ்தவர்கள் வாரத்தில் முதல்நாள்தோறும் தேவனை ஆராதிக்கும்படி கூடியிருக்கிறார்கள். வாரத்தின் முதல் நாளில் அப்பம்பிட்கும்படி சீஷர்கள் கூடிவந்திருக்கையில் பவுல் மறுநாளிலே புறப்படவேண்டுமென்றிருந்து அவர்களுடனே சம்பாஷித்து நடுராத்திரி மட்டும் பிரசங்கித்தான் (அப். 20 : 7). இங்கே அப்பம் பிட்டுதல் என்பது, கர்த்தருடைய பந்தியில் பங்குபெறுவதைக் குறிக்கிறது. ஆகயால் ஆதிச்சபையார் வாரந்தோறும் கர்த்தருடைய பந்தியில் பங்கு பெற்றிருக்கிறார்கள்.


இப்படியாக, இந்தப் பழைய முறைமைகளெல்லாம் மிகவும் மதிப்பு மிக்கவைகளாயிருக்கிறபடியால், இதற்கு மாற்றாக வேறெதையும் வைக்கவே முடியாது. ஆகவே, இவைகளை உங்கள் இருதயத்திலே பொக்கிஷமாக வைத்து காத்துக்கொண்டு அதிலே நடவுங்கள். ✝

# ஞானஸ்நானத்திற்கு முன்பாக மரித்தல்?

# Dying Before Baptism

*Kyle Butt*

**பு**திய ஏற்பாடு தண்ணீர் ஞானஸ்நானம் இரட்சிப்புக்கு மிகவும் அவசியம் என்று தெளிவாகப் போதிக்கிறது. விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான், விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான் ( மாற்கு 16 : 16 ).ஆனால், இரட்சிப்புக்கு ஞானஸ்நானம் அவசியம் என்னும் போதனைக்கு எதிராக, எழுப்பப்படும் விவாதம் தேவன் ஆக்கினைக்குள்ளாகதத் தீர்க்கமாட்டார் என்பதாயிருக்கிறது. இதினிமித்தம், இங்கே கேட்கப்படும் கேள்வி என்னவென்றால், உண்மையாக தேவனை விசுவாசிக்கும் ஒருவர் ஞானஸ்நானம் பெறுவதற்காக வரும்போது தண்ணீருள்ள ஓர் இடத்தை அடைவதற்கு முன்பாக அவர் மரித்துவிட்டால் அவருடைய நிலை என்ன ஆகும்? இப்படிப்பட்ட நபர் தண்ணீருக்குள் மூழ்கி ஞானஸ்நானம் பெறாத காரணத்தினால் தேவன் அவரை நரகத்திற்குத் தான் அனுப்புவார் என்று சொல்லுகிறீர்களா? என்று கூட கேள்விகள் எழுப்பப்படுகிறது.



முதலில், மனிதனின் பார்வையில் இவ்விவாதம் நியாயமானதுபோல் தோன்றும்.ஆனால் நாம் வேத வசனங்களைத் தொடர்ந்து ஆராய்ந்து பார்த்தால் இது வெறுமனே உணர்வுகளின் உந்துதல்தானே தவிர இரட்சிப்புக்கு ஞானஸ்நானம் அவசியமில்லை என்று ஒருபோதும் பொருள்படாது.

தேவன் அப்படிச் செய்யமாட்டார் என்னும் விவாதத்தைக் கிட்டதட்ட வேதகாமத்தின் எல்லாக் கட்டளைகளுக்கு விரோதமாகவும் பயன்படுத்த முடியும். உதாரணமாக, ஒருவர் இயேசுகிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்க வேண்டுமென்று வேதாகமம் வலியுறுத்திக் கூறுகிறது. அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் வெட்கப்படுவதில்லை என்று வேதம் சொல்லுகிறது ( ரோமர் 10: 11 ). மேலும் ஆண்டவராகிய இயேசு இவ்விதம் விளம்புகிறார். ஆகையால் நீங்கள் உங்கள் பாவங்களில் சாவீர்கள் என்று உங்களுக்குச் சொன்னேன். நானே அவர் என்று நீங்கள் விசுவாசியாவிட்டால் உங்கள் பாவங்களிலே சாவீர்கள் என்றார் (யோவான் 8:24).

ஒரு கிறிஸ்தவன் இயேசு கிறிஸ்துவைப் பற்றி முதியவர் ஒருவரிடம் சொல்ல தொடங்கியிருக்கிறார். அவ்வாறு அந்த முதியவர் கேட்டுக்கொண்டிக்கும்போது, மாரடைப்பால் இறந்துவிட்டால், அவர் முழுமையாக கிறிஸ்துவைப் பற்றிக் கேள்விப்படவில்லை. எனவே, கிறிஸ்துவை விசுவாசிக்க அவருக்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை. ஆகவே, கிறிஸ்துவின் உபதேசத்திற்குக் கீழ்ப்படியும் வாய்ப்புடைய ஒருவர் அதற்குக் கீழ்ப்படிவதற்கு முன்பாக மரித்துவிட்டார் என்பதற்காக, கிறிஸ்துவின் மீது விசுவாசம் வைக்க வேண்டும் என்னும் வேதாகம கட்டளையை தேவையில்லையென்று ஒதுக்க முடியாது. அதேபோல், பாவமன்னிப்புக்காக ஞானஸ்நானம் பெறவேண்டும் என்னும் கட்டளையையும் நாம் மீற முடியாது. பேதுரு அவர்களை நோக்கி : நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள் (அப். 2:38).

எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவேண்டுமென்று தேவன் விரும்புகிறார் என்பதை வேதாகம தெளிவாக எடுத்துரைப்பதை ஆழ்ந்து சிந்தியுங்கள். தேவ ஆவியினால் ஏவப்பட்ட அப்போஸ்தலன் பேதுரு, தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குதத்தத்தைக் குறித்துத் தாமதமாயிரமல்; ஒருவரும் கெட்டுப் போகாமல் எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார் (II பேதுரு 3:9) என்று எடுத்துரைக்கிறார்.

பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசியான எசேக்கியேல், தேவன் சார்பாக இச்செய்தியை இஸ்ரவேல் ஜனங்களுக்கு அறிவிக்கும்படியாக தேவனால் அனுப்பப்படுகிறார். நான் துன்மார்க்கனுடைய மரணத்தை விரும்பாமல், துன்மார்க்கன் தன் வழியை விட்டுத் திரும்பிப் பிழைப்பதையே விரும்புகிறேன் என்று என் ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன் (எசேக்கியேல் 33 : 11) என்று தேவன் விளம்பினதை எசேக்கியேல் இஸ்ரவேல் ஜனங்களுக்கு அறிவித்தார்.

அப்போஸ்தலனாகிய பவுல் இளம் பிரசங்கியாகிய தீமோத்தேயுவுக்கு எழுதும்போது எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார் என்று எழுதுகிறார் (I தீமோத்தேயு 2: 3,4). ஆகவே, ஒருவர் உண்மையாகவும், நேர்மையாகவும் தேவன் கட்டளையிட்டபடியே பாவமன்னிப்புக்காக ஞானஸ்நானம் பெறவிரும்பினால், அப்படிப்பட்ட நபர் ஞானஸ்நானம் எடுக்க வரும்போது மரிக்கவோ, சுவிசேஷத்தைக் கேட்டுக் கொண்டிருக்கும்போது மாரடைப்பால் இறக்கவோ அனுமதிக்காமல், அவர்கள் ஞானஸ்நானம் பெறும்படியான வாய்ப்பை தேவன் நிச்சயம் ஏற்படுத்துவார்.

தேவனுடைய சித்தமில்லாமல் ஒரு குருவி கூடத் தரையிலே விழாது என்று மத்தேயு 10: 29-ல் இயேசு கிறிஸ்து சொல்லுகிறபடியாலும், தேவன் பட்சபாதமுள்ளவரல்ல என்றும், எந்த ஜனத்திலாயினும் அவருக்குப் பயந்திருந்து நீதியைச் செய்கிறவன் எவனோ அவனே அவருக்கு உகந்தவன் என்றும் நிச்சயமாய் அறிந்திருக்கக்கடவன் என்று அப். 10 : 34,35-ல் அப்போஸ்தலனாகிய பேதுரு சொல்லியிருக்கிறபடியால் தேவன், தம்முடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய ஒவ்வொருவருக்கும் நியாயமான வாய்ப்பை தம்முடைய பராமரிப்பின் கீழ் கொடுப்பார் என்பதை நாம் நம்முடைய வாழ்வில் நிச்சயப்படுத்திக் கொள்ள முடியும். ✝

**என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக் கொள்ளாதவனை நியாயந்தீர்க்கிறதொன்றிருக்கிறது. நான் சொன்ன வசனமே அவனைக் கடைசிநாளில் நியாயந்தீர்க்கும்** (யோவான் 12 : 48).

## ஞானஸ்நானம் பாவமன்னிப்புக்காக

ஞானஸ்நானம் என்னும் வார்த்தையின் பொருள் கிரேக்க மொழியில் Babtizo என்பதாகும். இது அடக்கம் பண்ணப்படுதல், தண்ணீருக்குள் மூழ்குதல் என்ற ஆழமான பொருளைக் கொடுக்கிறது.

---

* எபேசியர் 4 : 4,5 - ஒரே ஞானஸ்நானம்

மாற்கு 16 : 16

விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்

கலாத்தியர் 3 : 27

உங்களில் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டீர்களே

---

அப்போஸ்தலர் 2 : 38

நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள்.

அப்போஸ்தலர் 22 : 16

இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு ஞானஸ்நானம் பெற்று உன் பாவங்கள் போகக் கழுவப்படு என்றான் .

---

## ஞானஸ்நானம் இரட்சிப்புக்கு அவசியமாயிருக்கிறது

- ♦ ஞானஸ்நானம் பாவங்களை மன்னிக்கிறது (அப். 2 : 38)
- ♦ ஞானஸ்நானம் பாவங்களைக் கழுவுகிறது (அப். 22 : 16)
- ♦ ஞானஸ்நானம் இரட்சிப்பைக் கொடுக்கிறது ( I பேதுரு 3 : 21)
- ♦ ஞானஸ்நானம் பெறும்படி தேவன் கட்டளையிடுகிறார் (அப். 10 : 47,48)

# கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம்

I பேதுரு 3 : 21

***இதற்கு ஒப்பனையான ஞானஸ்நானமானது மாம்ச அழுக்கை நீக்குதலாயிராமல் தேவனைப்பற்றும் நல்மனசட்சியின் உடன்படிக்கையாயிருந்து இப்பொழுது நம்மையும் இயேசு கிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலினால் இரட்சிக்கிறது.***



**விளக்கத்தில்**

ஞானஸ்நானம் கிறிஸ்துவோடு அடக்கம் பண்ணப்படுதலாயிருக்கிறது (ரோமர் 6 : 4; கொலே. 2 : 12)

**நோக்கத்தில்**

ஞானஸ்நானம் பாவமன்னிப்புக்கானதாயிருக்கிறது.

**உண்மையில்**

ஞானஸ்நானம் மூழ்குதலாயிருக்கிறது

## இழந்துபோன ஆத்துமாவை கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்துதல்

## *Leading A Lost Soul To Christ.*

Jack Harriman

வேதாகமத்தின் அடிப்படைக் காரியங்களை விசுவாசித்து, சுவிசேஷக் காரியங்களைச் சரிவரப் புரிந்துகொள்ளாமலும், சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாமலும் இருக்கும் ஒருவரோடு தேவனுடைய வார்த்தையைப் பகிர்ந்துகொள்ளும் வாய்ப்புக் கிடைத்தால் நான் கீழ்க்காணும் காரியங்களைச் செய்வேன்.

முதலாவது, நாம் புதிய ஏற்பாட்டின் கீழ் தான் வாழுகிறோம் என்னும் உண்மையை உறுதிப்படுத்தி, அவ்வுண்மையின் முக்கியத்துவத்தை வலியுறுத்துவேன். பழைய ஏற்பாடு தேவனுக்கும் இஸ்ரவேல் தேசத்துக்கும் இடையே சீனாய் மலையில் பிரத்யேகமாக உண்டான உடன்படிக்கை ஆகும் (உபாகமம் 5:1 - 3; சங்கீதம் 147:19,20). புறஜாதி உலகம் ஒருபோதும் இந்த உடன்படிக்கையின் கீழ் இருந்ததில்லை. ஏன் யூத உலகமும் கூட கிறிஸ்துவின் மரணத்திற்குப்பின் அதன் கீழில்லை. எனவே, இப்போது வாழ்ந்துகொண்டிருக்கும் எல்லோரும் புதிய ஏற்பாட்டிலிருந்து தான் இரட்சிப்பிற்கான உபதேசங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இரண்டாவது, வேதாகமத்தைப் படிப்பதில் ஒரு பொது அறிவு அணுகுமுறையை ஏற்படுத்துவேன். ஒரு சம்பவத்தைப் பற்றிப் படிக்கும்போது, எல்லா உண்மைகளையும் முதலில் சேகரிக்க வேண்டும். உதாரணமாக கிறிஸ்துவை கைது செய்ய சேவகர்கள் வந்தபோது, கிறிஸ்துவின்அருகே நின்றுகொண்டிருந்தவர்களில் ஒருவன் தன்னுடைய பட்டயத்தை உருவி, பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரனின் காதை வெட்டினான் என்று மாற்கு ஆசிரியர் சொல்லுகிறார். அதேபோல், மத்தேயு ஆசிரியர் கூறும்போது அப்பட்டயத்தைப் பயன்படுத்திய நபர் கிஸ்துவின் சீஷன் என்று சொல்லுகிறார். ஆனால், யோவான் ஆசிரியரோ காதை வெட்டினவன் பேதுரு என்றும், யாருடைய காது வெட்டப்பட்டதோ அந்த நபருடைய பெயர் மல்குஸ் என்றும் அடையாளப்படுத்துகிறார். ஆகவே, நாம் வேதாகமத்தைக் கற்றுக் கொண்டு, எல்லா உண்மைகளையும் மிகத்துல்லியமாக அறிந்து கொண்டு மற்றவர்களிடம் அணுக வேண்டும்.

மூன்றாவது, ஒருவர் பிரதான கட்டளையின் உபதேசத்தை எப்போது, எப்படி அவர் இரட்சிப்படைகிறார் என்னும் செயலோடு காரியங்களைப் பொருத்திப் பார்க்கிறேன். உதாரணமாக, பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெறவேண்டுமென்று மத்தேயு ஆசிரியர் சொல்லுகிறார் ( மத்தேயு 28:19 ). இதே செயலை மாற்கு ஆசிரியர் சொல்லும்போது ஒருவர் இரட்சிக்கப்பட்ட விசுவாசித்து ஞானஸ்நானம் பெறவேண்டுமென்கிறார். ( மாற்கு 16:16 ). லூக்கா ஆசிரியரோ, மனந்திரும்புதல், பாவமன்னிப்பு போன்றகாரியங்களையும் சேர்த்து எழுதுகிறார் ( லூக்கா 24:16 ). இதினிமித்தம் ஒருவர் சுவிசேஷத்தைக் கேட்டு, அதை விசுவாசித்து, கடந்தகாலப் பாவங்களிலிருந்து மனந்திரும்பி, பாவமன்னிப்புக்காக ஞானஸ்நானம் பெறும்பொழுது இரட்சிக்கப்படுகிறார் என்பது தெளிவாகிறது.

நான்காவது, நான், அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகம் இரண்டாம் அதிகாரத்தைப் படித்து முடித்த பிறகு, இந்த முடிவுக்கு வந்திருக்கிறேன். என்னவெனில், இந்த அதிகாரத்தில், ஜனங்கள் சுவிசேஷத்தைக் கேட்டு அதை விசுவாசித்தார்கள் (14-37). அப்படிக் கேட்டு விசுவாசித்தவர்கள், தாங்கள் என்ன செய்யவேண்டுமென்று கேட்டபொழுது, ஒவ்வொருவரும் மனந்திரும்பி, பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள் என்று போதிக்கப்பட்டது (வசனம் 38).

விசுவாசித்தல், மனந்திரும்புதல், ஞானஸ்நானம் பெறுதல் போன்றவைகளைக் குறித்து இரண்டு காரியங்களை நான் வலியுறுத்துகிறேன். இவைகளில் ஏதோ ஒன்றை விட்டுவிட்டு ஞானஸ்நானம் பெற முடியாது. இரண்டாவது, நாம் பார்க்கும் போது, விசுவாசத்திலிருந்து மனந்திரும்பதல், மனந்திரும்புதலில் இருந்து, இரட்சிப்பு என்று காரியங்கள் தொடர்கிறது. ஆனால், இன்று இந்த உண்மையின் கூற்று, ஆதாயத்திற்காகவும், வயிற்றுப் பிழைப்புக்காகவும், மற்ற மார்க்கப் பிரிவினை சபையாரால் திரித்துப் போதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

***கேள்வி: உங்கள் கீழ்ப்படிதலில் நீங்கள் எங்கே இருக்கிறீர்கள்?***

✝

# நாம் தனிநபர் ஊழியர்களாயிருப்போம்

## Lets Be Personal Evangelists

*Darrell E. Beard*



சுவிசேஷம் அறிவிக்கும் நோக்கத்துடன் ஒருவரிடத்தில் போய் அந்த நபரை கர்த்தருக்காக ஆதாயப்படுத்தும் ஒருவரை சுவிசேஷகர் என்றழைப்போம். அவர்கள் பிரசங்கபீடத்தில் மாத்திரமல்ல, ஒவ்வொரு தனிநபராகச் சந்தித்தும் சுவிசேஷம் அறிவிக்கிற சுவிசேஷகர்களாக இருக்கிறார்கள். அவர்களைப் போலவே நாமும் நம்மை சுவிசேஷகர்களாக நினைக்க வாய்ப்புண்டு. எப்படியெனில், கிறிஸ்தவர்களாகிய நாம் ஒவ்வொருவரும் நம்முடைய குடும்ப அங்கத்தினர்கள், நண்பர்கள் மற்றும் அயலகத்தாரிடம் சென்று தேவனுடைய வார்த்தையை அவர்களுக்கு எடுத்துரைத்து, அவர்களை கர்த்தருக்காக ஆதாயப்படுத்தும்பொழுது நாமும் தனிநபர் சுவிசேஷ ஊழியத்தைச் செய்கிறவர்களாகவே திகழ்கிறோம். ஆனால், இன்று பிரசங்கியார்களும், கிறிஸ்தவர்களும், சபை பணிகளைக் காரணங்காட்டி தனிநபர் சுவிசேஷத்தைப் புறக்கணிக்கிறார்கள். அவ்வாறு நாம் இராமல், நான் ஏன் தனிநபர் சுவிசேஷகராக இருக்கக்கூடாது? என்கிற கேள்வி நமக்குள்ளாக எழுப்பி நம்முடைய ஆத்துமா தனிநபர் சுவிசேஷ ஊழியம் செய்ய நம்மை ஊக்குவிக்கும் உந்து சக்தியாக இருக்க வேண்டும்.

## 1. இழந்துபோனவர்களை இரட்சிக்கும்படிக்கு நாம் தனிநபர் சுவிசேஷகர்களாயிருப்போம்.

நாம் இழந்து போன உலகில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, ஆகையால் நீங்கள் புறப்பட்டுப்போய்' சகல ஜாதிகளையும் சீஷராக்கி பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுங்கள் (மத்தேயு 28 : 19) என்று கட்டளையிட்டார். இயேசுவானவர் கட்டளையிட்டபிரகாரம் ஞானஸ்நானம் பெற்றவர்களைக் கர்த்தர் சபையிலே சேர்த்துக்கொண்டு வந்தார். அந்த சபையிலே மேடைப் பிரசங்கம் முக்கியப்பங்கு வகிக்கிறது. இன்னும் தொலைக்காட்சி, வானொலி போன்றவைகளும் சுவிசேஷத்தை அறிவிப்பதற்கு உதவியாயிருக்கின்றன. ஆனால், இவைகளே எல்லா வேலைகளையும் செய்துவிடமுடியாது. ஏனென்றால், சுவிசேஷ ஊழியத்திற்கு இவைகளைவிட இன்னும் அதிகமான காரியங்கள் தேவைப்படுகின்றன. அவைகளுள் சிறந்த செயல்பாடு, ஜனங்களைப் போய் சந்திக்கும் தனிநபர் ஊழியம்தான் சிறந்த வழியாக இருக்கிறது. ஆதித்திருச்சபை வளர்ச்சிக்கான காரணங்களுள் ஒன்று, அப்போஸ்தலர்கள் தினந்தோறும் தேவாலயத்திலேயும், வீடுகளிலேயும் இடைவிடாமல் உபதேசம்பண்ணி, இயேசுவே கிறிஸ்துவென்று பிரசங்கித்தார்கள் (அப் 5 : 42). அப்போஸ்தலர்களுடைய இந்த முன்னுதாரணம், மற்ற சீஷர்களுக்கு வெற்றியுள்ள தனிநபர் ஊழியத்திற்கு வழியைக் காட்டியது.

## 2. தவறினவர்களை மீண்டும் பழைய நிலைமைக்குக் கொண்டுவர நாம் தனிநபர் சுவிசேஷகர்களாயிருப்போம்.

கிறிஸ்துவின் சபை அங்கத்தினர்களில் சிலர் சிலவேளைகளில் ஏதாவதொரு குற்றத்தில் அகப்பட்டு விழுந்து போகிறார்கள். அப்படி விழுந்து போனவர்களை நாம் மீட்டமைத்து, பழைய நிலைமைக்குக் கொண்டு வருவது நம் கடமையாயிருக்கிறது. பேதுரு ஆசிரியர் இவர்களைப் பற்றி சொல்லும்போது, இவர்களுடைய ஆவிக்குரிய நிலை, இவர்கள் சுவிசேஷத்தைக் கேள்விப்படுவதற்கு முன்பாக இருந்ததைவிட மிக மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள் என்று சொல்லுகிறார் (II பேதுரு 2 : 20-22).

இப்படிப்பட்டவர்களை மீண்டும் கர்த்தரிடத்தில் அழைத்துக்கொண்டு வரவேண்டும். இதுதான் உண்மையுள்ள தேவனுடைய பிள்ளையின் பணியாகும். சகோதரரே, உங்களில் ஒருவன் சத்தியத்தைவிட்டு விலகி மோசம் போகும்போது, மற்றொருவன் அவனைத் திருப்பினால், தப்பிபோன மார்க்கத்தினின்று பாவியைத் திருப்புகிறவன் ஒரு ஆத்துமாவை மரணத்தினின்று இரட்சித்து, திரளான பாவங்களை மூடுவானென்று அறியக்கடவன் (யாக்கோபு 5 : 19,20).

### 3. பலவீனமானவர்களையும், சோர்ந்து போயிருக்கிறவர்களையும் உற்சாகப்படுத்தும்படி நாம் தனிநபர் சுவிசேஷகர்களாயிருப்போம்.

சில அங்கத்தினர்கள் சோர்வடைந்து சபையைவிட்டு வெளியேறும் ஆபத்தில் இருக்கிறார்கள். இன்னும் சிலர், அறியாமையினாலும் பெலவீனத்தாலும் தவறான பாதையில் சென்றுகொண்டிருக்கிறார்கள். எனவே, சககிறிஸ்தவர்கள் தான் ஒருவரையொருவர் தேற்றி ஒருவருக்கொருவர் பக்திவிருத்தி உண்டாகும்படி செய்யவேண்டும் (I தெச 5: 11). ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது தனிநபர் ஊழியம் கிறிஸ்தவர்களைப் பெலப்படுத்துகிறது. அதாவது, சந்திப்பவரையும், சந்திக்கப்படுகிறவரையும் பெலப்படுத்துகிறது. சபை அங்கத்தினர்கள் மத்தியில் தனிநபர் ஊழியம் நடக்கும்போது சபையானது பக்திவிருத்தியடையும்படியாக ஊக்கப்படுத்தப்படுகிறது.

### 4. நம்மை நாமே இரட்சித்துக்கொள்ள நாம் தனிநபர் சுவிசேஷகர்களாயிருப்போம்.

நாம் மற்றவர்களை இரட்சிப்புக்குள் வழிநடத்தாவிட்டால் நாம் கனிகொடாத மரங்களாகி விடுவோம். அப்படியிருக்கும்போது நாம் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படுவோம் ( யோவான் 15 : 1-8 ). அப்படியிராதபடிக்கு இரட்சிக்கப்பட்டவர்களாகிய நாம் இழந்துபோனவர்களைக் கர்த்தரிடத்தில் திருப்பும்போது கனிகொடுப்பதற்கு இதுவும் ஒருவழியாக அமைகிறது. இழந்துபோனவர்களுடைய இக்கட்டான நிலைமையைப் பார்த்து, அக்கறைப்படுகிறவர்களாக நாம் இருப்போமென்றால் நிச்சயம் அவர்களை இரட்சிக்க முடியும். அதற்கு, தொடர்ந்து நாம் கர்த்தருடைய ஊழியத்தில்

உண்மையுள்ளவர்களாகவும், பக்திவைராக்கியம் உடையவர்களாகவும் இருக்கவேண்டியது அவசியமாகும். மற்றவர்களுக்குப் போதிப்பதும், அவர்களைக் கிறிஸ்துவுக்குள் வழிநடத்தவதும் சபை ஊழியர்களின் பணி என்னும் எண்ணத்தை நாம் அறவே போக்கவேண்டும்.

தனிநபர் சுவிசேஷப் பணி என்பது கனிகொடுக்கும் வாழ்வின் அங்கமாகும். ஒவ்வொரு சபையும் சிறந்த தனிநபர் ஊழியர்களாக இருக்கும்படி கிறிஸ்தவர்களுக்குப் பயிற்சியளிக்க முன் வர வேண்டும். கிறிஸ்தவர்களும் தனிநபர் சுவிசேஷகர்களாக மாறத்தக்கதாக ஆவிக்குரிய காரியங்களில் வளர வேண்டும்.

ஒவ்வொரு கிறிஸ்தவரும், தங்கள் குடும்ப அங்கத்தினர்கள், நண்பர்கள் மற்றும் அயலகத்தாரிடம் சென்று தேவனுடைய வார்த்தையை எடுத்துரைத்து, அவர்களைக் கர்த்தருக்காக ஆதாயப்படுத்துவதில் தன்னிகரற்ற தனிநபர் நற்செய்தி ஊழியர்களாகத் திகழ வேண்டும்.

---

*கிறிஸ்தவர்களாகிய நாம் ஒவ்வொருவரும் நம்முடைய குடும்ப அங்கத்தினர்கள், நண்பர்கள் மற்றும் அயலகத்தாரிடம் சென்று தேவனுடைய வார்த்தையை அவர்களுக்கு எடுத்துரைத்து, அவர்களை கர்த்தருக்காக ஆதாயப்படுத்தும்பொழுது நாமும் தனிநபர் சுவிசேஷ ஊழியத்தைச் செய்கிறவர்களாகவே திகழ்கிறோம்.*

*நம்முடைய ஆத்துமா தனிநபர் சுவிசேஷ ஊழியம் செய்ய நம்மை ஊக்குவிக்கும் உந்து சக்தியாக இருக்க வேண்டும்.*

ஆராதனை

# என் கொடுத்தல்

# My Giving

*Dan. R. Owen*

**கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்; நான் தாழ்ச்சியடையேன்**



நம் தேவன் எல்லாவற்றையும் உடையவராயிருக்கிறபடியால், அவர் நம்மிடமிருந்து எதையும் எதிர்பார்பதில்லை. நன்மையான எந்த ஈவும், பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்து உண்டாகி சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கி வருகிறது என்று யாக்கோபு 1:7 ல் நாம் காண்கிறோம். இது உண்மையாயிருக்க, தேவன் தம்மைத் தொழுதுகொள்ளுகிறவர்களிடமிருந்து காணிக்கைகளை விரும்புகிறார் என்பது சுவாரஸ்யமாக இருக்கிறது. எப்படியென்றால், நம்முடைய கொடுத்தல் ஆவிக்குரிய பலியாக இருக்கவேண்டுமென்று தேவன் விரும்புகிறார். ஆகவே, தேவனைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் அவரை ஆவியோடும், உண்மையோடும் தொழுதுகொள்ள வேண்டும். இங்கே கொடுத்தல் என்பது ம் இருதயம், நம் பக்தி, தேவனுக்காகத் தியாகப்பூர்வமாய் நாம் கொடுப்பதற்கான விருப்பம் போன்றவைகளை ஈடுபடுத்துகிற ஒரு ஆவிக்குரிய காரியமாயிருக்கிறது.

கொடுத்தல் முக்கியமாக இருக்கிறபடியால், அதை நாம் ஆர்வமாகக் கொடுக்கும்போது, தேவனோடு நல் ஐக்கியத்தில் வளர்வதற்கு அது மிகச்சிறந்த அளவீடாக இருக்கிறது. நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்

(மத்தேயு 6:21 ) என்று சொன்னார். தேவனுடைய பார்வையில் காணிக்கை என்பது நம்முடைய மிகச்சிறந்த அன்பின் வெளிப்பாடாக இருக்கவேண்டும். இது குறித்து இந்த உண்மையை ஆழ்ந்து சிந்தித்துப் பாருங்கள்.

**காணிக்கையானது தேவனுக்குச் செலுத்தும் பலியாக இருக்கிறது.**

தேவனுக்கு காணிக்கைகளைக் கொடுக்கும் செயல், காயீன் ஆபேல் காலந்தொட்டே இருந்து வருகிறது. ஆபிரகாமும் கூட, தான் போரில் வென்ற பொருட்களில் உச்சிதமானவைகளில் ஆசாரியனாகிய மெல்கிசேதேக்குக்கு தசமபாகம் கொடுத்தார். யாக்கோபும் தனக்கு உண்டானவைகளில் எல்லாம் தசமபாகம் கொடுப்பதாக தேவனிடத்தில் பொருத்தனை பண்ணினான். ஆசரிப்புக் கூடாரம் கட்டப்பட்டபோது, ஜனங்கள் காணிக்கை கொண்டுவரும்படியாகக் கட்டளையிட்டார்கள். மேலும், ஜனங்கள் லேவியருக்கு தசபாகம் கொடுக்கும்படியாக தேவன் கட்டளையிட்டார். மல்கியா தீர்க்கதரிசியும், தேவனுக்கு காணிக்கை கொடுப்பது மிகவும் அவசியமானதென்றும், அப்படிக் கொடுப்பதால் தேவன் மீது நாம் வைத்திருக்கும் அன்பை அது பிரதிபலிக்கிறது என்றும் தெளிவுபடுத்துகிறார். தேவனுக்காக நாம் கொடுக்கும் காணிக்கையினால் தேவனைப் பற்றி எப்படிப்பட்ட உணர்வை நாம் பெற்றிருக்கிறோம் என்பதை இது வெளிப்படுத்துகிறது.

**காணிக்கை கொடுப்பது கீழ்ப்படியும் ஒரு செயலாக இருக்கிறது.**

மோசேயின் பிரமாணம் எல்லாவகையிலும் தேவனுக்கு கொடுக்கவேண்டுமென்று கட்டளையிடுகிறது. மேலும், தேவன், தமது தீர்க்கதரிசிகள் மூலமாகவும் கொடுத்தலின் மேன்மையைப் பற்றி கட்டளையிட்டிருக்கிறார். உங்கள் தசமபாகங்களை என் பண்டகசாலைக்குக் கொண்டுவாருங்கள் என்று இவ்வுண்மையை நாம் அலட்சியப்படுத்தக் கூடியவர்களாக இருக்கக்கூடாது.அதே நேரத்தில், நாம் காணிக்கையை நம் சௌகரியத்திற்கேற்பவும் கொடுக்கக்கூடாது. ஏனென்றால், காணிக்கை கொடுப்பது நம்முடைய அன்பின் வெளிப்பாடாக இருக்கிறது. நாம் வாரத்தின் முதல் நாளில் தான் கர்த்தருக்குக் காணிக்கை கொடுக்கவேண்டுமென்று பரிசுத்தப் பக்கங்களிலிருந்து பவுல் நமக்குக் கட்டளையிடுகிறார். பரிசுத்த வான்களுக்காகச் சேர்க்கப்படும் தர்மப்பணத்தைக்குறித்து நான் கலாத்திய நாட்டுச் சபைகளுக்குப் பண்ணின திட்டத்தின்படியே நீங்களும் செய்யுங்கள். நான் வந்திருக்கும்போது பணஞ்சேர்க்குதல் இராதபடிக்கு உங்களில் அவனவன் வாரத்தின் முதல்நாள்தோறும்,தன்தன் வரவுக்குத்தக்கதாக எதையாகிலும் தன்னிடத்திலே சேர்த்துவைக்கக்கடவன் (I கொரி.16:1,2).

இந்தப்படியே, காரியங்களைச் செய்யவேண்டுமென்று கலாத்தியா நாட்டுச் சபைகளுக்கும் பவுல் போதித்திருந்தார். ஆகவே, கொடுத்தல் என்பது ஒவ்வொரு கிறிஸ்தவனின் சிறந்த கடமை என்று வேதகாமம் போதிக்கிறது. புதிய ஏற்பாட்டில் நாம் எந்த அளவு கொடுக்கவேண்டுமென்று தேவன் சொல்லவில்லை. மாறாக, நாம் அன்பு நிறைந்த உள்ளத்தோடு உதாரத்துவமாய்க் கொடுக்க வேண்டுமென்று தெளிவுபடுத்துகிறார்.

**ஆத்தும ஆதாயத்திற்கான ஆதாரமாக இருக்கிறது**

காணிக்கை என்பது அறுவடை செய்யும் நோக்கத்துடன் விதைப்பதைப் போன்றதாகும். எப்படியெனில், ஆவிக்குரிய காரியங்களில் நாம் முதலீடு செய்தால், நிச்சயம் நித்திய ஜீவனை அறுவடை செய்ய முடியும் (கலாத்தியர் 6 : 6 - 8). உதாரத்துவமாய் விதைப்பவர்கள் உதாரத்துவமாய் அறுப்பார்கள் ( 2 கொரி.9 : 6 ) கொடுத்தலின் மூலம் நாம் நமக்கான பொக்கிஷத்தை பரலோகத்தில் சேர்த்துவைக்கிறோம் என்னும் நம்பிக்கையை நம்முடைய ஆவிக்குரிய கிறிஸ்தவ வாழ்வில் நிச்சயித்துக் கொள்ளமுடியும்.

**காணிக்கை கர்த்தருடைய பணிக்கான பங்காக இருக்கிறது**


அப்போஸ்தலனாகிய பவுல், பிலிப்பி பட்டணத்து கிறிஸ்தவர்கள் தனக்கு உதவிசெய்தபடியால் அவர்களை சுவிசேஷத்திற்கு உடன் பங்காளிகள் என்று மெச்சுகிறார் ( பிலிப்பியர் 1 : 3 ).அதேபோல், மக்கெதோனிய சபைகள், யூதேயாவிலுள்ள கிறிஸ்தவர்களுக்கு உதவி செய்தபடியால், பரிசுத்தவான்களுக்காகச் செய்யப்படும் தர்ம ஊழியத்தில் தங்களையும் பங்காளிகளாக இணைத்துக் கொண்டார்கள் (2 கொரி. 8 : 4). ஆகவே, நாமும் காணிக்கை கொடுக்கும்போது சபையின் மூலமாகச் செய்யப்படும் நற்கிரியைகளில் நமக்கும் பங்களிப்பு உண்டு என்பதை உணர்ந்து நம்முடைய ஐக்கியத்தை வெளிப்படுத்தவேண்டும். அப்படிப் பங்களிப்பைக் கொடுப்பதின் மூலம் நிச்சயம் ஆத்தும அறுவடை செய்யமுடியும். உன் ஆகாரத்தைத் தண்ணீர்கள் மேல் போடு; அநேக நாட்களுக்குப் பின்பு அதின் பலனைக் காண்பாய் (பிரசங்கி 11 : 1). ✞

> **கொடுத்தல் என்பது ஒவ்வொரு கிறிஸ்தவனின் சிறந்த கடமை என்று வேதகாமம் போதிக்கிறது. புதிய ஏற்பாட்டில் நாம் எந்த அளவுக் கொடுக்கவேண்டுமென்று தேவன் சொல்லவில்லை. மாறாக, நாம் அன்பு நிறைந்த உள்ளத்தோடு உதாரத்துவமாய்க் கொடுக்க வேண்டும்.**

# வேதபாட வகுப்புகளில் கலந்து கொள்வதற்கான பத்து நல்ல காரணங்கள்

# Ten Good Reasons For Attending Bible Class

Clarence Deloach



**1. தேவபக்திக் கண்ணோட்டத்தில் :**

வேதபாட வகுப்பு நமக்கு வேதாகமத்தைப் போதிக்கிறது. வேதாகமம்தான் தேவன்மீது நாம் கொண்டிருக்கும் விசுவாசத்திற்கு ஆதாரமாயிருக்கிறது. இந்த விசுவாசம் தான் நம் சொந்த இரட்சகராகிய கிறிஸ்துவினிடத்தில் நம்மை சேர்க்கிறது.

**2. கல்விக் கண்ணோட்டத்தில் :**

வேதபாட வகுப்பு நித்தியம் சம்பந்தமான காரியங்களோடுகூட நம் மனதையும், இருதயத்தையும் பயிற்றுவிக்கிறது.

**3. சமூகக் கண்ணோட்டத்தில் :**

வேதபாட வகுப்பு சக கிறிஸ்தவர்களின் நட்பையும், ஐக்கியத்தையும் வெளிப்படுத்த வழிவகுக்கிறது.

**4. ஆள்த்துவக் கண்ணோட்டத்தில் :**

வேதபாடவகுப்பு வாழ்க்கைப் பிரச்சனைகளை எதிர்கொள்ளத் தேவையான கிறிஸ்தவப் பண்புகளை வளர்த்துக்கொள்ள உதவுகிறது.

**5. குணாதிசயக் கண்ணோட்டத்தில் :**

வேதபாட வகுப்பு வாக்கிலும், வாழ்க்கையிலும் நாம் மற்றவர்களுக்கு முன்மாதிரியாக இருக்கவேண்டுமென்று நமக்குப் போதிப்பதுதான் முக்கிய நோக்கம்.

**6. விருப்பக் கண்ணோட்டத்தில் :**

வேதபாட வகுப்பு ஆழ்ந்த அறிவையும், புரிந்துகொள்ளுதலையும் மேம்படுத்தும் வகையான பாடங்களைப் புகட்டுகிறது.

**7. குடும்பக் கண்ணோட்டத்தில் :**

வேதபாட வகுப்பு எல்லா வயதினருக்குமானதாயிருக்கிறபடியால் இதிலே முழுக் குடும்பமும் பங்குபெற்று ஆத்துமாவைப் பெலப்படுத்த முடியும்.

**8. ஊழியக் கண்ணோட்டத்தில் :**

வேதபாட வகுப்பு சபைக்கடுத்த காரியங்களில் ஒருவர் தன்னை முழுமையாக ஈடுபடுத்தவும், சக கிறிஸ்தவர்களிடம் கிறிஸ்துவ அன்பைப் பகிர்ந்துகொள்ளவும் இது ஒரு வாய்ப்பாக அமைகிறது.

**9. அழியாமைக் கண்ணோட்டத்தில் :**

வேதபாட வகுப்பு நம் கண்களைப் பரத்திற்கு நேராக ஏறெடுக்கச் செய்து உன்னதமான வாழ்க்கைக்கு நாம் ஆயத்தமாகவேண்டுமென்று நம்மை உணரச்செய்கிறது.

**10. நடைமுறைக் கண்ணோட்டத்தில் :**

வேதபாட வகுப்பு, ஞாயிற்றுக்கிழமை ஆராதனைக்கு பிறகு ஒருவர் தனது நேரத்தைப் பிரயோஜனமாகப் பயன்படுத்த உதவுகிறது. ✝

# ஜெபத்தின் வல்லமை

# The Power Of Prayer

*Dolton Key*




தேவ ஆவியினால் ஏவப்பட்ட வேதவாக்கியங்கள் எப்பாப்பிராவை, அப்போஸ்தலனாகிய பவுலுக்குப் பிரியமான உடன்வேலையாள் என்றும், கிறிஸ்துவின் உண்மையான ஊழியக்காரன் உன்றும் குறிப்பிடுகிறது (கொலொ. 1:7). இந்த எப்பாப்பிரா, கொலேசே பட்டணத்து சபைக்காகவும், அருகிலிருந்த லவோதிக்கேயா மற்றும் எராப்போலியா சபைக்காவும் மிகுந்த ஜாக்கிரதையுள்ளவன் என்று அவனைப்பற்றி பவுல் சாட்சி பகர்கிறார் (கொலோ. 4:13). இன்னுமாக இந்த ஊழியக்காரன் சபையின் வளர்ச்சிக்காக ஜெபத்தில் போராடுகிறவனாகவும் இருந்திருக்கிறான் (கொலோ.4:12).

கொலோசெயர் 4:12-ம் வசனத்தை சற்று நெருக்கமாக நாம் கவனிக்கும்போது, எப்பாப்பிராவும் உங்களுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறான்; உங்களைச் சேர்ந்தவனும், கிறிஸ்துவின் ஊழியக்காரனாகிய இவன், நீங்கள் தேவனுக்குச் சித்தமானவைகளெல்லாவற்றிலும், தேறினவர்களாயும், பூரண நிச்சயமுள்ளவர்களாயும் நிலைநிற்க வேண்டுமென்று, தன் ஜெபங்களில் உங்களுக்காக எப்பொழுதும் போராடுகிறான் என்று பார்க்கிறோம். இந்த எப்பாப்பிரா தன் பக்தி வைராக்கியத்தை சபைக்காகவும், சபையின் பக்திவிருத்திக்காவும் ஜெபித்ததின் மூலமாக வெளிப்படுத்தியிருக்கிறதை நாம் பார்க்கிறோம்.

ஆரோக்கியமும், வாய்ப்பும் அனுமதிக்கும்போது நாம் கர்த்தருடைய பிள்ளைகளின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக நாம் அதிக ஊக்கமாக ஜெபிக்ககூடியவர்களாகவும் இன்னும் அவர்களுடைய பக்திவிருத்திக்காக தேவனுடைய சத்தியத்தை பிரசங்கிக்கிறவர்களாவும் இருக்கவேண்டும் என்று அப் 8 : 4-ல் நாம் காண்கிறோம். இதன்மூலம் நாம் ஒருவருக்கொருவர் பக்திவிருத்தியை உண்டாக்க முடியும் (எபேசியர் 4 : 29). அது மாத்திரமல்ல, யாவருக்கும், விசேஷமாக விசுவாசக் குடும்பத்தார்களும் நன்மை செய்யக்கடவோம் (கலா. 6 : 10) என்று வேதம் போதிக்கிறபடியால் அதனையும் செய்ய நாம் கடமைப்பட்டவர்களாயிருக்கிறோம் என்பதை உணர்ந்து ஊழியம் செய்யவேண்டும்.


அதே நேரங்களில் நாம் நமது செயல்பாடுகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து ஜெபத்தின் மாபெரும் வல்லமைக்கு குறைந்த அளவு முக்கியத்தவம் கொடுத்து விடுகிறோம். எருசலேமிலே, பந்தி விசாரிப்புக்காக சகோதரர்கள் ஏழுபேரை நியமித்து அவர்களை உற்சாகப்படுத்திய அப்போஸ்தலர்கள் ஜெபம் பண்ணுவதிலும், வேதவசனத்தைப் போதிக்கிற ஊழியத்திலும் இடைவிடாமல் தரித்திருந்தார்கள்( அப். 6:3,4). சோர்ந்துபோகாமல் ஜெபம்பண்ணவேண்டுமென்று ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் போதிக்கிறார் ( லூக்கா 18 : 1 ). அப்போஸ்தலனாகிய பவுலும் சகோதரர்களிடம் தனக்காக ஜெபிக்கும்படி கேட்டுக்கொண்டிருக்கிறார். மேலும், அவர் யாருக்கெல்லாம் நிருபங்களை எழுதினாரோ அவர்களுக்காகத்தான் ஜெபித்ததை அவர்களிடம் உறுதிசெய்திருக்கிறார் (கொலோ. 4:1;1:3).

நாமும் நம்முடைய தாழ்மையான ஜெபத்தின் மூலமாக அநேகக் காரியங்களைச் செய்ய முடியும். பலவருடங்களாக தன்னம்பிக்கை செய்ய முடியாததை, தேவையற்ற கவலைகள் செய்யமுடியாததை ஒருமணி நேர தீவிர ஜெபம் மேலான காரியங்களாகச் செய்துவிடும். நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது (யாக்கோபு 5:16).

இன்றைய நாட்களில் சபை ஊழியத்திற்கென்று, தேவபக்தியில் ஜனங்களை வழிநடத்தக்கூடிய சுவிசேஷகர்கள் தான் அவசரமாகத் தேவைப்படுகிறார்கள். இவ்வுலகமானது பாவத்தில் சிக்கித் தவித்து, இருள் சூழ்ந்து இழந்து போன மனித இனத்தை ஜீவரட்சகராகிய இயேசு கிறிஸ்துவினிடத்தில், ஒளிவீசி வழிநடத்தும் கலங்கரை விளக்கங்களாக தேவனுடைய ஊழியர்கள் இருக்க வேண்டும். இம்மாபெரும் காரியத்தை ஜெபத்தின் வல்லமையோடே நம்மால் செய்ய முடியும்.

அருமையானவர்களே! உங்கள் வயது, பலவீனம், தடையான சூழ்நிலைகள் இவை எல்லாவற்றையும் தாண்டி, கர்த்தருக்காக ஊழியம் செய்யவேண்டுமானால் சபைக்காக நம்முடைய பக்திவைராக்கியத்தைப் பட்டைதீட்டி, கர்த்ருக்காக பிரகாசிக்கக் கூடியவர்களாக இருப்போம். அதற்கு உறுதுணையாக இருப்பது உங்களுடைய மாபெரும் ஜெபம் மட்டுமே. ஜெபியுங்கள் ஜெயம் பெறுங்கள். ✞

# கேளுங்கள், தேடுங்கள், தட்டுங்கள்




ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து ஜெபத்தைப்பற்றி இவ்விதம் கற்றுத் தந்திருக்கிறார். கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள் அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள் அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்; ஏனென்றால், கேட்கிறவன் எவனும் பெற்றுக்கொள்கிறான்; தேடுகிறவன் கண்டடைகிறான்; தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும். உங்களில் எந்த மனுஷனானாலும் தன்னிடத்தில் அப்பத்தைக் கேட்கிற தன் மகனுக்குக் கல்லைக் கொடுப்பானா? மீனைக் கேட்டால் அவனுக்குப் பாம்பைக் கொடுப்பானா? ஆகையால், பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா? (மத்தேயு 7 : 7-11).

நம் பரம தகப்பனிடமிருந்து உதவி எதுவும் வேண்டாமென்று யாரும் ஒருநாள் கூட சொன்னதில்லை. இவ்வுலகத்தில் நாம் வாழும்போது திரும்பிய பக்கமெல்லாம் பிரச்சனைகளையும், போராட்டங்களையும் எதிர்கொள்கிறோம். நமக்கு சரீரப் பிரச்சனைகள், குடும்பப் பிரச்சனைகள், பாதுகாப்பு பிரச்சனைகள் போன்ற பல பிரச்சனைகள் உண்டு. நாம் பெரும்பாலும் நம்மால் முடிந்தவைகளைச் செய்து பிரச்சனைகளுக்குத் தீர்வுகாண வழியில்லாமல் திகைக்கிறோம். இயேசுவானவர் போதிக்கும் போது, தேவன் தம்முடைய பிள்ளைகளுக்கு உதவுவார் என்று போதித்தார். மேலும், நாம் தேவனிடத்திலே கேட்கும்போது, தேடும்போது, தட்டும்போது நம் விண்ணப்பங்களுக்கு தேவன் செவிசாய்க்கக் கூடியவராக இருக்கிறார்.

தேவன் எப்போதுமே நமக்கு சிறந்ததையே தருவார். நமக்கு எது தேவை என்பதை நம்மைவிட, தேவன் நன்றாக அறிவார். பெற முடியாதவைகளை நாம் பெற்றுக்கொள்ளத்தக்கதாக ஜெபித்தால் மட்டும்போதும், கண்டறிய முடியாதவைகளை கண்டறிய நாம் தேடினால் மட்டும் போதும். ஆறுதல் மற்றும் பாதுகாப்பின் கதவு திறக்கப்படத் தட்டினால் மட்டும் போதும் என்பதை அறிந்து கொள்வது எவ்வளவு ஆசீர்வாதமானது. மேலும், கலக்கமான நேரங்களில் தீர்வுகாண நம்மால் முடியாது என்பதை தேவன் அறிவார், அறிந்து அதற்குத் தீர்வையும் உண்டாக்குவார். என்ன ஓர் அசீர்வாதம்! தம்முடைய பிள்ளைகள் மீதான தேவனுடைய அன்பை நம்மால் கற்பனை செய்துகூடப் பார்க்க முடியாது.


நீங்கள் தேவனுடைய பிள்ளையாக இருக்கிறீர்களா? உங்களுக்கு வல்லமையான உதவி தேவைப்படும்போது உங்களால் கேட்க? தேட? தட்ட? முடியுமா? நாம் தேவனுடைய பிள்ளைகளாவதற்காக இயேசு கிறிஸ்த மரித்தார். அதை நாம் விசுவாசித்து மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற்று உண்மையுள்ள ஆராதனையை உயிருள்ள கிறிஸ்தேசுவின் மூலம் ஏறெடுப்பதின் மூலமாகத் தான் நாம் தேவனுடைய பிள்ளைகள் என்பதை விளங்கச் செய்யமுடியும். நம்மடைய ஜெபத்திற்கு பதில் கிடைக்கும் ஆசீர்வாதத்தை இவ்வுலகில் யார்தான் நிராகரிப்பார்கள்? ✞

# நீங்கள் முழுவதுமாக அர்ப்பணிக்கப்பட்டிருக்கிறீர்களா?

## *Are You Fully Committed?*

David R.Kenney

கலப்பையின் மேல் தன் கையை வைத்துப் பின்னிட்டுப் பார்க்கிற எவனும் தேவனுடைய ராஜ்யத்துக்குத் தகுதியுள்ளவன் அல்ல என்றார் (லூக்கா 9:62).



வேதவல்லுநராகிய pattric marley என்பவர், தன்னுடைய புத்தகத்தில் அர்ப்பணிப்பு சம்பந்தமான காரியத்கைக் குறித்து எழுதியிருக்கிறார். அப்புத்தகத்தில் அவர் குறிப்பிடும் முக்கியமான காரியம் என்னவென்றால்,கிறிஸ்துவுடனே நம்முடைய வாழ்க்கையை அர்ப்பணிப்பு உணர்வோடு தொடங்கவில்லை என்கிறார். அதாவது,இயேசு கிறிஸ்துவை நாம் ஆண்டவராக ஏற்றுக்கொள்ளாமல், அவர் நம் இரட்சகராக இருக்கவேண்டுமென்று எண்ணுகிறோம். எப்படியெனில், ஒருவர் தன் பாவத்தை விட்டு விலகாமலேயே, கிறிஸ்துவைச் சேர முடியும் என்ற நம்பிக்கையில் வாழ்கிறார். இன்னும் சிலர் இந்தப் பரபரப்பான உலக வாழ்க்கையில் ஏதோ ஒன்றைச் சேர்த்துக் கொள்வதுபோல் கிறிஸ்துவைச் சேர்த்துக் கொள்கிறார்கள். இப்படி அவர்கள் செய்யும்போது, கிறிஸ்தவத்தின் உண்மைத் தன்மையை இன்னும் புரிந்து கொள்ளவில்லை என்று தான் அர்த்தம்.

எங்கள் மகன் நடக்க கற்றுக்கொண்டிருந்த போது, நாங்கள் எங்கள் கரங்களை விரித்துக்கொண்டு அவன் கீழே விழும் சமயம் அவனைப் பிடிப்பதற்கு ஆயத்தமாக இருப்போம். அவன் தடுமாறி நடப்பதைப்போல் நாங்களும் அவனோடு சேர்ந்து அவ்வாறே நடப்போம். ஆனால் இப்போதெல்லாம் நாங்கள் அவ்விதமாக அவனோடு நடப்பதில்லை. ஏனென்றால், அவன் இப்போது தானாகவே தடுமாற்றமில்லாமல் நடப்பதற்குப் பழகிவிட்டான். இப்போது நாங்கள் முன்புபோல அவன் பின்னால் நடந்தால் நீங்கள் என் பின்னே வரவேண்டாம் என்று சொல்லுவான்.

முதல் நூற்றாண்டில் ஜனங்கள் கிறிஸ்தவர்களானபோது அவர்களோடு நடப்பதற்கு விசுவாசத்தில் தேர்ந்த கிறிஸ்தவர்கள் தேவைப்பட்டார்கள். குழந்தைகள் தங்கள் சரீரம் வளர்ச்சி பெறும்போது தாங்களாகவே நடக்கக் கற்றுக்கொள்வதுபோல கிறிஸ்தவர்களும் ஆவிக்குரிய பிரகாரமாக வளரும்போது கிறிஸ்தவ வாழ்க்கையைத் தாங்களாகவே வாழவேண்டும். ஒவ்வொருவரும் பரலோக வீட்டில் இயேசு கிறிஸ்துவோடு நடக்க வேண்டும். மேலும் வேதவசனங்களால் வழிநடத்தப்படும்பொழுது வளரும் கிறிஸ்தவர்களின் ஆவிக்குரிய வாழ்வுக்கு கைகொடுக்க வேண்டும் என்ற அவசியத்தை நாம் வளர்த்துக் கொள்ளவேண்டும்.

இங்கே, நாம் ஒருவருக்கொருவர் புத்திசொல்வதைக் குறித்து நான் பேசவில்லை. மாறாக, நாம் எல்லோருமே சக கிறிஸ்தவர்களிடமிருந்து புத்திமதிகளைப் பெறுகிறோம். அதாவது நாம் சபையாகக் கூடுவதன் நோக்கங்களுள் ஒன்று நாம் ஒருவருக்கொருவர் புத்தி சொல்ல வேண்டும் என்பதாயிருக்கிறது. இருந்தபோதிலும் நாம் எப்படி தேர்ந்த கிறிஸ்தவர்களின் ஆலோசனையின்படி ஆவிக்குரிய பிரகாரமாக வளர்ந்ததைப்போல மற்ற கிறிஸ்தவர்களும் வளர நாம் ஊக்கம் கொடுக்கிறவர்களாக இருக்க வேண்டும்.

ஒரு கிறிஸ்தவன் தான் வளர வேண்டிய அளவுக்கு வளரவில்லையென்றால் என்ன பிரச்சனையாகும்? வேதவல்லுநர் marker அவர்கள் சொன்னதுபோல,ஒரு நபர் இயேசு கிறிஸ்துவை இரட்சகராகத்தான் ஏற்றுக்கொள்கிறாரே தவிர தேவனுடைய குமாரன் என்று ஏற்றுக்கொள்ளவில்லை. கிறிஸ்தவம் என்பது நம் வாழ்க்கையில் ஏதோ ஒரு பொருளைச் சேர்த்துக்கொள்வதைப் போன்றதல்ல. மாறாக, அது ஒருவருடைய வாழ்க்கையை முற்றிலுமாக மாற்றும் ஒரு மாபெரும் மார்க்கமாகும் (ரோமர் 12 :1,2). நாம் கிறிஸ்து இயேசுவின் மூலமாக சபையிலே தேவனை ஆராதிப்பதற்குப் போதுமான உபதேசக் காரியங்களைச் செய்யவில்லையென்றால் அந்த ஆராதனை தேவன் விரும்பாத ஒரு ஆராதனையாகவே இருக்கும். அப்படியே உங்களில் எவனாகிலும் தனக்கு உண்டானவைகளையெல்லாம் வெறுத்துவிடாவிட்டால் அவன் எனக்கு சீஷனாயிருக்க மாட்டான் என்று இயேசு சொன்னார் (லூக்கா 14 : 33). ✝

# பேதுருவின் வாழ்க்கையில் நான் யார்?

## WHO AM I IN THE LIFE OF PETER

*Rebecca Rushmore*

என்னை உங்களால் அடையாளம் கண்டுகொள்ள முடிகிறதா? கீழே கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளை கவனமாக வாசித்து நீங்கள் கண்டுபிடிக்கும் ஒவ்வொரு நபருக்கும் 10 மதிப்பெண்களை உங்களுக்கு நீங்களே கொடுத்துக் கொள்ளுங்கள். அடையாளத்தை நீங்கள் உறுதிசெய்துவிட்டால், சரிபார்க்க, தேவனுடைய வார்த்தையிலிருந்த வேத வசனங்களை ஆராய்ந்து பாருங்கள்.

1. நான் பேதுருவின் சகோதரன் (யோவான் 1 : 40).

2. நான் பேதுருவின் தகப்பன் (யோவான் 21 : 16).

3. நாங்கள் பேதுரு மற்றும் அவருடைய சகோதரரோடு மீன்பிடி தொழில் செய்பவர்கள் (லூக்கா 5 : 10).

4. பேதுருவின் பிரசங்கத்தைக் கேட்டு மனமாற்றமடைந்த முதல் புறஜாதியான் நான் (அப்போஸ்தலர் 10 அதி).

5. நான் பேதுரு மற்றும் யோவானிடமிருந்து அற்புத அடையாளங்கள் செய்யும் வல்லமையை பணத்தால் வாங்க நினைத்தேன் (அப் 8 : 14-24).

6. மரித்த என்னை பேதுரு உயிரோடு எழுப்பினார் (அப் 9 : 36 -41).

7. நான் பேதுருவையும், மற்ற அப்போஸ்தலரையும் தனியே விடும்படியாக ஆலோசனை சங்கத்திற்கு அறிவுறுத்தினேன் (அப் 5 : 16 -41).

8. நான் பேதுரு கதவைத் தட்டினபோது கதவைத் திறக்கவில்லை (அப் 12 : 1 - 7).

9. இயேசு கிறிஸ்து கைது செய்யப்பட்டபோது பேதுரு என் காதை வெட்டினார் (யோவான் 18 : 10).

10. நாங்கள் எங்கள் காணியாட்சியை விற்றது குறித்து பேதுருவிடமும் தேவனிடமும் பொய் சொன்னோம் (அப் 5 : 1 -10).

# விவாகத்திற்கான தேவனுடைய மாதிரி

# Gods Pattern For Marriage

*Travls L.Quertermous*



இதினிமித்தம் புருஷன் தன் தகப்பனையும் விட்டு தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள் என்று ஆதியாகமம் 2:24 ல் தேவன், மோசேயைக்கொண்டு சொன்னார். இவ்வசனப்பகுதி விவாகத்திற்கான ஓர் அஸ்திபார வசனப்பகுதியாகும். இந்த வார்த்தைகள் ஏதேன் தோட்டத்தில் ஆதாமுக்கும், ஏவாளுக்கும் விவாகத்தை நடத்தி முடித்தவுடனே தேவனால் பேசப்பட்டன. இன்றைய நாட்களில் பலகுடும்பங்களில் ஏற்பட்டிருக்கின்ற பிரச்சனைகளை வைத்துப் பார்க்கும்போது ஆதிகாமம் 4:24-ம் வசனப்பகுதியானது விவாகம் பற்றி நாமெல்லாரும் கற்றுக் கொள்ளவேண்டிய உண்மைகளைப் போதிக்கிறது.

விவாகம் என்பது ஒரு மனிதனுக்கும் ஒரு மனுஷிக்கும் இடையே நடக்கும் ஒரு நிகழ்வாகத்தான் சொல்லப்படிருக்கிறது. சில வருடங்களுக்கு முன்புவரை ஒருவனுக்கு ஒருத்தி என்னும் நிலைதான் இருக்கிறது. ஆனால், சமீபகாலமாக ஓரினச் சேர்க்கை மற்றும் பலதாரமுறைக்கு பலர் ஆதரவுக் குரல் கொடுத்து வருகின்றனர். இப்படிச் செய்வது தேவனுடைய விவாக மாதிரிக்கு எதிரானது என்பது வலியுறுத்தப்படவேண்டும்.

விவாகம், நிரந்தரமாயிருக்க வேண்டுமென்று தேவனால் வடிவமைக்கப்பட்டிருக்கிறது. கணவனும், மனைவியுமாக இணைந்தவர்கள் இப்பூமியில் உள்ளவரை ஒருவரையொருவர் பிரியாமல் வாழவேண்டுமென்பது தேவனுடைய சித்தமாயிருக்கிறது. இதைக் குறித்து இயேசுவானவர் சொல்லும்போது அவர்கள் இருவராயிராமல் ஒரே மாம்சமாயிருக்கிறார்கள்; ஆகையால் தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கக்கடவன் (மத்தேயு 19 : 6) என்று சொன்னார். ஆனால் இன்று அநேகத் திருமணங்கள் விவாகரத்தில் தான் முடிகின்றன. எனவே, விவிலிய விவாகத்தைக் குறித்து தேவனுடைய மேன்மையை நாம் எல்லோரும் கற்றுக்கொள்ள வேண்டியது அவசியம்.



கடைசியாக விவாகம் என்பது தகப்பனையும், தாயையும் விட்டு கணவனும், மனைவியுமாக வாழ ஆயத்தமாக இருப்பவர்களுக்கானது. இன்று பல திருமணங்கள் முறிந்து போகமலிருப்பதற்கான காரணம் தம்பதிகள் தங்கள் முதிர்ச்சியடைந்த பெற்றோரைவிட்டு தங்கள் வாழ்க்கைத் துணையோடு ஒரே மாம்சமாயிருப்பதினால் தான்.

ஆகையால் நாமெல்லோரும் விவாகத்தைப்பற்றிய தேவனுடைய மாதிரியின் மகிமையை உயர்த்திப்பிடித்து நம் குடும்பத்தை சிறந்த கிறிஸ்தவ இல்லங்களாக மாற்றப் பாடுபடவேண்டும். ✞

# வாலிபர்களுக்கு அர்ப்பணிப்பு
## *Dedicated To Teens*

Carroll Sites

வாழ்க்கையின் மகத்தானதொரு காலகட்டம் வாலிபப்பருவமாகும். சபையில் உள்ள வாலிபர்களே! உங்களைக் குறித்து நீங்கள் பெருமைப்பட வேண்டும். ஏனென்றால், நீங்கள் சபையில் தூண்கள் மட்டுமல்ல, முக்கியமான அங்கமாகவும் இருக்கிறீர்கள். நீங்கள் ஆர்வமாக ஆராதனையில் கலந்துகொண்டு ஜெபிப்பதில் வாஞ்சையாயிருப்பதோடு மட்டுமல்லாமல் ஊழியத்திற்கும் உதவியாயிருக்க வேண்டியவர்களாயிருக்கிறீர்கள் என்பதை உணர்ந்து ஆவிக்குரிய காரியங்களில் உந்தப்படவேண்டும்.



**நீங்கள் வெற்றிகரமான வாலிபராக இருக்கிறீர்களா?**

★ நீங்கள் உங்கள் அம்மாவை ஏதாவது வாங்கிக்கொடுங்கள் என்று கேட்காமல் கடைசியாக எப்போது அவரை அரவணைத்தீர்கள்?

★ நீங்கள் உங்கள் அப்பாவிடம் உங்கள் தேவைகளைச் சொல்லாமல் கடைசியாக எப்போது அவரிடம் இனிமையாக நடந்து கொண்டீர்கள்?

★ நீங்கள் உங்கள் பெற்றோர்களின் நண்பர்கள் மீது அக்கறை கொண்டு அவர்களை மரியாதையாக நடத்துகிறீர்களா?

★ நீங்கள் உங்கள் வீட்டைக் குறித்து மகிழ்ச்சியாயிருக்கிறீர்களா?

★ நீங்கள் உங்கள் பெற்றோர் உங்களை வெளியே எங்காவது அழைத்துச் சென்றால் சரியான நேரத்திற்கு ஆயத்தமாகிறீர்களா?

★ நீங்கள் உங்கள் வீட்டில் குப்பைகளைச் சுத்தம் செய்வீர்களா அல்லது வேறுயாராவது வந்து செய்யட்டும் என்று எதிர்பார்ப்பீர்களா?

★ நீங்கள் உங்கள் வாகனத்தைச் சரியாகப் பராமரித்து, கடைசியாக எப்போது எரிபொருள் நிரப்பினீர்கள்?

★ நீங்கள் உங்கள் வீட்டிற்கு நேரத்திற்கு வருகிறீர்களா அல்லது பெற்றோர் உங்களைத் தேட வேண்டுமா?

★ நீங்கள் ஒருநிமிடம் இருங்கள் அல்லது நான் கண்டிப்பாகச் செய்யவேண்டுமா என்று கேட்காமல், உங்கள் பெற்றோர் சொன்னபடியே கடைசியாக எப்போது செய்தீர்கள்?

★ நீங்கள் உங்கள் பெற்றோரைப் பற்றி பெருமைப்படுகிறீர்களா?

வாலிபர்களே! மேற்சொல்லப்பட்ட காரியங்களை நன்றாய்க் கவனித்தீர்களா? இப்போது உங்கள் நிலை என்ன? நீங்கள் உங்கள் விசுவாச வாழ்க்கையில் வெற்றிகரமான வாலிபராக இருக்கவும் சத்தியங்களைக் கற்றுக்கொள்ளவும் அதை அறிந்துகொள்ளவும் தக்கதாக வளருங்கள். நீங்கள் தான் நாளைய பெற்றோர்களாக, போதிக்கிறவர்களாக மாறப்போகிறீர்கள். அப்படி மாறப்போகும் உங்களுக்கு நன்றி! தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!! ✞

# பேதுருவின் வாழ்க்கையில் நான் எங்கே இருக்கிறேன்?

## *Where Am I In The Life Of Peter ?*

*Rebecca Rushmore*

என்னை உங்களால் அடையாளம் கண்டுகொள்ள முடிகிறதா? கீழே கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைக் கவனமாக வாசித்து யோசியுங்கள். நீங்கள் கண்டுபிடிக்கும் ஒவ்வொரு இடத்திற்கும் 10 மதிப்பெண்களை உங்களுக்கு நீங்களே கொடுத்துக்கொள்ளுங்கள். அடையாளத்தை நீங்கள் உறுதிசெய்துவிட்டால் சரிபார்க்க தேவனுடைய வார்த்தையிலிருந்து வேத வசனங்களை ஆராய்ந்து பாருங்கள்.

1. பேதுருவாகிய எனது சொந்த ஊர் எது? (யோவான் 1:44) .

2. இயேசுகிறிஸ்து தம்மைப் பின்பற்றும்படி அழைத்தபோது நான் எங்கே இருந்தேன் (மத் 4 : 18).

3. கிறிஸ்து தேவனுடைய குமாரனென்று நான் எங்கே அறிக்கை செய்தேன்? (மத்தேயு 16;13-20).

4. நான் முதல் சுவிசேஷப் பிரசங்கத்தை எங்கே செய்தேன்? (அப்போஸ்தலர் 2).

5. சுத்தமான, அசுத்தமான மிருகங்கள் பற்றிய தரிசனம் உண்டானபோது நான் எங்கே இருந்தேன்? (அப்போஸ்தலர் 10:5-16).

6. புறஜாதியாருக்கு என் முதல் பிரசங்கத்தை நான் எங்கே செய்தேன்? (அப்போஸ்தலர் 10).

7. இயேசு கிறிஸ்து என் மாமியை சுகமாக்கினபோது என் வீடு எங்கே இருந்தது? (மத்தேயு 8 : 5-15).

8. நான் ஒருவருடைய காதை வெட்டினபோது எங்கே இருந்தேன்? (யோவான் 18 : 10; மாற்கு 14 : 38 - 47).

9. எட்டு வருஷமாய்க் கட்டிலின்மேல் திமிர்வாதமுள்ளவனாய்க் கிடந்த ஒரு மனிதனை நான் எங்கே வைத்து சுகமாக்கினேன்? (அப். 9 : 32 -35).

10. யூதர்கள் இருந்தபோது நான் புறஜாதியாரோடு புசிக்கும் விஷயத்தில் பவுல் என்னை எங்கே எதிர்த்தார்? (கலாத்தியர் 2 : 11,12).

# உன் தேவனாகிய கர்த்தரை மறவாதே

உன் தேவனாகிய கர்த்தரை மறவாதபடிக்கும், நான் இன்று உனக்கு விதிக்கிற அவருடைய கற்பனைகளையும் நியாயங்களையும் கட்டளைகளையும் கைக்கொள்ளாமற் போகாதபடிக்கும் எச்சரிக்கையாயிரு. நீ புசித்துத் திர்ப்தியாகி நல்ல வீடுகளைக் கட்டி அவைகளில் குடியிருக்கும்போதும், உன் ஆடுமாடுகள் திரட்சியாகி உனக்கு வெள்ளியும் பொன்னும் பெருகி உனக்கு உண்டானவையெல்லாம் வர்த்திக்கும் போதும், உன் இருதயம் மேட்டிமையடையாமலும், உன்னை அடிமைத்தன வீடாகிய எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினவரும் , உன்னுடைய பின்நாட்களில் உனக்கு நன்மை செய்யும்பொருட்டு, உன்னைச் சிறுமைப்படுத்தி, உன்னைச் சோதித்து, கொள்ளிவாய்ச் சர்ப்பங்களும், தேள்களும், தண்ணீரில்லாத வறட்சியுமுள்ள பயங்கரமான பெரிய வனாந்திரவழியாய் உன்னை அழைத்து வந்தவரும், உனக்காகப் பாறையான கன்மலையிலிருந்து தண்ணீர் புறப்படப்பண்ணினவரும், உன் பிதாக்கள் அறியாத மன்னாவினால் வனாந்தரத்திலே உன்னைப் போஷித்துவந்தவருமான உன் தேவனாகிய கர்த்தரை நீ மறவாமலும், என் சாமர்த்தியமும் என் கைபெலனும் இந்த ஐசுவரியத்தை எனக்குச் சம்பாதித்தது என்று நீ உன் இருதயத்தில் சொல்லிக்கொள்ளாமலும் இருக்க எச்சரிக்கையாயிருந்து, உன் தேவனாகிய கர்த்தரை நினைப்பாயாக; அவரே உன் பிதாக்களுக்கு ஆணையிட்டுக் கொடுத்த தம்முடைய உடன்படிக்கையை உறுதிப்படுத்தும்படி, இந்நாளில் உனக்கு உண்டாயிருக்கிறதுபோல, ஐசுவரியத்தைச் சம்பாதிக்கிறதற்கான பெலனை உனக்குக் கொடுக்கிறவர். உன் தேவனாகிய கர்த்தரை நீ மறந்து, வேறே தேவர்களைப் பின்பற்றி, அவர்களைச் சேவித்து அவர்களைப் பணிந்து கொள்வாயானால், நிச்சயமாய் அழிந்து போவீர்கள் என்று இன்று உங்களுக்கு சாட்சியாய் அறிவிக்கிறேன். உன் தேவனாகிய கர்த்தருடைய சத்தத்திற்கு நீங்கள் கீழ்ப்படியாமற் போவதினால் கர்த்தர் உங்களுக்கு முன்பாக அழித்த ஜாதிகளைப்போல நீங்களும் அழிவீர்கள் (உபா.8:11-20). ✝

# மலைப் பிரசங்கத்தையும் தாண்டி பாக்கியவான்கள் பட்டியல்

## *The Beautudes Beyond the Sermon on the Mount*

Kevin L. Moore

பாக்கியவான்கள் என்பதற்கான கிரேக்கப்பதம் மத்தேயு எழுதிய சுவிசேஷம் புத்தகத்தில் பதிமூன்று முறை பதிவுசெய்யப்பட்டிருக்கிறது. இவையெல்லாமே இயேசுகிறிஸ்துவின் போதனையில்தான் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இதில் ஒன்பது முறை மலைப்பிரசங்கத்தின் ஆரம்ப வசனங்களில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இவைகள் பொதுவாக பாக்கியவான்கள் வசனப்பகுதி என்றே அழைப்படுகின்றன (மத்தேயு 5:3-11). இலத்தீன் மொழியில் beautus என்னும் வார்த்தைக்கு தமிழில் சந்தோஷமானவன் என்று அர்த்தம். ஆனால், கிரேக்கப்பதமான Makarios தமிழில் பாக்கியவான்கள் என்று மொழியாக்கம் செய்யப்பட்டிருக்கிறது. இதன் பொருள் தேவன்மீது நம் கவனத்தைச் செலுத்தி எல்லா ஆசீர்வாதங்களும் அவரிடத்திலிருந்துதான் வருகிறது என்று அவரைச் சார்ந்திருக்கும் ஒருவரைக் குறிக்கிறது (யாக்கோபு 1:17). மேலும், பாக்கியவான் என்னும் பதம் மத்தேயு சுவிசேஷப் புத்தகத்தின் ஐந்தாம் அதிகாரம் தவிர நான்குமுறை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அவைகளைக் குறித்துச் சற்று விரிவாக நாம் காண்போம்.

**என்னிடத்தில் இடறலடையதிருக்கிறவன் எவனோ அவன் பாக்கியவான்:**

மத்தேயு பதினொன்றாம் அதிகாரத்தில் காவலில் வைக்கப்பட்டிருந்த யோவான் ஸ்நானன் கிறிஸ்துவிடமிருந்து நிச்சியமான வார்த்தைகளை எதிர்பார்த்திருந்தார். அப்பொழுது, கிறிஸ்து தனது ஊழியத்தின் தாக்கத்தை சுறுக்கமாக விவரித்து, ஆறாம் வசனத்தில் என்னிடத்தில் இடறலடையாதிருக்கிறவன் பாக்கியவான் என்று உறுதிப்படுத்தினார். ஏனென்றால், அந்நாட்களில் கிறிஸ்துவைப் பின்பற்றுவது எளிதாயிருக்கவில்லை. கடினமான காலங்கள் கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களுக்குக் காத்திருந்தன (10:16-25; யோவான் 15:20,21; 16:1-4,33). இந்நாட்களிலும் கூட நாம் கிறிஸ்தவர்களாயிருப்பது சவால்களை உள்ளடக்கிய ஒன்றாகத்தான் இருக்கிறது. நாம் வாழும் இவ்வுலகம் மதக் கலகம்,

அநீதி, அவிசுவாசம் மற்றும் பாவத்தால் நிரப்பப்பட்டிருக்கிறது. தேவனுடைய ஜனங்கள் இவைகளால் அச்சுறுத்தப்படுகிறார்கள், துன்பப்படுத்தப்படுகிறார்கள். ஆனாலும், நாம் உண்மையாகவே பாக்கியவான்கள் என்பதை ஒருபோதும் மறந்துவிடவேண்டாம். ஏனெனில், நம் ஆண்டவருடைய உற்சாகப்படுத்துதலைக் கவனியுங்கள். என்னிடத்தில் இடறலடையாதிருக்கிறவன் எவனோ அவன் பாக்கியவான். உங்கள் கண்கள் காண்கிறதினாலும், காதுகள் கேட்கிறதினாலும் பாக்கியமுள்ளவைகள்.

மத்தேயு பதிமூன்றாம் அதிகாரத்தில் பாக்கியம் என்ற வார்த்தை மறுபடியும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இந்தமுறை இயேசுகிறிஸ்து தாம் உவமைகளினால் போதித்ததற்கான காரணங்களை விளக்கும்போது பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இங்கே, இயேசுகிறிஸ்து ஜனங்கள் கண்களினால் காணாமலும், காதுகளினால் கேளாமலும், இருதயத்தினால் உணர்ந்து மனந்திரும்பாமலும் இருப்பதைக் குறித்துப் பேசுகிறார் (10-15). பின்பு அவர், தம்மை உண்மையாய்ப் பின்பற்றினவர்களைப் பார்த்து, உங்கள் கண்கள் காண்கிறதிகாலும், உங்கள் காதுகள் கேட்கிறதினாலும் அவைகள் பாக்கியமுள்ளவைகள் என்று சொன்னார் ( வசனம் 16 ). சத்தியம் வெளிப்படையாக அறிவிக்கப்படும்போது ஜனங்கள் அதைக் காணாமலும், கேளாமலும் இருபதற்கான காரணம் அவர்கள் தங்கள் இருதயத்தைக் கடினமாக்கிக் கொள்வதும் மனதை அடைத்துக்கொள்வதும் தான்.

**தேவனுடைய வெளிப்பாட்டை ஏற்றுக்கொள்கிறவர்கள் பாக்கியவான்கள்.**

மத்தேயு பதினாறாம் அதிகாரத்தில், ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து தம்முடைய சீடர்களைப் பார்த்து, மனுஷகுமாரனாகிய என்னை ஜனங்கள் யார் என்று சொல்லுகிறார்கள் என்று கேட்டார். அதற்கு, சீமோன்பேதுரு, உறுதியாக நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்றார். உடனே, இயேசு அவனைப் பார்த்து யோனாவின் குமாரனாகிய சீமோனே நீ பாக்கியவான்; மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை, பரலோகத்திலிருக்கிற என்பிதா இதை உனக்கு வெளிப்படுத்தினார் என்றார். பரலோகத்திலிருக்கிற நம் தேவன் எப்படி பேதுருவுக்கு வெளிப்படுத்தினார்

என்பது நமக்குத் தெரியவில்லை. ஆனால், தெய்வீக வெளிப்பாட்டைப் பெற்றுக்கொள்வது மிகப்பெரிய ஆசீர்வாதமாகும். இன்றைய நாட்களில் தேவனுடைய சித்தம் பரிசுத்த எழுத்து வடிவத்தில் தரப்பட்டுள்ளது (எபேசியர் 3:15; தீமோத்தேயு 3:16,17 ). ஆகவே, பரிசுத்த எழுத்துக்களை வாசிக்க நமக்கு வாய்ப்புத் தரப்பட்டிருக்கிறபடியால், நாம் உண்மையாகவே பாக்கியவான்கள் தான்! அதே நேரத்தில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிற தேவனுடைய வார்த்தை அலட்சியப்படுத்தப்படும்போது, அதாவது, நீண்ட நாட்களாக நாம் வேதாகமத்தைப் படிக்காமல், தூசிபடிய விட்டுவிட்டால் நிச்சயமாக அதினால் ஏற்படும் விளைவுகளை நாம் சந்திப்போம் என்பதில் எவ்வித ஐயப்பாடுமில்லை! தேவனுடைய வெளிப்பாடுகள் முழுமனதாக ஏற்றுக்கொள்ளப்படும்போது மட்டுமே நாம் பாக்கியவான்கள் என்றழைக்கப்பட முடியும்.

**ஆயத்தமாயிருக்கிறவர்கள் பாக்கியவான்கள்.**

ஆண்டவரின் வருகை எப்போது என்று நமக்குத் தெரியாதிருக்கிறபடியால், ஆவிக்குரிய ஆயத்தத்தின் முக்கியத்துவத்தை மத்தேயு 24ம் அதிகாரத்தில் இயேசுகிறிஸ்து வலியுறுத்தியுள்ளார் ( 36-44). உண்மையும் விவேகமும் உள்ள ஊழியக்காரனாயிருக்கவேண்டுமென்றால், நாம் நமக்கு ஒப்புவிக்கப்பட்ட பொறுப்புகளை நிறைவேற்ற வேண்டும் (வசனம் 45 ). நம் ஆண்டவர், எஜமான் வரும்போது அப்படிச்செய்கிறவனாகக் காணப்படுகிற ஊழியக்காரனே பாக்கியவான் என்று சொல்லுகிறார். இவ்வதிகாரத்தின் மீதமுள்ள வசனங்கள் ஆயத்தமின்மையின் நிலையை நமக்குச் எடுத்துக்காட்டுகிறது. எனவே, தெய்வீக நியாயத்தீர்ப்பின் நிச்சயத்தை அறியாதிருப்பது எவ்விதத்திலும் சாக்குப்போக்காகாது. அப்படியே அது சாக்குப்போக்காக இருந்தாலும் தேவன் அதை ஏற்றுக்கொள்ளமாட்டார். கர்த்தருக்குள் நாம் உண்மையுள்ளவர்களாக கீழ்ப்படிதலுள்ளவர்களாக நிலைத்திருந்தால் பரலோகத்தின் ஆசீர்வாதங்களை ஆனந்தமாய் சுதந்தரித்துக் கொள்ள முடியும்.

பிரியமானவர்களே! மேலே குறிப்பிட்டுள்ளபடி, தேவனுக்குத் தங்கள் உண்மைத்தன்மையை வெளிப்படுத்துகிறவர்கள் பாக்கியவான்கள்; மேலானவைகளின் மீது தங்கள் சிந்தையைப் பதித்து தங்கள் கண்களால் சத்தியத்தைக் காண்கிறவர்கள், தங்கள் காதுகளால் சத்தியத்தைக் கேட்கிறவர்கள் பாக்கியவான்கள், தேவனுடைய வெளிப்பாட்டை ஏற்றுக்கொள்ளுகிறவர்கள் பாக்கியவான்கள், கர்த்தருடைய வருகையை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் ஆயத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள் என்று பார்த்தோம். இவைகள் நம் ஆவிக்குரிய வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றும் என நம்புகிறேன். ✞

# பிலேமோன் உங்களை இளைப்பாற்றினவர்
# Philemon a Refresher of Hearts

*Maxie B.Boren*

வாழ்க்கைப் பயணத்தில் நாம் விதவிதமான குணநலன்களையுடைய மக்களைச் சந்திக்கிறோம். சிலர் நம்பிக்கையும் உற்சாகமும் உடையவர்களாக இருக்கிறார்கள். சிலர் நம்பிக்கையே இல்லாதவர்களாகவும், கலகலப்பில்லாதவர்களாகவும்இருக்கிறார்கள். சிலர், புன்னகை பூரிப்பவர்களாகவும், சிலர், நேர்மையான எண்ணங்களை உடையவர்களாகவும் சிலர், எதிர் மறையான எண்ணங்களை உடையவர்களாகவும் இருக்கிறார்கள். ஏன் இவ்விதமாக இருக்கிறார்கள் என்று எனக்குச் சரியாக விளங்கவில்லை. ஆனால், உற்சாகமற்ற ஒருவனாக இருக்க நான் விரும்பவில்லை.

எனக்குத் தெரிந்த ஒரு விஷயம் உண்மையான கிறிஸ்தவன் மன மலர்ச்சி உடையவனாய், மற்றவர்களை உற்சாகப்படுத்தும் நல் வார்த்தைகளையே பேசுவான். இப்படிப்பட்டவர்களுடைய எண்ணிக்கை பெருகட்டும். பிலமோன் அப்படிப்பட்ட ஒரு நபராக இருந்திருக்கிறார். அவருடைய பெயரைத் தாங்கிய புதிய ஏற்பாடு புத்தகத்தின் ஏழாம் வசனத்தில் அப்போஸ்தலனாகிய பவுல் சகோதரனே பரிசுத்தவான்களுடைய உள்ளங்கள் உம்மாலே இளைப்பாறினபடியால் உம்முடைய அன்பிலே மிகுந்த சந்தோஷமும் ஆறுதலும் அடைந்திருக்கிறோம் என்று சொன்னான். பிலேமோன் பவுலால் மனமாற்றம் செய்யப்பட்டவராக நம்பப்படுகிறபடியால், பவுலின் தாக்கம் இவரிடத்தில் இருப்பதையும் தன்னுடைய ஆசானும் ஆலோசகராகவும் இருந்த பவுலின் குணநலன்களை அப்படியே உள்வாங்கிக் கொண்டார். பதிலுக்கு பவுலும் தான் போதித்த பிலேமோனுக்குள் இப்படிப்பட்ட இனிமையான குணம் இருப்பதைக்கண்டு அவரைப் பாராட்டினார். மற்றவர்களை உற்சாகப்படுத்துகிற குணம் எப்போதுமே மெச்சத்தகுந்தது.

அப்போஸ்தலனாகிய பவுல் இராயனுக்கு முன்பாகத் தன்னைக் காண்பிக்க கப்பலில் பயணித்தபோது பலவிதமான ஆபத்துக்களை எதிர்கொள்ள வேண்டியதாயிருந்தது. அதிலும் குறிப்பாக, பெருங்காற்றினால்

அவர்கள் அவதிப்பட்டபோது மாலுமிகளின் பயத்தை பவுல் இவ்விதமாக நீக்கினார். ஆகிலும் திடமானதாயிருங்களென்று இப்பொழுது உங்களுக்குத் தைரியஞ்சொல்லுகிறேன். கப்பற்சேதமேயல்லாமல் உங்களில் ஒருவனுக்கு பிராணச்சேதம் வராது. ஏனென்றால், என்னை ஆட்கொண்டவரும் நான் சேவிக்கிறவருமான தேவனுடைய தூதனானவன் இந்த இராத்திரியிலே என்னிடத்தில் வந்து நின்று பவுலே பயப்படாதே நீராயனுக்கு முன்பாக நிற்கவேண்டும். இதோ, உன்னுடனேசவட யாத்திரை பண்ணுகிற யாவரையும் தேவன் உனக்குத் தயவு பண்ணினார் என்றான். ஆனபடியினால் மனுவுரே திடமனதாயிருங்கள். எனக்குச் சொல்லப்பட்ட பிரகாரமாகவே நடக்கும் என்று தேவனிடத்தில் நம்பிக்கையாயிருக்கிறேன் ( அப்பொஸ்தலர் 27 : 22 - 25 ) என்ற பவுலின் வார்த்தைகள். ஜீவனைப் பற்றி பயம் கொண்டிருந்தவர்களின் காதில் தேன்பாய்ந்தவிதமாக இருந்தது.

பவுல் ரோமாபுரிக்கு பயணித்துக்கொண்டிருந்தபோது அவர் ஏற்கனவே தான் பட்ட பாடுகளைக் குறித்துப் பாரப்பட்டிருப்பார். அதேநேரத்தில் தான் பாடப்போகிற பாடுகளைக் குறித்தும் சிந்தை உடையவராகவே இருந்திருப்பார். பவுல் ரோமாபுரிக்கு வருகிறார் என்று கேள்விப்பட்ட அப்பட்டணத்தை சபையார் அவரைப்போய் சந்திப்பார். அவர்களைப் பவுல் கண்டு தேவனை ஸ்தோத்தரித்துத் தைரியமடைந்தான் (அப்போஸ்தலர் 28 : 15).

கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் ஆவியை உடையவர்களாயிருக்க வேண்டும், அப்படியில்லையென்றால் நாம் அவருடையவர்களல்ல (ரோமர் 8 : 12). இயேசு கிறிஸ்து, இரட்சிப்பை அறிவிப்பதற்காகவும் ( யோவான் 3 : 16,17) இருளில் மூழ்கிப்போயிருக்கிற இவ்வுலகத்திற்கு வெளிச்சத்தைக் கொண்டு வருவதற்கும் ( யோவான் 8 : 12 ). பரிபூரண ஜீவனை அளிப்பதற்கும் ( யோவான் 10 : 6). இப்பூமிக்கு வந்தார். மேலும் அவர் கலங்கிய இருதயங்களுக்கு சமாதானத்தைப் பிரசங்கிக்கவும் (எபேசியர் 2 : 17; யோவான் 14 : 1) திடன்கொள்ளுங்கள் நான் உலகத்தை ஜெயித்தேன் என்று அறிவிக்கும்படியாகவும் இவ்வுலகத்திற்கு வந்தார் ( யோவான் 16:33 ). இயேசு கிறிஸ்து ஈடுஇணையில்லாதவராக இருக்கிறபடியால், நாம் அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றி மகிழ்ச்சியையும் நம்பிக்கையும் பாரெங்கும் பரவச்செய்வோம் (மாற்கு 16:15,16; கலாத்தியர் 6:9,10). ✞

# ஏலியின் குமாரர்கள்

## Sons Of Eli

*Bro. MAX PATTERJON*

ஏலி பதினைந்து நியாயாதிபதிகளில் பதினான்காவது நியாதிபதியாக இருந்தார். ஏலியின் குமாரர்களின் சுபாவத்தை 1 சாமுவேல் புத்தகத்தின் இரண்டு, மூன்று அதிகாரங்கள் நமக்கு வெளிப்படுத்துகின்றன. இவர்கள் பேலியாளின் மக்களாயிருந்தார்கள் என்று சொல்லப்பட்டுள்ளது. பேலியாள் என்பதற்கு மதிப்பற்றது என்று பொருள்.

**ஏலியின் குமாரர் கர்த்தரை அறியவில்லை (2:12).**

இயேசு கிறிஸ்து யோவான் 7:17ல் இப்படியாகச் சொல்கிறார். அவருடைய சித்தத்தின்படி செய்ய மனதுள்ளவனெவனோ அவன் இந்த உபதேசம் தேவனால் உண்டாயிருக்கிறதோ, நான் சுயமாய்ப் பேசுகிறேனோ என்று அறிந்து கொள்ளுவான். இந்த சித்தத்தை பிள்ளைகளுடைய மனதிலே புகுந்து அவர்களை அறியச் செய்வது பெற்றோர்களுடைய பொறுப்பாயிருக்கிறது ( நீதிமொழிகள் 22:6 ). ஒருவர் சத்தியத்தை அறியவில்லையென்றால் எப்படி விடுதலையாக்கப்பட முடியும்? ஏலியின் குமாரர் கர்த்தரை அறியாதபடியினால் துக்கப்படும்படியான பாவத்தைச் செய்தார்கள்.


**ஏலியின் குமாரர் கர்த்தருடைய பலியை அவமதித்தார்கள் (2:13-17)**

வேதாகமத்தில் வேறு சிலரும் தேவனுடைய ஆராதனையை லேசாக எடுத்திருக்கிறார்கள்; ஆதியாகமம் நான்காம் அதிகாரத்தில் காயீன், லேவியராகமம் பத்தாம் அதிகாரத்தில் நாதாபும், அபியூவும். ஒருவர் தேவனையோ, தேவனுடைய சித்தத்தையோ அறியவில்லையென்றால் அப்படிப்பட்டவன் தன் பார்வைக்கு சரியானபடி பெரும்பாலும் செய்கிறான் (நியாதிபதிகள் 17:6).

**ஏலியின் குமாரர் ஒழுக்கக்கேடானவர்கள் (2:22).**

வெளிப்படையாகவே அவர்களுக்கு இச்சையடக்கத்தைப் பற்றி ஒன்றும் தெரியவில்லை. அவர்கள் மாம்ச இச்சைகளுக்கு அடிபணிந்து பாலியல் குற்றங்களில் ஈடுபட்டார்கள். சிலர், இவர்கள் விக்கிரக ஆராதனையோடு சம்மந்தப்பட்ட காமக்களியாட்டுகளில் ஈடுபட்டதாக நம்புகிறார்கள். வெயிப்படையாகவே, ஏலியின் குமாரர் முற்றிலுமாகவே பத்துக் கட்டளைகளை மறந்துவிட்டார்கள். நாமும் நம்முடைய பிள்ளைகளை கர்த்தருக்கேற்ற சிட்சையில் வளர்க்கவில்லை என்றால் (எபேசியர் 6:4 ) நாம் நம்முடைய பிள்ளைகளை தேவனுக்கு மேலாக கனப்படுத்துகிறோம்(2:29). அப்படியிராமல், பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை கர்த்தருக்கேற்ற சிட்சையிலும், போதனையிலும் வளர்க்கும்போது பிள்ளைகள் தங்கள் தாயையும் தகப்பனையும் கனப்படுத்துவார்கள். ✞

## திருமறை தியானம்



**தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்**

| | | | | |
|---|---|---|---|---|
| தமிழன் | TV | திங்கள் | காலை | 7:10 மணி |
| தமிழன் | TV | வியாழன் | இரவு | 9:30 மணி |
| தமிழன் | TV | சனி | காலை | 7:15 மணி |

## அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

வேதாகம அஞ்சல்வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம் ஆம், வேதாகமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு 7 பகுதிகளாப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.


தொடர்புக்கு : இயக்குனர், அஞ்சல் வழி வேதாகமக் கல்வி
த.பெ. எண் 27, காங்கேயம் 638 701.
தமிழ்நாடு, இந்தியா.


பரிசுத்த வேதாகமத்தின் தெளிவான உபதேசத்தை வெளிப்படுத்தும் பல்வேறு தலைப்புகளில் வெளியிடப்பட்டுள்ள பல வண்ணங்களில் ஆன கைப்பிரதிகள் (Tracts) வேண்டுவோர் எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்



**E.Z.S. ராஜநாயகம் : 98427 30382**

**P.R. சுவாமி : 09844070763**

**P.C. பிலேமோன் ராஜா: 9244204420**

**B. அர்ஜுனன் : 994435 58041**

## சத்திய வழி



❖ பேச்சாளர் : **சகோ. P.R. சுவாமி (ஊழியர்)**


❖ ரேடியோ : ஞாயிறு to வெள்ளி 5.30 p.m.

❖ நிகழ்ச்சி : வேதாகமக் கல்வி & அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

<u>தொடர்புக்கு</u> : சத்திய வழி, அஞ்சல் பெட்டி 8405, பெங்களூர் – 560084.
போன் : 080-25463507, செல் : 098440 70763

---

## கிறிஸ்துவின் வசனம்




❖ பேச்சாளர் : **சகோ. B. அர்ஜுனன்**

❖ நம்பிக்கை TV : திங்கள் & சனி மாலை 7:30 – 7:45 மணி

❖ மாத இதழ் : கிறிஸ்துவின் வசனம்

❖ ரேடியோ : 31 Meter Band (சனி மாலை 5.30 5.45)
Srilanka all Asia Service



<u>ஆவிக்குரிய புத்தகங்கள் கிடைக்குமிடம்</u> ;
கிறிஸ்துவின் சபை, தபால் பெட்டி 5, வத்லகுண்டு – 624 206.
திண்டுக்கல் மாவட்டம். போன் : 04543 263278 செல் : 94435 58041

---

## கிருபையுள்ள வார்த்தை



❖ பேச்சாளர் : **சகோ. B. பிலேமோன் ராஜா**

❖ தமிழன்/நம்பிக்கை : ஞாயிறு காலை 6:45 & வெள்ளி காலை 6:15 மணி

❖ பைபிள் பாடங்கள் : அடிப்படை மற்றும் மேல்நிலை தபால் பாடங்கள்

❖ பார்வையற்றோருக்கு THE VOICE OF TRUTH ப்ரைல் இதழ் (தமிழ் / English)

❖ தமிழ் மாதப் பத்திரிக்கை : கிருபையுள்ள வார்த்தை

❖ **English Quaterly Magazine** : THE VOICE OF TRUTH INTERNATIONAL

❖ **J.C. School of Evangelism** : கிறிஸ்தவர்களுக்கான சுவிசேஷப் பள்ளி

<u>தொடர்புக்கு</u> : தபால் பெட்டி 15, அரசரடி, மதுரை – 625 016.
செல் : 92 4421 4424, 92 4431 4431, 92 4420 4420

## ‘ சத்தியத்தின் குரல் ‘ சந்தா விண்ணப்பம்

❑ “சத்தியத்தின் குரல்” காலாண்டு இதழுக்கு நான் சந்தாதாரராக இருக்க விரும்புகிறேன். இத்துடன் ரூ. 100 ( **4** இதழ்கள் ) (அ) ரூ. 200 ( **8** இதழ்கள் ) க்கான காசோலையை இத்துடன் இணைத்துள்ளேன். என் விலாசம் கீழே உள்ளது.

❑ “சத்தியத்தின் குரல்” காலாண்டு இதழுக்கு என்னுடைய .................................................. முன்னிட்டு ஒருதரம் வெகுமதி (A Gift) கொடுக்க விரும்புகிறேன். அதற்கான ரூ. ..................... காசோலையை இத்துடன் இணைத்துள்ளேன் என் விலாசம் கீழே உள்ளது.

❑ “சத்தியத்தின் குரல்” நூலை காலாண்டு தோறும் 25 பிரதிகள் பெறுவதற்காக ரூ. 500 அனுப்ப விரும்புகிறேன். அல்லது ஒவ்வொரு வருடமும் ரூ. 1500 அனுப்பி நான்கு காலாண்டுகளுக்கு 25 பிரதிகள் பெற்றுக்கொள்ள விரும்புகிறேன். (சபையார் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திப் பயன்பெறுங்கள்)

**(இந்தப் படிவத்தை உங்கள் காசோலையுடன் இணைத்து அனுப்புங்கள்)**

கடிதங்களும், காசோலைகளும், வரைவோலைகளும் அனுப்ப வேண்டிய முகவரி

**E.Z.S. ராஜநாயகம்**

“சத்தியத்தின் குரல்” காலாண்டு இதழ்

**288, தாராபுரம் ரோடு, காங்கேயம் – 638 701.**

**Ph : 04257 230030, Cell : 98427 30382, 99655 30385**

**E-mail : rajarichal@yahoo.co.in**

பெயர் : ______________________________

தெரு / ரோடு : ______________________________

நகரம் : ______________________ பின் கோடு : ______________

மாநிலம் : ______________________________